# தூவாசல்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

இதழ் - 01 ஏப்ரல் - யூன் 2016 விலை : ரூபா 100.00



எழு கலை இலக்கியப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரமேயில்லை நிலத்திலும்
வீரமாய் நிமிர்ந்தார்
உம் பண்பாட்டில் முழுதுமாய்
வாழ்வில் நிறைந்தார்
எம் முன்னோர்
அவர்கள்
வெட்டிச் சரிபட்டிருக்கலாம்
ஏராளமாய்
எனக்காக இருக்கிறது நிலம்
எனக்காகவே இருக்கிற வானம்
அவை போதும்
வானுயர நிமிர்வேன்
எனதேயான மிடுக்குடன்

– கைசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ம.செல்வின் 04

கை.சரவணன் 08

ந.மயூரரூபன் 09

யாத்திரீகன் 14

டானியல் சௌந்தரன் 15

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் 16

மருத்துவர் த. சத்தியமூர்த்தி 24

யதார்த்தன் 27

பி.எஸ்.பெருமாள் 28

குருதத் 44

இ. இராஜேஸ்கண்ணன் 46

சுவைஞன் சுப்பிரமணியம் 48

சு.க. சிந்துதாசன் 50

சி. கதிர்காமநாதன் 51

தி.செல்வமனோகரன் 56

தெணியான் 60

சி. சிவபாலன் 63

கிரிசாந் 65

த. அஜந்தகுமார் 66

கந்தையா சிறீகணேசன் 68

நாக.பத்மநாதன் 70

என்.கேசவன் 73

செ.விக்கினேஸ்வரன் 77

சித்தாந்தன் 79

ல. குமணன் 80

வேலணையூர் சுரேஸ் 88


ஓவியம்: கைசண், இணையம்

ஒளிப்படங்கள்: ந. மயூரரூபன், இளங்கீரன், இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளவாசல்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

ஏப்ரல் - யூன் 2016

முதன்மை ஆசிரியர்:
இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

இணைஆசிரியர்கள்:
ந.மயூரரூபன்
கை.சரவணன்

இதழமைப்பு:
எஸ்.சித்திரநாயகி

கணினி வரைகலை:
ச.கோபிதன்

அச்சுப்பதிப்பு
d'signarts

வெளியீட்டாளர்:
சி.நிசாகரன்

தொடர்பு:
அம்பலவாணர் வீதி
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்

thalavasalm@gmail.com

எழு கலை இலக்கியப் பேரவை

எழு கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக தளவாசல் காலாண்டிதழை கொண்டுவருவதில் மகிழ்ச்சி.

தமிழ் எழுத்துச் சூழலில் இன்று இயந்திரமயமாக்கப்பட்ட உண்மைகளும் நிறுவனமயமாக்கப்பட்ட பொய்களும் ஆள்பவர்களின் உளவியல் நிலைகளும் அதிகார நுண்ணரசியலுடன் கலந்திருப்பதை நாம் உணர்கிறோம். குறிப்பாக பெண் இழிவு, ஆய்ந்தறியாமை, கேவலப்படுத்தல், தோற்றங்களை நம்புதல், பால் வக்கிர உணர்வுகள், மாயைகள் மீதான பக்தி என்பன எமது இலக்கியச் சூழலை மறைத்தும் மறைப்பற்றதுமான அழகிய ஆடைகளாக மூடியுள்ளன. படைப்புக்கும் படைப்பாளிக்கும் இருக்கக் கூடிய சமூகப் பொறுப்பு வலுவிழந்து போகும் இந்தச் சூழலில் பொய்களை இனங்காண்பது அவசியமாகிறது. உண்மையின் தோற்றங்களைக் கட்டுடைப்பதும் தேவையாகிறது.

எமது சமூகத்தில் புதிது புதிதான படைப்புகளும் எழுத்துவடிவங்களும் காலந்தோறும் உருவாகி வந்துள்ளன, வருகின்றன. அவ்வாறான எழுத்துகளுக்கும் அவற்றை வாசிப்பதற்கான அறத்திற்கும் தொடர்புண்டு. இங்கு படைப்புகளை, எழுத்துகளை நாம் புறந்தள்ள வேண்டிய தேவையில்லை. எனினும் அதனை உருவாக்குபவரின் அல்லது உருவாக்கும் குழுவின் கருத்துநிலை, அறம், நுண்ணரசியல் என்பன நமக்கு முக்கியமாகின்றது.

எமது சமகாலச் சூழல், எமது இருப்பு, பண்பாட்டுப் பெறுமானங்கள் என்பவற்றின் யதார்த்தம் தொடர்பாகவும் கேள்வியெழுப்பி நிற்கிறது. நாம் எமது அடையாளங்களைத் தொடர்ந்து அழிய விடப்போகிறோமா என்கிற கேள்வியுடன் அதன் அடுத்தகட்ட செயற்பாட்டுக்கு நாம் தயாராக வேண்டியதன் அவசியத்தையும் கூடவே பேசவேண்டியுள்ளது.

யுத்தசூழல் மௌனமாக்கப்பட்டதன் பின்பு எமது சமூகம், பல பிறழ்வுகளால் துண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு சிதைந்து போய்க்கொண்டிருக்கும் எமது சமூகத்திரளுக்கு அல்லது எதிரே நிற்கும் சின்னஞ்சிறிய குரல்களுக்கு நாம் ஏதேனும் வார்த்தைகளை வைத்திருக்கிறோமா?

இலக்கியம் பேசுகின்ற மரபு, நவீனம், பின்-நவீனத்துவம் என்பவற்றைக் கடந்து சமூக இயக்கத்திற்கான ஒரு பொதுத்தளத்தினை இலக்கியத்தினால் அவாவுவதே தளவாசலின் நோக்கம்.

நீங்களும் வாசல் கடந்து வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போருக்குப் பின்னான சமூகத்தின் மீளெழுச்சி யாருடைய பொறுப்பு ?

ம.செல்வின்

இலங்கைத் தீவில் கடந்த மூன்று தசாப்தங்களாக நீடித்த ஆயுதப் போராட்டமும் இராணுவ நடவடிக்கைகளும் ஓய்வுக்கு வந்த நிலையில் மீண்டும் ஒரு யுத்தத்தை தரிசிக்கும் மனவிருப்பினை வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் உட்பட இலங்கைத் தீவில் வாழும் பெரும்பான்மையான மக்கள் எவரும் தற்போது கொண்டிருக்கவில்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" மத்திய அரசினதும் மாகாணசபையினதும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் வள ஒதுக்கீடுகளிலும் மாத்திரம் தங்கிநின்று தமிழ் மக்களின் மீளெழுச்சியை விரைந்து உருவாக்குவது சாத்தியமா? மாற்றுத் தெரிவுகள் யாவை? யார் இவற்றை முன்னெடுப்பது? "**

தமிழ் மக்களுக்கு அதிகபட்ச அரசியல் உரிமைகளைக் கோருபவர்கள் கூட பிளவுபடாத நாட்டினுள் இரண்டு தேசிய இனங்களின் தாயகங்கள் என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் எல்லைவேலிகளால் பிரிக்கப படாத நிலப்பரப்பினுள் தமிழ்மக்கள் சிங்கள மக்களுடனும் முஸ்லீம் மக்களுடனும் அயல வர்களாக வாழவேண்டிய சூழ்நிலையினை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்பவர்களாகவே உள்ளனர்.

இத்தகைய யதார்த்தத்தில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அரசியல் வன்முறைக்கும் அபிவிருத்தி புறக்க ணிப்புக்களுக்கும் பொருளாதார பாராபட் சத்திற்கும் முகம்கொடுத்து 2009இல் பேர ழிவுகளைச் சந்தித்த வடக்கு கிழக்கு மக்களின் மீளெழுச்சி என்பது மிகவும் வரையறு க்கப்பட்ட கால அட்டவணையினுள் ஏனைய சமூகங்களுக்கு சமானமான கட்டி யெழு ப்பப்பட வேண்டிய அவசியமும் அவசரமும் தமிழ்மக்களாலும் அவர்களது அரசியற் தலைவர்களாலும் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளாலும் சமூக ஆர்வல ர்களாலும் கற்றோர் மற்றும் புத்தி சீவிக ளினாலும் நிர்வாகத் துறையினராலும் சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றதா என்பதனை தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ச்சமூகத்தின் இன்றைய நிலை :

நீண்டகால இடப்பெயர்வும் ஏதிலி வாழ்க்கையும் வடக்கு கிழக்கு மக்களின் சமூக கட்டமைப்பினையும் வலையமைப்பினையும் முற்றாக தகர்த்துள்ளது. சமூக ஒழுக்கமும் கூட்டுப் பொறுப்பும் முதியோரைக் கனம் பண்ணும் பண்பும் குறைவடைந்துள்ளது. மீளக் குடியமர்வுக்கு தமது கிராமங்களுக்கு திரும்பி வருகின்ற குடும்பங்கள் பெருமளவில் இரண்டாம் தலைமுறைகளின் குடும்பங்களாக இருப்பதனால் தமது பாரம்பரிய கிராமத்தினுள்ளேயே அந்நியர்கள் போன்ற உணர்வு மேலோங்கி காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

நீண்டகால இடப்பெயர்வும் தொழில்செய் புலங்களிலிருந்து விலகி வாழ்ந்தமையும் காரணமாக பாரம்பரிய கைவினைத் தொழில்திறன்களும் சிறப்புத் தேர்ச்சிகளும் இழக்கப்பட்டுள்ளது. தொழில் ஒழுக்கம் கூட மிகவும் தாழ்வடைந்து காணப்படுவதோடு இளம் தலைமுறைத் தொழிலாளர்களிடையே தொழில்சார் அக்கறையும் பொறுப்புணர்வும் இன்னமும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. இதனால் பாரி யளவிலான மூலப்பொருட்கள் விரையமும் தேவையற்ற காலநீட்சியும் தரமற்ற வேலையுமாக பெருமளவு நிதி வீணாகிச் செல்கின்றது.

அதிகளவிலான வீடமைப்புக்கும் கட்டுமான பணிகளுக்குமாக மணல் மரம் போன்ற மூலப்பொருட்களை தேடும் முயற்சியில் வடக்கின் இயற்கைவளம் மிகவும் மோசமாக சிதைக்கப்பட்டுக் கொண்டி ருப்பதனை கட்டுப்படுத்தவும் மூலப் பொருட்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சந்தையில் நியாய விலையில் கிடைப்பதனை உறுதிப்படுத்தவும் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் தெளிவற்றதாகவே உள்ளது.

தனிமனித நடத்தைப் பிறழ்வுகளும் வறுமையும் கட்டற்ற சுதந்திர உணர்வும் வீங்கிப் பெருத்த தேவைகளும் பெண்கள் குழந்தைகள் ஆகியோரின் பாதுகாப்பினையும் சுதந்திரமான நடமாட்டத்தையும் முற்றாக கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. புலம்பெயர்ந்து வாழுகின்ற உறவினர்களின் பண உதவிகள் தொழில் முயற்சிகளைக் கட்டியெழுப்பிய அளவினை விட பலமடங்கு அளவிற்கு உள்ளூர் மக்களின் நுகர்வுக் கலாசாரத்தை ஊதிப் பெருக்க வைத்து குற்றச் செயல்களுக்கும் சமூகத்தினுள் மிகவும் கூர்மையான பொரு ளாதார ஏற்றத் தாழ்வுகளையும் தோற் றுவித்துள்ளது. இதனால் சார்பு ரீதியான வறுமையுணர்வும் ஒப்பீட்டு அடிப்படையில் வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்யும் போட்டியும் சமூக வன்முறை, களவு, கொள்ளை, வழிப்பறி என அதிகரித்துச் செல்கின்றது.

எண்ணிலடங்காத மதுபான கடைகளும் மதுச்சாலைகளும் போதையூட்டும் பொருட்களின் கட்டற்ற விநியோகமும் குடி தண்ணீர் போத்தல்களின் வர்த்தகமும் வட பகுதியின் பொருளாதாரத்தை பெருமளவில் சூறையாடுவதனையும் பொதுமக்களும் இளந் தலைமுறையினரும் மிகவும் ஆபத்தான நுகர்வுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தினுள் சிக்கவைக்கப்படுகின்றனர் என்பதும் இவற்றிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் மாற்றுத் தேடல்களும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

யுத்தமும் இடப்பெயர்வும் காரணமாக வெளியேறி பல வருடங்களாக மாற்று இடங்களில் வாழ்ந்த மக்கள் தங்களது வாழ்க்கை முறையினை வாழ்விட சூழல்களுக்கு ஏற்ப மாற்றி தங்களையும் தங்கள் வாழ்வாதார முயற்சிகளையும் தக்கவைத்துக் கொண்டனர். இத்தகைய நிலையில் கல்வி என்பது எல்லாச் சூழ்நிலைகளிலும் பெறுமதியான விடயமாக உணரப்பட்டமையினால் அதிகளவான குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை நகர் சார்ந்த அல்லது தாங்கள் விரும்பிய பாடசாலைகளில் சேர்த்து கற்பித்து வருகின்றனர்.

அதேபோன்று பெற்றோரும் இளந்தலைமுறையினரும் நகர் சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் வாழ்க்கை வசதிகளுக்கும் சந்தை மற்றும் சேவைகளுக்கும் தங்களை இசைவாக்கம் செய்துள்ள நிலையில் அடிப்படை வசதிகள் தொழில் வாய்ப்புகள் பாடசாலைகளின் வளங்களையும் வசதி களையும் தரமுயர்த்தும் முயற்சிகளின்றி மக்களை மீளக் குடியமருமாறு போருவது எந்தளவிற்கு பொருத்தமானது? இங்கு கோழியா முட்டையா முதல் வந்தது என்ற முடிவற்ற விவாதம் போல் போதியளவு மக்கள் மீள் குடியமர்ந்தால்தான் சேவைக் கட்டமைப்புக்கான மூலதனத்தையும் ஆளணி வளத்தையும் அதிகரிக்க முடியும் என்ற வாதமும் வசதி வாய்ப்புக்களின்றி எவ்வாறு அங்கு சென்று குடியேறுவது என்ற மக்களின் கேள்வியும் தொடர்ந்துகொண்டே செல்கின்றது. இதனால் மீள்குடியேற்றம் என்பது நகர்சார் வசதிகளுக்கான நாளாந்த விலையினைச் செலுத்த முடியாத மக்களின் தெரிவாக இருக்க நிரந்தர மாதாந்த வருமானமும் புலம்பெயர் உறவினரின் காசாதார பொருளாதார பலமும் உடையவர்கள் தொடர்ந்தும் நகரங்களை சார்ந்து வாழுகின்றனர். அத்துடன் மீள்குடியேற்ற பிரதேசத்தினுள்ளிருந்து புலம்பெயர்ந்து வாழும் குடும்பங்களினதும் நகரம் சார்ந்து வாழுபவர்களின் காணிகளும் தொடர்ந்தும் பற்றைக்காடுகளாகவும் தரிசு நிலங்களாகவும் காணப்படுவது மீளக் குடியமர வந்துள்ள குடும்பங்களின் பாதுகாப்பினை மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. துப்புரவு செய்து பராமரிக்கப்படாத காணிகள் பாம்புகள், விசஜந்துக்கள் ஆகியவற்றின் உறைவிடமாகவும் சமூக விரோதக் காரணிகளின் மறைவிடமாகவும் இயற்கை வளங்களை சூறையாடி விற்பவர்களின் இலக்காகவும் மாறியுள்ளது.

இவ்வாறு வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை பட்டியலிட முயற்சித்தால் அது இக்கட்டுரையினை மிகவும் விரிவாக்கி விடும். இங்குள்ள மிகப்பெரிய வினா யாதெனில் இவற்றுக்கெல்லாம் தீர்வுகாணும் பொறுப்பு யார் கையில் என்பதே.

அ) தமிழ்ச் சமூகத்திடம் தனது மீளெழுச்சி பற்றிய கூட்டுச் சிந்தனை உண்டா?

ஆ) அரசியற் தீர்வு என்ற மாயமான் கையில கப்படும் வரை மக்களின் மீளெழுச்சிக்கான முயற்சிகள் தாமதிக்கப்பட வேண்டுமா?

இ) முழுமையான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த வல்வெட்டித்துறை நகரசபையினையே சிறப்பாக செயற்படுத்த முடியாமல் முடக்கிய தமிழ மக்களின் அரசியற் தலைவர்களினால் தனியாக மக்களின் மீளெழுச்சிக்கு தலைமைதாங்க முடியுமா?

ஈ) மத்திய அரசினதும் மாகாணசபையினதும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் வள ஒதுக்கீடுகளிலும் மாத்திரம் தங்கிநின்று தமிழ் மக்களின் மீளெழுச்சியை விரைந்து உருவாக்குவது சாத்தியமா? மாற்றுத் தெரிவுகள் யாவை? யார் இவற்றை முன்னெடுப்பது?

உ) எமது புத்திசீவிகளும் கற்றறிந்தோரும் தொழிற்துறையாளரும் தங்களைச் சுற்றி தாங்களே பின்னியுள்ள வலைகளை அறுத்துக் கொண்டு வெளியேவந்து சமூகத்திற்காக ஒன்றிணைந்து சிந்தித்து செயற்படுவது எப்போது?

ஊ) பெருமளவு படித்த மனிதவளத்தை உள்ளீர்ந்துள்ள அரசாங்க பொது நிர்வாகத் துறையின் அலுவலர்களின் ஆளுமையினையும் ஈடுபாட்டையும் சமூகக் கடப்பாட்டையும் நினைவூட்டி வலுவூட்டுவது யார்? யுத்தத்தால் பாதிக்கப்படாத தென்பகுதி மக்களின் நலன்களை முதன்மைப்படுத்திய அரச வேலைத் திட்டங்கள் பயிற்சிநெறிகள் சுற்றறிக்கைகள் போருக்குப் பின்னான அபிவிருத்தியையும் சமூக மீளெழுச்சியையும் தலைமை தாங்கும் சிறப்புத் தகைமையை வடக்கு கிழக்கிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத்துறையினருக்கு வழங்கக்கூடியதாக இதுவரை இல்லை. அப்படியானால் அதனை யார் செய்வது? எல்லாப் பொறுப்புக்களையும் அரசாங்கத்திடமும் மாகாண சபையிடமும் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களிடமும் விட்டு விட்டு வாய்மூடி மௌனிகளாக சமூகம் இருப்பதை எத்தனை காலத்திற்கு அனுமதிப்பது?

எ) யுத்தத்தால் சிதைவடைந்த சமூக நிறுவனங்களையும் கிராமங்களின் தற்சார்பு நிலையையும் சமூகப்பாதுகாப்பு பொறிமுறையினையும் மீளவும் கட்டியெழுப்பும் வலுவினை உள்ளூர் சமூகங்களுக்கும் அவர்களின் நிறுவனங்களுக்கும் எப்போது கிடைக்கும்? யார் அதனை முன்னெடுப்பது?


ஏ) புலம்பெயர் சமூகத்தின் வளமும் பலமும் தாயக மக்களின் ஆளுமை ஆற்றல் தொழிலாண்மை நிறுவன உருவாக்கம் மக்கட் தொகைப் பெருக்கம் பொருண்மிய மேம்பாடு ஆகியவற்றிற்காக ஒருங்கிணைப்பதற்கான தலைமைத்துவத்தை யார் எப்போது எப்படி எங்கே முன்னெடுப்பது?

ஐ) சமூகத்தினை இன்று அச்சுறுத்தும் சமூக விரோத காரணிகள் வெளிக்காரணிகளால் தூண்டப்படுகிறது என்று மற்றவர்களை நோக்கி சுட்டுவிரலை நீட்டிக்கொண்டு எத்தனை காலம் தப்பித்து வாழ்வது? காவற்துறையும் நீதிமன்றும் மட்டும்தான் இதற்கு தீர்வா? சமூகமும் குடும்பங்களும் பணத்தை இளந் தலைமுறையினரின் அனாவசிய தேவைகளுக்கு வீசியெறியும் புலம்பெயர் பரோபகாரிகளும் மதுபானக் கடை உரிமையாளர்களும் போதைப்பொருட்கள் விநியோகிக்கும் உள்ளூர் குடிமக்களும் அவர்களை பாதுகாக்கும் சட்ட மேதைகளும் அரசியல்வாதிகளும் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் அமைதிகாக்கும்அறிவுசீவிகள் ஆகியோர் பொறுப்பில்லையா?

ஒ) பத்திரிகைகளும் இலத்திரனியல் ஊடகங்களும் கண்ணியமான முறையில் சமூகத்தின் மீளெழுச்சிக்கான பாத்திரத்தை வீரியத்துடன் முன்னெடுக்க முன்வருமா?

ஓ) அரசியற் தீர்வு வந்தால் அல்லது மாகாண அரசுக்கு காவற்றுறை அதிகாரம் கிடைத்தால் எல்லாமே சரிவரும் என்ற திண்ணைப் பேச்சிலிருந்து எப்போது நாம் விடுபடுவது?


இத்தகைய பல வினாக்களுக்கு விடைகாண



வேண்டிய திறந்த சுதந்திரமானதும் கண்ணியமானதுமான விவாதக் களத்தையும் செயற்படு தளத்தையும் இக்கட்டுரை முன்மொழிகின்றது. ●

# மாட்டெலும்பு (கடவுள் சொன்ன குறுங்கதை)

கை. சரவணன்



கால் நூற்றாண்டுத் தனிமை துறந்து
கணப்பொழுதேனும்
உன்னுடன் உரையாட முடிந்துள்ளது.

மண்டபத்துள் சிதிலப்பட்டு
சிந்தியுள்ள எலும்புகள்
கோயில் மாட்டுடையவை.

கட்சி சார்ந்தியங்குகிறாய்
கேட்கும்பொறுமை உனக்கிருக்காது
தலைமை சொல்வது எவ்வளவாயினும்
அவ்வளவும் கேட்குமளவிற்கு
சுருக்கச் சொல்கிறேன்.

அது இழந்தவை பல.
முதலில்
சந்ததியை....
உலவும் துணிவை....
நாவின் ஈரலிப்பை....
பின்னர் உயிரை
கண்களைக் காக்கைக்கு
குடலை நாய்களுக்கு
சதையை.... நிணத்தை தோலை....
அடுத்தடுத்துத் தொடராய்
எலும்பிலொட்டிய நிணத்தை.
இறுதியாய்
எலும்பு மச்சையில் இறுதிக் கசிவையும்.


இவற்றை
ஊர் போனபோதிருந்த
பேசாத் துணை
எனக்காக விட்டுப் போயிருக்கிறது.

என்னைப் பிரியாதிருந்த
ஒற்றைச் சீவன்....
அதன் துணையறுந்தும்
கால் நூற்றாண்டாயிற்று.

உலர்ந்த மாட்டெலும்புகள் மட்டும்
பேசாத் துணையாயிற்று மீண்டும்.
இன்றுவரையும் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந. மயூரரூபன்

# கைலாசபதி மேற்கட்டுமான மார்க்சியம்

ஈழத் தமிழ் இலக்கிய அல்லது தமிழ் சமூக சிந்தனை வெளியில் முனைப்பு மிக்க கருத்தியல் பரிமாற்றத்திற்கான வெற்றிடத்தை உணருகின்ற காலத்தில் நாம் இருக்கிறோம்.

எங்களிடம் கற்கை முறையிலான ஒருவித மேலாண்மைக் கருத்தியல் புலம் ஆங்காங்கே வெளிப்பட்டிருப்பதையும் கண்டு கொள்கிறோம்.

இது கைலாசபதி தொடர்பான ஒரு துண்டுப்படுத்தப்பட்ட பார்வையாகத்தான் இருக்கப் போகிறது.

ஆய்வு முறையியல்களால் வடிவமைக்கப் பட்ட ஒன்றல்ல இது. அதற்கு நிறைந்த உழைப்பும் காலமும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு முறையியலும் தேவை.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் இறந்து 33 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. ஏறக்குறைய விடுதலைப் போராட்ட காலமும் இதுதான். அதேபோல தமிழ்ச் சூழலில் நிலவிய கருத்தியல் செயல் முனைப்புக்கான இடைவெளியும் இதுதான்.

பேராசிரியர் கைலாசபதியை எமது சூழல் இரண்டு வகைகளில் வாசிக்க முனைகிறது.

1. கைலாசபதியை வழிபடும் மனநிலை
2. எதிர்மறை விமர்சன மனநிலை

உண்மையில் சமூகவியல் ஆய்வுப் பொருளுக்கான இரண்டு எதிர்நிலை ஆய்வு அணுகுமுறைகள் உண்டு.

1. Positivist approach
   அதனடியான functionalism
2. Conflict approach
   அதாவது Marxism

கைலாசபதி சமூகவியல் ஆய்வுப் பொருண் மயாக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

பேராசிரியர் கைலாசபதி ஈழத்து தமிழ் இலக்கிய ஆய்வுப் புலத்தில் மிக முக்கிய கருத்தியல் ஆளுமையாக இருப்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஈழத்து இலக்கியத்தின் திசையறி கருவியாக செயற்பட்டவர் என்ற பதிவும் உண்டு.

கைலாசபதி தமிழ் ஆய்வுப் பரப்பில் மார்க்சிய அணுகுமுறையை மிகத் திட்டமாக முன்னெடுத்தவர். 1950 களின் நடுப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து அவரது மறைவுக் காலம் (1982 டிசம்பர் 2) வரை தமிழரின் சமூக பண்பாடு, வரலாறு, கலை, இலக்கியம், அரசியல் எனப் பல துறைகளில் தொடர்ந்து தனது பார்வையை எழுத்துக்களாக்கியவர்.

பேராசிரியர் கைலாசபதியின் ஆய்வுப் பரப்பு பல அடுக்குகளாலானது. குறிப்பாக இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம், தல புராணம், சித்தர் பாடல் எனவும் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் எனவும் இலக்கிய செயற்பாடு, கொள்கைகள் எனவும் சமூகம் சமூகக் கூறுகள் ஆய்வின் தத்துவச் சார்பு எனவும் அவற்றினை கூறலாம்.

"கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நான் எழுதி வெளிப்பட்டிருப்ப வற்றைப் பார்க்கும் பொழுது அவையெல்லாம் ஏதோ ஒரு வகையில் சமுதாய தொடர்பமைவு உள்ளனவாக இருக்கக் காண்கிறேன்"

- சமூகவியலும் இலக்கியமும்

மரபார்ந்த தொடர்ச்சியைப் பேணும் இலக்கியச் சூழலில் சமூக விஞ்ஞானம் தொடர்பான அக்கறை முனைப்பாய் எழாத காலப்பகுதியில் கைலாசபதி சமூகவியல் தொடர்பான சிந்தனை கொண்டுள்ளார், அதன் பின்னணியில் எழுதியிருக்கிறார் என்பதை விட அவருடைய எழுத்துகள் தற்கால தமிழ் சமூகவியல் அறிவுப் பரப்பு கொண்டிராத கருத்தியல் வன்மையைக் கொண்டிருக்கிறது என்பது கைலாசபதியின் புலமையை காட்டுவ தாகவே அமைகிறது.

சமூகம் எவ்வாறு இயங்குகிறது என்பதைக் கண்டறியும் சமூகவியல் தொடர்பான விளக்கத்தினை மிக எளிமையாகக் கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

கைலாசபதியின் கருத்துருவப் பின்னணி எல்லோரும் குறிப்பிடுவது போல மார்க்சிச சார்புடையது.

இந்திய ஈழ சிந்தனைப் புலத்தில் ஐம்பதுகளில் மார்க்சியத்தின் செல்வாக்கு அதிகம் இழைந்துள்ளதை கவனிக்க முடியும். ரஷ்யா, சீன மார்க்சிய அடிப்படைகளால் இச் சிந்தனை மரபு துண்டாடப்பட்டு நகர்ந்திருப்பதையும் அறிகிறோம்.

அந்தவகையில் பேராசிரியர் கைலாசபதியின் மார்க்சிய கருத்துருவம் சீனச் சார்பு மார்க்சிய சித்தாந்தத்தினால் கட்டுண்டது. கைலாசபதி ஜேம்ஸ் தொம்சன் எனப்படுகின்ற மார்க்சிய ஆய்வு முறைப் பேராசிரியரின் மாணவர். இங்கிலாந்தின் மார்க்சிய ஆய்வு முறை கற்பிப்பவர்களில் முதன்மையானவர் தொம்சன். (சிவத்தம்பி, ஆர். அனந்தமூர்த்தி ஆகியோரும் இவரின் மாணவர்கள்) 'ஈஸ்கைலசும் ஏதென்சும்', வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய ஈஜியன், 'முதல் தத்துவஞானிகள்' ஆகியவை இவரது சிறந்த வரலாற்றுப் படைப்புகள். மார்க்சிய அறிவுக்காக 'மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை', 'முதலாளியமும் அதன் பிறகும்', 'மனிதசாரம்', 'மார்க்சியமும் கவிதையும்', 'சமயம் பற்றி' ஆகிய சிறு நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இங்கிலாந்தில் சீனக் கொள்கை ஆய்வுக்குழுவின் அமைப்பாளர்களில் ஒருவர், அதன் சஞ்சிகையான 'ப்ராட்ஷீட்' இன் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர்.

தொம்சன் தொடர்பான இந்த விபரத் திரட்டிலிருந்து கைலாசபதியின் ஆய்வு அணுகுமுறை வடிவம் கொண்ட வகையினை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

சமூகத்தையும் சமூக அமைப்பையும் உள்ளவாறே கொண்டு அதன் இயக்கத்தினை கூறுகளாக விபரிப்பது சமூகவியல்.

பொருளாதாரப் பிரச்சினைகளையோ உறவுகளையோ பிரச்சினைகளாகக் காண விரும்பவில்லை என கைலாசபதி சமூகவியல் தொடர்பான விமர்சனத்தை முன்வைக்கிறார்.

அது அவருடைய காலப்பகுதியில் இருந்து எழுந்த கருத்துக்களின் அடிப்படையிலானது.

உண்மையில் சமூகவியல் என்பது பல்வேறு வியாக்கியானங்களால் ஆனது. சமூகவியல் மட்டுமல்ல எந்தவொரு சிந்தனைப் பரப்பும் வெவ்வேறு வியாக்கியானங்களால் சூழப்பட்ட தாகவே அமையும்.

பொதுவாக சமூகவியல், மனிதனின் - இணைந்த குழுவின் இயல்பினை, இணைப்பின் வேறுபடும் அம்சங்களை, அதன் இயங்கு நிலையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை, அவற்றுக்கான காரணிகளை கண்டறியும் அறிவுத் துறையாக உணரப்படுகிறது.

இங்கு மார்க்சியம் என்பது ஒரு வகை அணுகுமுறையாகப் பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் சார்புநிலை கடந்து புறவயமாக ஒரு பிரச்சினையை அணுகுகின்ற அறிவுப்புலமே விஞ்ஞான முடிவுகளுக்கு செம்மை தரும் என நம்பப்படுகிறது.

மார்க்சியம் எனும் ஒரு அணுகுமுறை புற நிலையிலிருந்து பார்க்கும்போது ஒரு சாராரின் நம்பிக்கை. ஒரு சமூகக் குழுவால் புறந்தள்ளப்படுவதாகவும் அமையும்.

இது ஒரு விடயம்.

அவ்வாறு அமையும்போது மார்க்சியத்தை முழுமையான சமூகவியலாக அடையாளங் காண்பதென்பது பிரச்சினையாகிறது. கைலாச பதியும் மார்க்சிய சார்பு நிலையிலிருந்து இதனையே செய்கிறார். இதனால் அவரது சமூகவியல் தொடர்பான சிந்தனை பிரச்சினை யாகிறது. இதனால் கைலாசபதியிற்கு கொடுக்கப்படுகின்ற சமூகவியல் தளம் எதிர்நிலை விமர்சனத்திற்குள்ளாகிறது.

கைலாசபதி இரண்டு விதமான சமூகவியல்களை அடையாளங் காண்கிறார்.

1. சோசலிச கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டது.
2. சோசலிச விரோத நெறியில் வளர்ந்தது.

இங்கு முதலாளித்துவ சமூகவியல் என்கிற ஒரு சொல்லை கைலாசபதி பயன்படுத்துகிறார்.

உண்மையில் கைலாசபதியின் எழுத்துக் களைப் பார்க்கிறபோது அது எந்தத் தளத்தினதாக இருந்தாலும் மார்க்சிச அடிப்படைகளையும் அதன் குறிச்சொறி களையும் எம்மால் தனித்துவமாக அடையாளங் காணமுடிகிறது.

கைலாசபதியின் தனித்துவம் மார்க்சிச சார்புநிலை எழுத்து என்பதில் வேறு கருத்துகள் இருக்கப் போவதில்லை.

சமுதாய ஆய்வும் இலக்கிய ஆய்வும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை என்பது கைலாசபதியின் நம்பிக்கை. அவரது ஆய்வு அணுகுமுறைகளில் பிரதிபலிப்புக் கோட்பாடு, சோசலிச யதார்த்த வாதம் என்பன மிக முக்கியமானவை.

ஒரு படைப்பிலிருந்தும் சமூக அடிப்படைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற சிந்தனை விவாதத்திற்குரியது.

படைப்பு எப்போதும் உண்மையல்ல. ஆயினும் உண்மைக்கு நெருக்கமாக இருக்க முடியும்.

அந்தவகையில் ஒரு சமூகத்தின் இயல்பு படைப்பில் பிரதிபலிக்கலாம். எனினும் படைப்பின் இயல்பில் குறித்த சமூகத்தை அடையாளங் காண்பது அபத்தமானது.

கைலாசபதியினுடைய சிந்தனைகள், எழுத்துகள் ஈழத்து சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆய்வறிவியல் செயற்பாட்டிற்கு ஆதாரமாக இருக்கின்றது என்கிற யதார்த்தத்தை கடந்து சில முரண்படும் புள்ளிகளினூடாக கைலாசபதி என்கிற கருத்துருவம் எவ்வாறு தோற்றம் பெறுகிறது எனப் பார்ப்பது சில விளக்க ங்களைக் கோருவதாக அமையமுடியும்.

கைலாசபதி பாரம்பரியம் தொடர்பாக குறிப்பிடுகின்றபோது,

ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு பாரம்பரியம் உண்டு, காலங்காலமாக அச் சமூகத்தாரால் நம்பப்பட்டும் பேணப்பட்டும் வந்த விழுமியங்கள், மதிப்பீடுகள், பெறு மானங்கள் என்பவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒழுகலாறும் செயல்களுமே பாரம்பரியத்திற்குப் பொருள் தருகின்றன.

பாரம்பரியம் ஒவ்வொரு காலப் பகுதியிலும் குறிப்பிட்ட சமூகத்தாரைப் பாதிப்பது போல ஒவ்வொரு காலப்பகுதியில் சிலபல புதிய பெறுமானங்களையும் பெறுகிறது.

இங்கு கைலாசபதியின் அல்லது ஆய்வாளனின் புறநிலைப் பார்வை தெரிகிறது. அதாவது, பாரம்பரியத்தை ஒரு சமூக/ காலச் செயலாக பாத்திரமேற்கச் செய்கிறது. இன்னொரு வகையில் பொருண்மைகளின் இயல்புகளை காரணியாக்கும் நிலை இதுவாகும்.

இதனை இங்கு குறிப்பிடக் காரணம்; கறாரான மார்க்சிய விமர்சகராக அடையாளங் காணப்படுகிற அனைத்து வெளிப்பாடுகளிலும் மார்க்சிய இயல்பு தெரிகிற மார்க்சியக் கண்ணோட்டத்தில் பாரம்பரியத்தின் பின்னாலுள்ள சமூகக் குழுவை/ அதிகாரத்தை/ மேலாண்மையை/ உயர் குழாத்தை அடையாளங்காணத் தவறியது ஏன் என்கிற கேள்வி எழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்று நிலவிவந்த வழக்கத்திற்கு மாறாக ஜமீன்தார்களையோ, ஆதீனகர்த்தாக்களையோ அல்லது பரம்பரைப் பிரபுக்களையோ மாத்திரம் நற்காரியங்களுக்கு நம்பியிராமல் சாதாரண கல்வியறிவுடைய மக்களிடமும் பொதுக்காரியங்களுக்கு உதவி கோரினார் நாவலர்" எனக் கைலாசபதி நாவலரால் ஏற்படுத்தப்பட்ட சிறிய சமூக அசைவைக் குறிப்பிடுகிறார். சாதாரண கல்வியறிவுடைய பொதுமக்கள் என்பது அதிகாரமற்ற உயர் சாதியினர் எனக் கருதப்படும் வெள்ளாளர் எனக் கொள்ள முடியுமென நினைக்கிறேன்.

இல்லாவிடின் 'கீழோர்' என கைலாசபதி குறிப்பிடக்கூடும். (வெகுசனம் தொடர்பான விளக்கத்தில் கீழோர் எனும் பதத்தை கைலாசபதி பயன்படுத்துகிறார்)



இந்தச் சிறிய விடயத்திலிருந்து கைலாசபதியின் கருத்தியல் தளம் தொடர்பான ஒரு விமர்சனத்தை ஆரம்பிக்க நினைக்கிறேன்.

மார்க்சிய சித்தாந்தத்தில் அதி தீவிர பற்றுக்கொண்ட கைலாசபதி; மார்க்சியம் சொல்கிற அதிகாரம் - ஏகாதிபத்தியம் - ஆக்கிரமிப்பு தொடர்பான எவ்வாறான கருத்து நிலையுடனிருந்தார் என்ற கேள்வி உண்டு.

குறிப்பாக ஈழத்தில் சாதியம் தொடர்பான கைலாசபதியின் எதிர்வினை என்ன?

நுஃமானின் கட்டுரையிலிருந்து, டானியல், டொமினிக் ஜீவா போன்றோருடன் நெருக்கமான உறவைப் பேணியதாக தெரிய வருகிறது. கோயில் நுழைவுப் போராட்டம் தொடர்பான விடயங்களிலும் கருத்தியல் ஆதரவுத் தளத்திலிருந்திருக்கிறார் என அறிய முடிகிறது.

இனப் பிரச்சினை, தமிழ் தேசியம் தொடர்பான பிரச்சினை 80களின் பிற்பகுதியில் அதிக முனைப்புப் பெற்றாலும் இனத்துவ வேறுபாட்டின்/ துவேசத்தின் வெளிப்பாடு தொடர்பாக கைலாசபதி எவ்வாறு கருத்துநிலை கொண்டிருந்தார்.

58 இனக் கலவரம், தமிழாராய்ச்சி மாநாட்டில் சுட்டுக் கொள்ளப்பட்டமை என்பனவும் திட்டமிட்ட குடியேற்றங்களும் கைலாசபதியின் அறிகைக்குள் திகழ்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த இரண்டு வகையான சமூக - இன அரசியல் தொடர்பில் ஒரு மார்க்சிய அறிவியல் புலமை கொண்டவராக அறியப்படுகின்ற கைலாசபதி இத் தளத்தில் ஏன் தன்னுடைய மார்க்சிய இயல்பை வெளிப்படுத்த வில்லை என்கிற கேள்வி எழுகிறது.

ஒரு வகையில் கைலாசபதி தொடர்பாக முன்வைக்கப்படும் சில விமர்சனங்கள் கவனத்துக்குரியவையாகப் படுகின்றன.

"கைலாசபதி, மார்க்சியம் பற்றி என்ன நினைக்கிறார் என்று காண அதிகம் சான்றுகள் இல்லை, காரணம் அவர் மார்க்சியம் பற்றி விரிவாக ஏதும் எழுதியதாகத் தெரியவில்லை, ஆனால் மார்க்சிய விசாரணைகளை (மேற்கோள்களை) வேண்டிய அளவிற்கு கொடுத்தார். இயக்கவியல் பற்றிய கைலாச பதியின் பார்வை... 'இயற்கையின் இயக்கவியல்' எனும் நூலைச் சார்ந்ததாகவே இருக்கிறது"

-தமிழவன்

நாம் சமூகவியலை அறிகிறபோது; ஒரு பொருளை இரண்டு தளங்களில் அணுகு கிறோம்.
ஒன்று அதன் நிலைத்த / இயல்பான தோற்றம் - வடிவம்
இரண்டு அதன் இயக்கம்.

ஒரு பொருண்மை இந்த இரண்டு தளங் களாலும் பிணைந்ததாகவே அமைய முடியும்.

ஒரு மனிதரை - ஒரு சமூகப் பெறுமானம் கொண்ட ஆளுமையை அணுகுகின்ற போதும் இந்த இரண்டு தளங்களை நாம் உணரமுடியும்.

பேராசிரியர் கைலாசபதி என்கிறபோது,
அவரது காலம்
அவரது வாழ்விடம்
சாதி
அந்தஸ்து
கல்வி
தொழில்
பொருளாதாரம்
கருத்துநிலை
சமயம்
என்கிற நிலையில் தன்மைகளும் அந்த நிலையியல் தன்மைகளுக்கூடான கைலாசபதி என்கிற ஆளுமையின் இயக்கமும் கவனிக் கத்தக்கது. இன்னமும் ஆய்வு நிலையில் விவாதிக்கத் தக்கது.

பிளேட்டோ முதல் மார்க்ஸ் வரை சமூகம் பற்றிச் சிந்தித்தவர்களும் அந்தச் சிந்தனைகளை தொடர்ந்துவந்த காலங்களில் காலக் காவிகளாக இருந்தவர்களும் சமூக மாற்றத்தினை ஏற்படுத்த விரும்பினர்.

கைலாசபதியின் எண்ணங்களிலும் மாற்றத்திற்கான சில விடயங்களை கருத்தியல் நிலையில் காணமுடிந்தாலும் மார்க்சீயம் சொல்கிற அடிக்கட்டுமான மாற்றத்திற்கான இயங்கியலைக் காணமுடியவில்லை என்பது அவர் தொடர்பான அல்ல அவரது மார்க்சீயம் தொடர்பான பலவீனத்தை உட்புகுத்துகிறதோ என்கிற கேள்வி எழுகிறது.

எனினும் அவரது சமகாலத்தில் அவரது எழுத்துகளுக்கு அப்பால் அவரது செயற்பாடுகள் தொடர்பான பதிவுகள் பார்வைக்கு கிடைக்காமை அல்லது அவ்வாறான பதிவுகள் இல்லாமை கூட அதன் பலவீனமாக இருக்கமுடியும்.

எல்லா மார்க்சீய சிந்தனையாளர்களும் போலவே அன்ரனியோ கிராம்சியும் கருத்து நிலையை மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கிறார்.

மார்க்சீய கருத்து முதல் வாதிகள் உற்பத்தி சக்தி தொடர்பாகவோ உற்பத்தி உறவு தொடர்பாகவோ தாக்கமிக்க பார்வையைத் தருவதில்லை.

இது ஒரு வகை - மிதமான மார்க்சீய அணுகு முறையாகக் கருதப்படுகிறது.

கைலாசபதி மார்க்சீயத்தை அறிவு சார் கற்கைநிலையில் விடயத்தை விளக்குவதற்கான அல்லது அணுகுவதற்கான ஊடகமாகவே பயன்படுத்தியிருக்கிறார் என்கிற ஒரு பார்வை தவிர்க்க முடியாமல் ஏற்படுகிறது.

உண்மையில் கைலாசபதியின் மார்க்சிய இயங்கியல் தொடர்பான ஆய்வுகள் தேவைப் படுகின்றன. இவ்வாறான வாசிப்புகள் வெறு மனே பலமற்ற கருத்துக்கூறலாக மட்டுமே அமையமுடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்களின் சுயமரணம்



**யாத்ரிகன்**

பூக்கள்
சுயமரணம்
செய்து கொண்டிருக்கின்றன.

வெட்கம் உன்னைப்
பிடுங்கித் தின்ன
பூக்களை
நீ வெறித்தபடியிருந்தாய்.

இருண்ட வானம்
தனது இரகசியங்களை
தனக்குள்ளே
புதைப்பதைப் போல
அழகின்
அத்தனை இரகசியங்களையும்
நீ உன்னுள்ளே
புதைந்திருக்கிறாய்

பூக்கள்
சுயமரணம்
செய்து கொண்டிருக்கின்றன.

எழின் மீதான மாயை
பூக்களின் விழிகளை
குருடாக்கியிருந்தன.

விழிகளுக்குள்ளே
வெட்டும் வாளும்
நுதல் தனில்
குளிர் பிறையும்

வனப்பாய்த்தானிருந்தாய்.
உன் அழகுடன்
வெட்கித்துப்
போராடி போராடி
தோற்றுப் போய்
பூக்கள்
சுயமரணம்
செய்துகொண்டிருந்தன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரியும் காலம்

சாட்சியங்களின் பதிவுகள்
துல்லியமாக தெரிந்த போதிலும்
இன்னும் இன்னும்
இருளுக்குள் புதைந்து
மானிட நேசங்கள்
சிதைந்து கொண்டுதான்....

உயிர்ப்புடன் நாட்கள்
தொலைந்து போக
பொய்மைகளை துடைத்தெறிந்து
உண்மைகளும் துலங்க முடியாமல்
விரிகிறது காலம்

கனவுகளை மென்று
ஆயிரம் ஆயிரமாய்
உதிர்ந்த பூக்கள்
உதிராத மணங்களோடு
மறுபடியும் மறுபடியும்
தரிசனங்களாக காட்சிப்படுத்தப்படுகின்றன.

சுதந்திரத்தின் பெருமூச்சு
அண்ட வெளி எங்கும் பரந்து
பிரகாசமாய் தெரிந்தும்
கனவுகளின் அரும்பு
இன்னும் தூரத்தில்தான்! ●

டானியல் சௌந்திரன்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அட

__இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்__

காலையில் தேனீர் குடிக்கும் போதே மனைவி கமலம் தேனீருடன் “பணிஸ்கும்” தந்த படியால் காலைச் சாப்பாட்டுப் பிரச்சினை முடிந்துவிட்டது. இனி மத்தியானம் வரை சிக்கல் இல்லை. இடையில் வசதிப்பட்டால் பதினொரு மணிக்கு இன்னு மொரு தேத்தண்ணிக்கு வழி கிடைக்கும். அத்தி பூத்தாப் போல எப்போதாவது புதுக்குடியிருப்பு சந்திக்குக் கிட்ட இருந்த மதி உணவகத்திற்குப் போனால் ஒரு வாய்ப்பனோடு தேனீர் குடிப்பார் சிவராசா .

இப்போதெல்லாம் காலையில் எழும்பியவுடன் வேகப் பந்தாக செயற்படும் தன்மை போய்விட்டது. முன் விறாந்தை சாய்மனைக் கதிரையில் படுத்துக் கொண்டு முகட்டைப் பார்க்க நேரம் பழுத்துவிடும்.



காலை எட்டு மணிக்குப் பிறகுதான் அவர் தெருப் பக்கம் புறப்படுவார். வீட்டில் இருந்து புறப்பட்டவுடன் முதலில் மாரிய ம்மன் கோயில் தரிசனம். அம்மாள்தான் அவருக்கு கிட்ட இருந்தது. பிறகு பரந்தன் றோட் ஏறி இறங்கி கந்தசாமியார் கோயில் தரிசிப்பு எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலுக்குப் போறது. வயலைப் பார்த்துப் பார்த்து சிலிர்ப்பது. அதன் சுகத்தை காலையும் மாலையும் அனுபவிப்பது எல்லாம் இப்போது இல்லை.

அப்போது செம்மண் தெருவாய் புழுதியில் புரண்டு கிடந்த புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் மஞ்சள் பாலத்திற்கு அருகே அவருடைய வயல் இருந்தது.

அவரின் வாழ்க்கையையும் அவரைப் போன்ற வன்னியின் மைந்தர்களின் வாழ்க்கையையும் அது போன்ற வயல்கள் தான் சுமந்தன.

ஊதல் காற்றும், குளிர் பனியும் சிலிர்ப்பு மழையும், வரட்டும் வெய்யிலுமாய் வருடம் முழுவதும் அவர் போன்றவர்கள் வயலுடன் உறவாடி வாழ்வு பெற்றனர்.

விதைப்பின் பின்னர் துளிர் விடும் பசுமையும் கதிர்முற்றி தலை சாயும் நேரம் பளபளக்கும் செம்மஞ்சள் நிறத்தையும் கண்டு கன காலமாய் விட்டது.

செம்மண் தெருவாக இருந்த நீண்ட புதுக்குடியிருப்பு பரந்தன் தெரு இப்போது கார்பெட் தெருவாக மாறியுள்ளது. ஆனால் சிவராசாவுக்குத்தான் வயல் செய்யக் கூடிய உடல் வலுவும் மனோ பலமும் இல்லாமல் இறுகிப் போய்விட்டது.

இப்போது சிவராசரும் மனைவியும் தான் வீட்டில். பிள்ளைகள் இரண்டும் வெளி நாட்டில். பெரிய கல்வீடு மிகவும் கஸ்டப்பட்டு மகனும் அவரும் ஏனைய வேலையாட்களுடன் சேர்ந்து கட்டிய வீடு.

ஆனால் சோலையாக இருந்த வளவில் சிறு கொட்டிலும் முன்னால் மாலுமாக அப்போதைய வீட்டில் இருந்த சந்தோஷம் இப்போது இல்லை. எங்கு போனது அது. அதை யார் கொண்டு போனார்கள்.

***

சிவராசா இந்த விழாவுக்கு வந்தது தற்செயலாகத்தான். காலையில் வீட்டை விட்டு வெளிக்கிட்டு மாரியம்மன் கோயிலடியின் வாசலில் சைக்கிளை நிறுத்தி விட்டு வழக்கம் போல கும்பிட்டார். அவரது அடுத்த தரிசிப்பு கந்தசாமி கோயில்தான்.

கந்தசாமி கோயிலுக்குப் போவதற்காக பரந்தன் றோட்டில் ஏறினார். கார்பெட் றோட்டாக அகன்று படுத்திருந்த றோட்டின் இரண்டு பக்கமும் வெறுமை நிலவியது. முன்பு நெருவோடு ஒட்டிக் கொண்டிருந்த கொட்டில் கடைகளும் தகரக் கூரை வியாபார நிலையங்களும் சற்று தள்ளி மாற்றமெடுத்திருந்தன. தெருவில் முகரியில் கந்தசாமி அண்ணர் அகப்பட்டார். வேறு வழியில்லாமல் சைக்கிளை நிறுத்தியாயிற்று.

"எங்கையப்பா"

"நான் எங்கை போறது. கந்தசாமி கோயிலுக்குப் போட்டு பேப்பர் பார்க்கப் போகப் போறன்" என்றார் சிவராசா.

"பள்ளிக்கூடத்தடிக்குப் போகேல்லையோ"

"ஏனப்பா" ஆச்சரியமானார் சிவராசா.

"கனக்க வாகனங்கள் எல்லாம் வந்திருக்கு. கனபேர் வந்திருக்கினம். சாமான்களும் கனக்கக் கொண்டந்திருக்கினம். எல்லோருக்கும் நல்லாய் உதவி செய்யப் போயினமாம்"

"எல்லாரும் எண்டால்" சிவராசா கேள்வி கேட்டார்.

"சண்டையில் பாதிக்கப்பட்ட சனங்களுக்குத் தான்"

சிவராசா சிரித்தார். அதற்கு ஆயிரம் அர்த்தங்கள்.

"ஏன்டாப்பா சிரிக்கிறாய். வாவன் என்ன நடக்குதெண்டு பார்ப்பம்"

"அவசரப்படாத - எதெண்டாலும் விதானையார் சொல்லியிருப்பார் அல்லது எஸ்.எஸ்.ஓவாவது தகவல் சொல்லியிருப்பார்" என்றார் சிவராசா.

"இப்ப என்ன உனக்கு உதவி கிடைக்கப் போகுதெண்டே சொன்னனான். இந்தப் புதுக்குடியிருப்பில எங்களுக்குலிருந்தெரிஞ்ச காலத்தில இருந்து எத்தினை பேரின்டை ஆட்டத்தைப் பார்த்திட்டம். எத்தினை பேர் வந்து போட்டினம். நாங்கள் அப்பிடியே தான் இருக்கிறம். பிறகென்ன குழப்பம் - வா - ஒருக்கா என்ன நடக்குதெண்டு பார்ப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி தந்த உசாரில - "நீ முன்னுக்குப் போ - நான் கந்தசாமி கோயிலை கும்பிட்டுப் போட்டு வாறன்" என்றபடி தெருவை ஊடறுத்து கந்தசாமி கோயிலை நோக்கி சைக்கிளை தள்ளினார் சிவராசா.

கந்தசாமியர் அரை மனத்துடன் இரணைப்பாலை வீதியில் இருந்த சுப்பிரமணிய வித்தியாசாலையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

கோயிலடிக்குப் போய்விட்டு சிவராசா பள்ளிக்கூடத்தடிக்கு வந்தபோது பள்ளிக் கூடத்தடி அமளிப்பட்டுக் கொண்டிருந்தது.

விதம்விதமான வாகனங்கள் அது தவிர மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்று. என்றாலும் மண்டபம் அரைவாசிதான் நிரம்பியிருந்தது. சிவராசா உள்ளே நுழைந்த போது கந்தசாமியைக் காணவில்லை. மேடையில் மங்கள விளக்கேற்றிக் கொண்டிருந்தார்கள். ஆளும் கட்சி அமைச்சர்களோ - அரசியல்வாதிகளோ - இல்லாதது ஆச்சரியம்தான்.

***

1995 மார்கழி மாத இடைப்பட்ட ஒரு மாலை கருக்கல் நேரம் சோனாவாரியாக மழை பெய்து கொண்டிருந்தது. விடாத மழை.

இராணுவத் தாக்குதல்கள் அதிகமாய் யாழ்ப்பாணத்தில் இருந்தும் சனங்கள் இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த வேளை எல்லா வெறும் வளவுகளும் சனங்களால் நிறைந்து கொண்டிருந்தன.

இன்னமும் சிவராசா வளவுக்கு யாரும் வரவில்லை. மழை கனத்த அந்தப் பொழுதில் சிவராசரும் மனைவியும் முன் மாலிற்குள்தான் இருந்தனர். வளர்ந்த பிள்ளைகள் இரண்டும் மூலைக்கொருவராக.

அந்தச் சமயத்தில் வாசலில் ரைக்டர் ஒன்று வந்து நின்றது. ரைக்ரரில் இருந்த ஒரு ஆண் ஒரு சிறு பையன் கைக்குழந்தையை சுமந்த பெண் மழையில் தோய்ந்தபடி இறங்கினார்கள்.

"யாரோ ஆட்கள் வருகினம்" என்றான் சிவராசாவின் மகன்.

"ஐயோ - சின்னப் பிள்ளையப்பா மழையுக்க நனையுது" எனப் பரிதவித்தாள் கமலம்.

சட்டென்று சிவராசா கிளர்ந்தெழுந்தார். வருகின்றவர்கள் யார்? எதற்காக வருகிறார்கள் என்பது பற்றியெல்லாம் யோசிக்க அப்போது நேரமில்லை. யாரோ இடம் பெயர்ந்து வரும் அகதி மக்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நினைப்பு அவர் உடல் முழுதும் பரவி பற்றியெரிய ஆரம்பித்தது.

விரைந்து படலையடியை நோக்கி ஓடினார் அவர். மழைக்குள் கால் சறுக்கப் பார்த்தது. என்றாலும் அவர் சமாளித்துக் கொண்டார்.

"அண்ணை குறை நினையாதேங்கோ. உங்கடை வளவுதான் வெறுமையாய் இருக்குது. மழையும் நல்லாய்ப் பெய்யுது. பிள்ளையும் நனையுது. அதுதான் இதிலை நிப்பாட்டிப் போட்டம்" என்றார் ரைக்டரில் இருந்து இறங்கிய ஆண் மகன்.

சிவராசா பதில் ஏதும் சொல்லவில்லை. மழையில் நனைபவர்களைப் பாதுகாக்க வேண்டும். அதுவே அவரது நினைப்பாக இருந்தது.

மழையில் நனைந்தபடி சிவராசாவும் ரைக்டர் றைவருமாக சாமான்களை இறக்கினார்கள்.

சிவராசாவின் மனைவி பதறியடித்தபடி மழையில் நனைந்திருந்த பிள்ளைக்கு ஈரம் துடைத்தாள்.

அந்தப் பெண் உடைமாற்ற பதிந்திருந்த சிறு குடிலுக்குள் அழைத்துப் போனாள்.

மழைக்குள் நனைந்தபடி குசினிக் கொட்டிலுக்குப் போய் ஈர விறகோடு போராடி அடுப்புமூட்டி தேநீர் தயாரித்தாள்.

சிவராசா அந்த ஆளைப் பார்த்தார். தெப்பலாக நனைந்திருந்த அவர் சிவராசா அண்ணரைப் பார்த்து நட்பாகச் சிரித்தார்.

"இடம்பெயர்ந்து ஏழாவது இடம் இது" என்று சிரித்தபடி சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடப்பெயர்வுதான் வாழ்க்கையாய்ப் போச்சு" என்றார் சிவராசா பதிலுக்கு.

"நீங்கள் உடுப்பு மாத்தேல்லையே நல்லாய் நனைந்து போனியள் தம்பி"

"அதிலை என்ன? எல்லாம் பழகத்தானே வேணும். இப்பிடியே இருந்தால் உடம்பு வெக்கையில் காய்ஞ்சு போகும்"

இரவு மழை குறைந்தது. மழை நனைத்த இரவை நிலவும் நட்சத்திரங்களும் புதினம் பார்க்க வெளிப்பட்டன. எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இரவுச் சாப்பாடு சாப்பிட்டார்கள். படங்கு விரித்து மூன்று பாய்கள் பரப்பி ஆண்களும் சிவராசாவின் மகன், வந்தவரின் மகன் என மாலுக்குள் படுத்தார்கள். பெண்களும் சிவராசாவின் மகளும் கொட்டிலுக்குள்.

சிவராசா கண் விழித்தபோது விடிந்திருந்தது. தன் பக்கத்தில் படுத்திருந்தவரைக் காணவில்லை. எழும்பி தலைநிமிர்ந்த அவர் வாசலில் நின்று ஒழுங்கையின் இரண்டு பக்கமும் பார்ப்பது தெரிந்தது.

சிவராசா அவரை நோக்கி நடந்தார். "என்ன தம்பி இரவு நித்திரையில்லையோ"

"இல்லை அண்ணை புது இடம்தானே. நேற்று பகல் முழுக்க ஒரே அலைச்சல். அதுதான் உடம்பெல்லாம் அலுப்பாய் கிடக்கு. பகல் ஒரு நல்ல சாப்பாடு சாப்பிட்டால்தான் உசார் வரும்" என்றார்.

"அதுக்கென்ன சாப்பிட்டால் போச்சு" சிவராசா பதிலுக்கு சொன்னார்.

"அப்பாடா இனித்தான் நிம்மதி" என்ற அவர் "அண்ணை குறைவிளங் காதேங்கோ என்ரை பெயர் மனோகரன் - மனோ எண்டு தான் எல்லாரும் கூப்பிடுறவை. நீங்களும் அப்பிடியே கூப்பிடுங்கோ.

சிவராசாவின் மனைவி தேத்தண்ணியுடன் வந்து அவர்களை அழைத்தார்.

"தம்பி வாங்கோவன் தேத்தண்ணி குடிக்க - பல்லுத் தீட்ட வேணுமோ"

"அதெல்லாம் பிரச்சினையில்லை என்ற படி முற்றத்தில் இருந்த கல்லு ஒன்றில் அமர்ந்த படி மனோ தேத்தண்ணி குடித்தார். பிறகு "உங்களிட்டை சைக்கிள் இருக்கோ" எனக் கேட்டு "நான் ஒருக்கா வெளியில போட்டு வாறன்" என்றபடி புறப்பட்டார்.

"மழையுக்க நனைஞ்ச சேட்டை வடிவாய் காயவிட்டுதோ" எனக் கேட்டார் சிவராசா.


"அது பிரச்சினை இல்லை" எனப் புறப் பட்டார் மனோ.

அப்போதுதான் சிவராசா மனோவின் சேட்டைப் பார்த்தார். அது மஞ்சள் கலர்.

பெரிய சேவல் ஒன்றைக் கலைத்துப் பிடித்தார் சிவராசா. கோழிக் கறியுடன் மத்தியானச் சமையல் முடிந்தபோதும் மனோவைக் காணவில்லை. "பிள்ளை எங்கை அவரைக் காணேல்ல சாப்பிட வருவரே" என மனோவின் மனைவியிடம் சிவராசா கேட்டார்.

"என்ன செய்யிறாரோ தெரியாது. சில வேளை போற இடத்தில சாப்பிட்டாலும் சாப்பிட்டு விடுவார்" என்றார் அவர்.

சிவராசருக்கு சப்பென்றாகி விட்டது என்றாலும் பார்ப்பம் என்று நினைக்கும் போது வேறு ஒருவருடன் மனோ மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவரும் அங்கேதான் சாப்பிட்டார். "நல்ல சாப்பாடு சாப்பிட்டு கன நாளாய்ப் போச்சு" என்று சொல்லும் போதே வானத்தில் விமானச் சத்தங்கள் கேட்டன. தொடர் வெடிச் சத்தங்கள்.

மனோ 'மாலை' விட்டு விலகி வளவை சுற்றிப் பார்த்தார். பிறகு ஒரு இடத்தை தெரிவு செய்தார்.

"சிவராசா அண்ணை கொட்டில இதில் போடுவோமா"

மனோ காட்டிய இடம் வளவின் ஒரு கரை கொஞ்சம் சம தரையாகவும் தென்னை மரங்கள் அதிகமாகவும் அங்கு நின்றன.

சிவராசாவுக்கு அந்த இடத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"சின்னக் கொட்டில்தானே. எங்கடை வீட்டுக்குக் கிட்டவாய் போடுவம்" என்றார்.

மனோவின் முகத்தில் மாற்றம் தெரிந்தது. "சிவராசா அண்ண ஒண்டுக்கும் யோசியா தேங்கோ - நான் உங்களுக்குக் கரைச்சல் தர மாட்டன். இதிலை போடுவம் சற்று உறுதியாக மனோ சொல்ல சிவராசா சம்மதிக்க வேண்டியதாயிற்று. மனோ காட்டிய இடத்தில் நான்கு தென்னை மரங்கள் தறித்து மனோவின் குடும்பத்திற்கான வீடு கட்டப்பட்டது. அரை சீமெந்துக் குந்து வைத்து மேலே தகரச் சுவர் அமைத்து வீடு தயாரானது. சிவராசாவின் மனத்தில் எழுந்த கவலையை வெளியே காட்ட முடியவில்லை.

இரண்டு வாரங்களின் பின்னர் அவர்கள் அந்த வீட்டுக்கு குடிபூர்ந்தார்கள். சிவராசா தன்னிடம் இருந்த நெல்லில் இரண்டு மூடை நெல்லு கொண்டு போய்ப் போட்டார். கொத்தி வைத்திருந்த விறகில் அரைவாசிக்கு மேல் அள்ளிக் கொடுத்தார்.

ஒரு நாள் சிவராசாவின் மனைவி கேட்டாள் "என்னப்பா உந்த மனோகரன் என்ன வேலை செய்யுது. சிலவேளை ஒரு நாள் முழுக்க வீட்டில நிற்குது. சில நாளிலை காலமை போய் பின்னேரம் வருது. போய் வரேக்க எடுப்பாய் தான் போறார் வாறார்"

சிவராசா மனைவியைப் பார்த்தார். "அது தான் எனக்கும் புதினமாய் இருக்கு. ஒரு நாளைக்கு ஏ.ஜி.ஏ ஒப்பீசில் நிக்குது. சிலவேளை ஐ.சி.ஆர்.சி. ஒப்பீசில நிற்குது. என்ன பிளான் எண்டு விளங்கேல்லை. ஏ.ஜி.ஏ ஒப்பீசில ஏதும் அலுவல் எண்டால் சொல்லுங்கோ சிம்பிளாய் முடிக்கலாம் எண்டு எனக்குச் சொன்னவர்"

"மெய்யே" ஆச்சரியத்துடன் கமலம் கேட்டாள்.

"மெய்யோ பொய்யோ ஆள் வில்லங்க மான ஆள் போலத்தான் இருக்கு"

"அப்ப என்ன வருமானம்"

"அதுதான் விளங்கேல்லை - வெளியில இருந்தும் காசு வருகுது போல"

***

சிவராசாவின் மனைவிக்கு எப்போதும் சோலிதான். அவர் ஓய்ந்திருக்கும் நேரங்கள் குறைவு. வீட்டு வேலை, வயல் வேலை, மாடுகள் பராமரிப்பது என்பதுக்கு இடையில் மனோவின் மனைவியும் அவரை விடுவதாக இல்லை.

"அக்கா - ஒருக்கா வாங்கோ" என்ற அழைப்பு சிலவேளைகளில் உத்தரவு போல மாறிவிடும் சந்தர்ப்பங்கள் வந்ததுண்டு.

சிவராசாவுக்கு தப்பாத பண்பு கொண்ட அவர் மனைவி. எப்போதும் மனம் கோணாமல் மனோவின் மனைவிக்கு உதவி செய்யப் போய்விடுவார்.

ஒரு நாள் வெய்யில் உச்சம் பெற்ற மதியம் போல சிவராசா வயலில் இருந்து வீட்டுக்கு திரும்பி வந்தார். காலையில் வயலுக்கு வருவதாகச் சொன்ன மனைவியைக் காணாதது சற்றுக் குழப்பத்தைக் கொடுத்தது. அதன் காரணமாகவே அவர் புறப்பட வேண்டிய தாயிற்று.

மல்லிக் கோப்பித் தண்ணீர் குடித்தால் நல்லாய் இருக்கும் என்ற நினைப்புடன் சைக்கிளை விட்டு இறங்கினார்.

மனைவியைக் காணவில்லை. "கமலம்" என இரண்டு தடவை கூப்பிட்டுப் பார்த்தார். குசினிக்குள் இருந்து கோழிகள் இரண்டு பாய்ந்தோடி வந்தன கமலம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே போயிருப்பாள் என்ற குழப்பத்துடன் மனோ வீட்டுப் பக்கம் பார்வையைச் செலுத்தினார். மனோ வீட்டு குசினியின் முன்னால் உரல் நிமித்தி "மாங்கு மாங்கு" என இடித்துக் கொண்டிருந்தாள் கமலம்.

***

புதுக்குடியிருப்பு சனங்களால் இறுகிப் போய்விட்டது. தூரத்தில் வெடிச் சத்தமும் குண்டுச் சத்தங்களும் கேட்டாலும் ஒரு மாதிரியான பாதுகாப்பு பிரதேசமாகக் கருதப் பட்டதால் எல்லா வளவுகளும் நிறைந்து பெருகிவிட்டன.

சிவராசா வளவுக்குள் வேறு பலரும் குடிபூர முயற்சித்தாலும் மனோவின் தலையீட்டால் அது நிறைவேறாமல் போய் விட்டது. சிவராசாவுக்குத் தெரிந்த ஒரு பகுதியை குடியமர்த்த யோசித்தாலும் பிறகேன் பிரச்சினை என நினைத்து பேசாமல் இருந்து விட்டார்.

எல்லோருக்கும் பயிற்சி கட்டாயமாக்கப் பட்டபோது வயல் வேலைகளைக் கைவிட்டு சிவராசா மாதிரி ரைபிளுடன் பயிற்சிக்கு போக வேண்டியதாயிற்று.

அவர் முதல்நாள் கொண்டு போனது சாடையாக வளைந்ததாக காணப்பட்டதால் "இதென்ன வளைஞ்சு போய் இருக்கு - றைபிள் இப்பிடியே இருக்கும்" எனக் கடிந்து கொண்ட பயிற்சியாளர் அடுத்த நாள் நேரானதாக கொண்டு வரும்படி கட்டளையிட்டான்.

பயிற்சி முடிந்து களைத்துப் போன சிவராசா வீட்டுக்கு வந்தபோது அவருக்காக காத்திருந்தது போல மனோ எதிர்ப்பட்டார்.

"அண்ண ஒரு விசயம்"

"என்ன தம்பி"

"இல்லையண்ண நீங்கள் இனிமேல் பயிற்சி எடுக்கப் போகத் தேவையில்ல. உங்களுக்கு கஸ்டம் தானே. பொறுப்பாளரோடை நான் கதைச்சிட்டன். நீங்கள் போக வேண்டாம். மற்றது நான் நிரந்தரமாய் ஒரு வீடு கட்டுவம் எண்டு யோசிக்கிறன். வெளியில இருக்கிற தெரிஞ்ச ஆட்கள் உதவி செய்யிறம் எண்டு சொல்லியிருக்கினம்"

சடார் என தலைக்குள் ஏதோ இறங்குவது போல இருந்தது சிவராசாவிற்கு.

"அதொண்டும் தேவையில்லை" என்றார் சுரத்தில்லாமல்.

"அதை விடுவம் இப்ப என்ரை விசியத்துக்கு வாறன். நான் இருக்கிற அந்தப் பக்கக் காணியை விலைக்கு தாங்கோவன். நல்ல இடம் தானே. மனுசி பிள்ளைகளுக்கு பிடிச்சிருக்கு" என்றான் மனோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கித்துப் போனார் சிவராசா. வார்த்தைகள் வெளிவரவில்லை.

"என்ன அண்ணை பேசாமல் நிக்கிறீங்கள். எனக்குத் தெரியும் எனக்கெண்டால் நீங்கள் மாட்டன் எண்டு சொல்ல மாட்டியள்" மனோ உற்சாகமாகக் கதைத்துக் கொண்டு போனான்.

அன்று இரவு சிவராசர் வெகுநேரம் தூங்காமல் விழித்திருந்தார். நிலவைத் தொலைத்த வானம் மருண்டுபோய் கிடந்தது.

பரந்தன் வீதியாலும் ஒட்டிசுட்டான் பாதையாலும் வாகனங்கள் அமளியாக போக்குவரத்து செய்து கொண்டிருந்தன.

தூரத்தே வெடிச் சத்தங்களும் பலமாகக் கேட்டன. அமளியான சண்டை தொடங்கி விட்டதை சூழல் உணர்த்தியது.

சிவராசாவுக்கு இருந்தது ஒரே ஒரு வளவுக் காணி. அதுதான் அவருடைய இரண்டு பிள்ளைகளுக்கும். அதைத்தான் நம்பி இருக்கின்றார். அதில ஒரு பகுதியை விற்றுவிட்டு என்ன செய்வது. மனம் வெதும்பி நொந்தழுதார்.

என்ன செய்வது? அவர் யோசித்தார். போர்ச் சூழல் மோசமாய் வந்து கொண்டிருந்தது. மனோகரனின் ஆழம், நீளம் தெரியாமல் காணியை கொடுத்திட்டு பிறகு வாற பிரச்சனைக்கு ஆர் பொறுப்பு. சிவராசர்வுக்கு தலையைப் பிய்த்துக் கொள்ள வேணும் போல இருந்தது.

யோசிக்க யோசிக்க இவ்வளவு சனமும் இஞ்சை வந்திருக்குதுகள். இவ்வளவு சனமும் வாழத்தானே வேணும். பிரச்சினை எல்லாருக்கும் ஒண்டுதானே. அவன் எப்பிடியான ஆளாய் இருந்தால் எனக்கென்ன. அவன் செய்யிறது அவனோடை எனக் கலங்கித் தெளிந்து காணி விற்க முடிவெடுத்தார்.

அவர் நினைப்பதை யார்தான் ஏற்றுக் கொள்வார்கள். இயல்பான அவரது சுபாவத்தால் மனோவின் தொடர் தாக்குதல்களுக்கு முன்னால் வலுவிழந்து போனார்.

மனோவுக்கு பொருத்தமான ஒரு நல்ல நாளில் அரைவாசிக் காணியை மனோவிற்கு விற்பதற்கு உடன்பாடு ஏற்பாடானது. அப்போது நடைமுறையில் உள்ளபடி கைத்துண்டு மூலம் காணி விற்பனை இறுதியாயிற்று.

ஒப்புக் கொள்ளப்பட்ட பணத்தில் அரைவாசியைத்தான் "மனோ" சிவராசாவின் கையில் ஒப்படைத்தான்.

"ஒண்டுக்கும் யோசியாதேங்கோ அண்ண நான் இருக்கிறன் என்ற உறுதிமொழி அன்று அவனால் வழங்கப்பட்டது.

கொஞ்சக் காலத்தில் மனோவின் காணிக்குள் அளவான அழகான வீடு ஒன்று கட்டப்பட்டது. பொருளாதாரத் தடைகள் வீடு கட்டும் பொருட்கள் தட்டுப்பாடான சூழலில் அப்படி ஒரு வீடு கட்டியது அற்புதம் தான்.

குடிபூரலுக்கு கட்டிய கழிப்புப் பூசணிக் காய் வாடி வதங்கியபோதும் ஒப்புக் கொள்ளப்பட்ட காணியின் மிச்சக் காசு சிவராசாவுக்கு வழங்கப்படவில்லை.

இரண்டு மூன்று தடவை சிவராசா அது பற்றிக் கேட்டாலும் "தாறன்" என்ற ஒற்றைச் சொல்லு மனோவிடம் இருந்து வலிமையாகப் புறப்பட்டால் சிவராசா சோர்ந்து போனார்.

மனோவிற்கு காணி விற்கப்பட்டாலும் ஒரே வளவாகத்தான் காணி இருந்தது. ஆனால் திடீர் என மனோ தன் வளவுக்கான வேலியை அமைத்தான். அத்தோடு வேலிக் கதியாலைப் பலப்படுத்த உயரமான மண் அணையும் அமைத்தான். மழை காலத்தின் ஆரம்பத்தில் தான் அந்த வேலி போடப்பட்டது.

தொடர்ச்சியான மழையின் பின்னர் தான் வேலிக்குப் போட்ட அணையின் வீரியம் புரிந்தது. மழை வெள்ள ஓட்டம் தடைப்பட்டு சிவராசா வளவுக்குள் வெள்ளம் தேங்கத் தொடங்கி மாலுக்குள் வெள்ளம் புகுந்தது.

மழைக்குள் நனைந்தபடி சிவராசா மனோவின் வளவுக்குள் சென்றார். வீட்டின் முன் விறாந்தை ஓரமாக மனோ கன்வஸ் கட்டிலில் படுத்திருந்தான்.

"தம்பி" என்றார். அவரது குரலில் நடுக்கம் இருந்தது. அது மழைக் குளிரால் அல்ல.

"என்ன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மழை வெள்ளம் எங்கடை வளவுக்கை ஓடேலாமல் நிக்குது. ஒருக்கா வெட்டி விட்டால் நல்லது. எங்கட மாலுக்க தண்ணி நிக்குது" பவ்வியமாக வேண்டுகோள் விடுத்தார்.

"ஒழுங்கைப் பக்கம் வெட்டி விடுங்கோ. இஞ்சால எண்டால் பிரச்சனை" படுத்திருந்த மனோ சொன்னான்.

கண்கள் கலங்க சிவராசா வீட்டுக்கு வந்தார். மழை வெள்ளத்தால் கால்கள் சில்லிட்டுப் போய் இருந்தன.

இரவு வெகு நேரம் நித்திரை வரவில்லை. கண்ணயரும்போது, ஒழுங்கையிலும் தனது வளவுக்குள்ளும் ஆட்கள் ஆரவாச் சத்தம் கேட்டது.

விளக்கைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார். கும்மிருட்டில் யாரையும் தெரியவில்லை. இரண்டு மூன்று ரோச் லைட்கள் புள்ளிகளாக அலைவது தெரிந்தது.

"சிவராசாண்ணை உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை நீங்கள் போய் படுங்கோ" என்றது ஒரு குரல்.

அந்தக் குரல் சிவராசாவுக்கு தெரிந்ததுதான். தினசரி பழகுகின்ற குரல்.

மனதில் இருந்த பதட்டம் போனது. சிவராசாவீட்டுக்குள் வந்து படுத்தார். என்ன நடந்தது. யோசிக்கும்போது.

"அக்கா - அக்கா" என்றபடி மனோவின் மனைவி வந்தாள்.

"ஏதோ விசாரணையாம் எண்டு அவரை வரச் சொல்லிப் போட்டுப் போயினம்" என்றாள் பதட்டமாய்.

***

மாரி மழை ஒவ்வொரு முறையும் தானே பெய்யிறது. ஆனால் பிரளயம் போன்ற மழை எப்போதாவது தான் பெய்யும்.

அப்பிடிப் பெய்த மழை போல எழுந்த போர் நெருக்கடிகளால் புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை - பொக்கணை - வலயர்மடம் - முள்ளிவாய்க்கால் என இடம்பெயர்ந்த சிவராசா குடும்பம் வட்டுவாகல் ஊடாக செட்டிக்குளம் வலையம் நான்கு முகாமிற்கு வந்து மீண்டது.

***

மேடையில் ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களும். ஆண்களில் நான்கு பேர் வெள்ளை சேட் போட்டிருந்தார்கள். ஒருவர் மாத்திரம் மெல்லிய நீலக்கலர் சேட்டுடன் ரைகட்டியிருந்தனர். பெண்கள் இரண்டு பேரும் தலை விரித்து வெவ்வேறு விதமாக.

மேடை அலங்காரத்தால் மினுங்கியது. நீலநிறப் பின்னணியில் வெள்ளை நிற பானர் ஒன்று மேடையின் பின்புறத்தே.

அதில் ஆங்கிலமும் தமிழுமாக எழுத்துக்கள். எழுத்துக்கூட்டி தமிழ் படித்தார் சிவராசா. "எதிர்காலத்துக்கான இன்றைய உதவிகள்" என்பது பிரதான தலைப்பாகவும் - அதன் கீழே "எப்போதும் மக்களுக்கான அமைப்பு" எனவும் இருந்தது.

மேடையின் இடதுபுறத்தே ஏராளமான பொதிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை தான் எதிர் காலத்துக்கான இன்றைய உதவிகளாக இருக்கவேண்டும்.

வெள்ளைச் சேட் போட்ட நான்கு பேர்களில் உப்பலான ஒருவர் அப்போது பேசத் தொடங்கினார். அவரின் முகத்தைப் பார்க்க சிவராசாவுக்கு பொறி தட்டினாற் போல ஒரு நினைப்பு வந்தது. எப்போதோ பழகிய மாதிரி - கண்டு உறவாடியது போன்று - சிவராசா அவருடைய பேச்சை செவிமடுக்கத் தொடங்கினார்.

"மக்களின் கஸ்டங்கள் வேதனைகளை புரிந்து கொள்ள முடியாதவர்கள் மக்களை ஏமாற்றியவர்களின் செயற்பாடுகளின் விளைவுகளை நாங்கள் அனுபவித்து வருகின்றோம். எப்போதும் மக்களுக்காகவே செயற்படும் நாங்கள் எங்களால் ஆன உதவிகளை செய்வதற்காக இங்கு வந்திருக்கின்றோம்"

சிவர்ராசா அவரைப் பார்க்கப் பார்க்க சிலிர்த்து பெருத்த முகத்தில் அடர்த்தியான மீசை மின்னியது. வெள்ளைச் சேட்டில் அவர் மிக அழகாக இருந்தார். அட இது மனோகரன் தம்பி - சிவராசா வாய்விட்டு சொன்னார். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவால்களுக்கு மத்தியில் உன்னதமான மானுடநேய மருத்துவ சேவை முழங்காவிலில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை

வைத்திய நிபுணர் த.சத்தியமூர்த்தி,



வன்னிப் பெருநிலப் பரப்பில் 2008 காலப் பகுதியில் மக்கள் மிக விரைவாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். மன்னார் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கட்டம் கட்டமாக நகர்ந்து முழங்காவில் பகுதியினை அடைந்தனர். ஒரு சில கிழமை களில் முழங்காவில் பகுதியில் இருந்து வன்னேரி, அக்கராயன்குளம் பகுதியை அடைந்து கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

அவ்வாறே வவுனியா வடக்கு பகுதியில் இருந்தும் கிளிநொச்சி நோக்கி வந்தனர். மல்லாவி பகுதியில் இருந்தவர்களும் அக்க ராயன் ஊடாக கிளிநொச்சியை அண்டிய பிரதேசங்களில் தற்காலிக குடில்களை அமைத் தனர். பின்னர் கிளிநொச்சி பகுதியில் இருந்தும் தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு என பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் கட்டம் கட்டமாக சென்றடைந்தனர். இவ்வாறே முல்லைத்தீவு முள்ளியவளை மற்றும் அண்டிய பிரதேசங்களில் இருந்தும் மக்கள் புதுக்குடி யிருப்பு பகுதியை வந்தடைந்தனர்.

ஒரு வருடத்திற்கு மேலாக பல்வேறு இடங்களில் தற்காலிகமாக குடியமர்ந்து இறுதியாக 2009 தை, மாசி மாதங்களில் முள்ளிவாய்க்கால் பகுதியை அடைந்தனர். இந்த காலப் பகுதியில் வைத்தியசாலைகள் இயங்கி மருத்துவப் பணி செய்வது சவால் மிக்கதாக இருந்தது. எனினும் சிந்திக்க ஆறுதல் எடுக்க நேரமில்லை. ஏதோ வழியில் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய நிலை. பலரது அயராத சேவை அல்லல் உற்றவர்களுக்கு பேருதவியாக அமைந்தது. இவ்வாறே மக்களுக்கு உணவு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பலர் இரவு பகலாக கடமையாற்ற வேண்டியதாயிற்று.

A-9 வீதியில் கிளிநொச்சி நகருக்கு சில கி.மீ. தொலைவில் திருமுருகண்டி ஆலயம் அமை ந்திருக்கின்றது. அங்கிருந்து மேற்கு நோக்கி காட்டுப் பகுதிகளின் ஊடாக நகரும் பாதையில் சுமார் 12 கி.மீ. தொலைவில் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையும் 25 கி.மீ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில் வன்னேரி மத்திய மருந்தகமும் 40 கி.மீ. தூரத்தில் ஜெயபுரம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் அமைந்திருக்கின்றது. அங்கிருந்து மேலும் 10 கி.மீ. தூரம் பயணித்தால் மன்னார் யாழ்ப்பாணம் *A - 32* வீதியில் அமைந்துள்ள முழங்காவில் பிரதேச வைத்தியசாலையை அடைய முடியும்.

வன்னேரியக்குளம் சந்தியில் முற்காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு சுமைதாங்கிக் கல் காணப் பட்டது. எனினும் பின்னர் அதனை சிலர் தகர்த்து விட்டனர். கிளிநொச்சியின் மேற்கு பகுதியில் இராணுவ நடவடிக்கை வலுப்பெற இப் பகுதியினூடாக படிப்படியாக மக்கள் கிளிநொச்சி நகரத்தை இந்த வைத்தியசாலையை ஆதாரமாகக் கொண்டு வந்தடைந்தனர்.

இராணுவ முன்னேற்ற நடவடிக்கைகள் மன்னார் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கிய அடம்பன் பிரதேச வைத்திய சாலை, பள்ளமடு கிராமிய வைத்தியசாலை என்பன அதன் சேவைகளை வெள்ளாங்குளம் மத்திய மருந்தகத்திற்கு நகர்த்தி இருந்தன. அவ்வாறே மடு பிரதேச செயலர் பிரிவில் இயங்கிய பண்டிவிரிச்சான் பிரதேச வைத்திய சாலையும் இரணை இலுப்பைக்குளம் மத்திய மருந்தகமும் அதன் உபகரண மருந்துகளோடு வெள்ளாங்குளம் பகுதிக்கு சேவையை நகர்த்தி இருந்தன. டாக்டர் வெற்றிநாதன் பொறுப்பு வைத்திய அதிகாரியாக மேற்படி வைத்தியசாலைகளின் சேவைகளை ஒழுங்குபடுத்தியதுடன் இரவு பகலாக கடமையாற்றியிருந்தார்.

2008 வைகாசி காலப்பகுதியில் வெள்ளாங்குளம் வைத்தியசாலையில் சேவையைத் தொடர்ந்தவண்ணம் இருக்கையில் 2008 ஆனி நடுப்பகுதியில் வெள்ளாங்குளம் பகுதியிலிருந்து ஊழியர்களையும் மருந்துப் பொருட்களையும் நகர்த்தி முழங்காவில் வைத்தியசாலை சேவைகளோடு இணைத்துக் கொண்டனர். பிரதேச வைத்தியசாலையாக இயங்கிய முழங்காவில் வைத்தியசாலையின் தேவைகள் அதிகரிக்கத் தொடங்கியதுடன் பல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கணக்கான மக்கள் தினசரி வைத்திய தேவைக்காக வந்தனர். புதிதாக தற்காலிக விடுதிகள் இரண்டு கட்டப்பட்டிருந்தது.

2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் டாக்டர் பிறைற்றன் அவர்களும் அவரது துணைவியார் டாக்டர் திருமதி நிமதி அவர்களும் முழங் காவில் வைத்தியசாலையில் கடமைகளை பொறுப்பேற்று சிறப்பாக நடத்தி இருந்தனர். வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தி மக்களுக்கு உரிய வைத்திய சேவைகளை இரவு பகலாக வழங்கி இருந்தனர். சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் இவர்களிடம் இருந்து டாக்டர் பாஸ்கரன் கடமைகளைப் பொறு ப்பேற்றுக் கொண்டார்.

2007 - 2008 காலப்பகுதி கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் வைத்திய சேவை வழங்குவதில் மேலும் பல சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ளவேண்டி இருந் தது. முக்கியமாக வைத்தியசாலைக்கு தேவைப்படுகின்ற மருந்துப் பொருட்கள், உபகரணங்கள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் பின்னரே கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

2008 ஆரம்ப காலப்பகுதியில் முன்னர் வவுனியா பாதுகாப்பு படைத் தலைமையகத் தின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு முழங்காவில் வைத்தியசாலைக்கு 25 KV மின்பிறப்பாக்கி வவுனியாவில் இருந்து எடுத்துச் செல்ல அனுமதியைக் கேட்டேன். அப் பகுதியில் இராணுவ நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதனை எடுத்துச் செல்ல முடியாது என கூறினார். இருப்பினும் வைத்தியசாலையிலிருந்த பழைய மின் பிறப்பாக்கியினையும் நீர்ப்பம்பியினையும் மீள திருத்தி பாவிப்பதே வழமையாக இருந்தது. வைத்தியசாலை ஊழியர் “சூட்டி” என்பவர் வைத்தியசாலையின் எந்தத் தொழிலையும் செய்யக்கூடிய நிலையில் இருந்ததைக் கண்டேன். மிகச் சிக்கலான நிலைகளில் இவ்வாறான பல்துறை சார்ந்த ஊழியர்களின் உதவியினால் கடமைகள் நிறைவேற்றப் பட்டன. தினசரி பல நூற்றுக் கணக்கானவர் களுக்கு சிகிச்சையளித்த மேற்படி வைத்தி யசாலை 2008 ஆடி நடுப்பகுதியில் அதன் சேவைகளை வேறு இடங்களுக்கு நகர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இடம்பெயர்வு களில் இறுதியாக நகர்த்தப்படும் சேவை மருத்துவ சேவையாக இருந்தது.

முழங்காவில் பகுதியிலிருந்து சேவைகள் கிளிநொச்சி நகர் பகுதிக்கு முன்னர் குறிப்பிட்ட வாறு நகர்த்தப்பட்டுக் கொண்டு இருக்கையில் கிளிநொச்சி பொது மருத்துவமனை முழு வீச்சுடன் இயங்கிக்கொண்டு இருந்தது.

2004ஆம் ஆண்டு சமாதான காலத்தில் கிளிநொச்சி பொது வைத்தியசாலை கட்டுமானப் பணிகள் புதிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான ரூபா 600 மில்லியன் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கி இருந்தது. கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2006 ஆடி மாதம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சதானந்தன் தலைமையில் மேற்படி வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு புதிய பரிணாமத்தை அடைந்தது.

2007 - 2008 காலப்பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இரவு பகலாக கடமையாற்றினார்கள். மிகச்சிக்கலான ஒரு சில நோயாளிகள் வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப் பட்டனர். எனினும் அநேகமான சேவைகள் வைத்தியசாலையில் பூர்த்தி செய்யப்பட்டது. இடப்பெயர்பு ஆரம்ப காலங்களில் இவ் வைத்தியசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் சென்றது. 300 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற அதேவேளை 1000 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தினசரி வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சேவையைப் பெற்றுக் கொண்டனர். வெளி நோயாளர் பிரிவில் வயோதிபத்திலும் துடிப்போடு டாக்டர் சிதம்பரநாதன் கடமையாற்றிக்கொண்டு இருப்பார். எல்லோருக்கும் ஆறுதலும் அறிவுரையும் கூற எந்த நேரத்திலும் தயங்கமாட்டார். கடைசி நோயாளியை பார்வையிட்ட பின்னரே வீடு செல்வார்.

கடைசிக் காலங்களில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் இல்லாதபோதும் டாக்டர் மனோகரன் தனியாக மாதாந்தம் 400 சுகப் பிரசவங்களை தாதியர்கள் மற்றும் மருத்துவ மாதுக்களோடு உறுதிப்படுத்தினார். போர் கடுமையாகிக் கொண்டு செல்ல மன நல சேவைகளைப் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. டாக்டர் ஜெயராஜா விசேட கிளினிக்குகளை நடத்தி இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யதார்த்தன்*

கல்லெனச் சமைந்த காலத்தின் திரை விலகுகின்றது

முடிவடையாத ஒளியாண்டுகளை நோக்கிப் பறக்கின்றன
காட்டுப் பட்சிகள்

இமைகளிலிருந்த புழுதியை உதறிவிட்டுத் திறந்து கொள்கின்றன
தீராத வன்மமும் அருளும் கொண்ட
இரு கண்கள்

தன் பசியுற்ற நாவால் இரத்தம் சுவைக்கின்றது
ஒரு யுகம்

கைவிடப்பட்டோரின் வேண்டுதல்களைப் புறக்கணிக்கிறார்
யார் குரலுக்கும் திறவாத செவியுடைக் கடவுள்


வானின் மதகுகள் திறந்து கொள்கின்றன

பேய் மழை

நோவாவின் பேழைக்காக காத்திருக்கின்றனர் சனங்கள்
தமது கடைசி அழுங்கையை அழுதபடி


நகராமலே நின்ற நாளில்
வராமலே போனது பேழை

அதன் பிறகே
கண்ணீர் என்பது கடவுளின் சொல்.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூத்த பத்திரிகையாளர் பி.எஸ். பெருமாள் அவர்களுடனான நேர்காணல்

தீவிர செயற்பாட்டாளர்கள் பலர் சமூகத்தில் அடையாளங்கள் ஏதுமின்றி வாழ்ந்து வரும் ஒரு சூழல் உள்ளது. இது மனவருத்தத்திற் குரியதொன்று. ஊடகத்துறையின் யாழ்ப்பா ணத்துக்கான தமிழ் அச்சு ஊடக வரலாற் றின் முழுமையிலும் தொடர் செயற்பாட்டா ளரான பி.எஸ்.பெருமாள் அவர்கள் கொண் டிருக்கும் அனுபவங்கள் அளவிடமுடியாதன.

அவரையும் அவரது நீண்ட பட்டறிவையும் பகிர்வதில் தளவாசல் நிறைவடைகிறது.

முகவரி : 13A1/3 புறாடி ஒழுங்கை,
A9 வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.


**ஈழத்துப் பத்திரிகைத் துறையின் சாதனைகள் - வேதனைகள் அல்லது பெருமையுறத் தக்கவை - கவலையுற வேண்டியவை என கணிப்பிடப்படக் கூடியவை பற்றி....?**

ஈழத்துப் பத்திரிகைத்துறையின் சாதனை கள் என்று குறிப்பிடுவதானால் - முக்கிய தமிழ்ப் பத்திரிகைகள் பல்வேறு இன்னல்கள், இடை யூறுகள், எதிர்ப்புக்கள், இழிசெயல்கள், உயிர் அச்சுறுத்தல்கள் என இன்னோரன்ன சோதனை களில் இருந்தும் - சோர்ந்து போகாமல் எதிர்கொண்டு தலைதூக்கி நிற்பதை மாபெரும் சாதனை என்றுதான் நான் கூறுவேன். இதில் அரசு சார்ந்த அல்லது அரசினால் நடத்தப் படுகின்ற பத்திரிகைகள் உள்ளடங்கா. அவை அரசினால் போசிக்கப்படுபவை. பதவியிலிருக் கும் அரசின் கோட்பாடுகளை மீறி அவை செயல்பட முடியாது. மீறினால் பத்திரிகை யாளர்களின் பதவி போய்விடும். இல்லை யென்றால் காணாமல் போய்விடுவார் கள். இன்று நிலைமை மாறியிருப்பது வேறு விடயம்.

ஆரம்ப காலத்து பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் மேற்கொண்ட துணிச்சலான பணிகளின் காரணமாகத் தான் இன்று பல சமூகங்கள் குறிப்பாக தொழிலாளர் கள், விவசாயிகள் தம் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ள முடிந்துள்ளது. மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போராட்டங்களுக்கு அவைகளின் நியாய பூர்வமான தன்மைகளுக்கேற்ப பத்திரிகைகள் குரல் கொடுத்து வந்துள்ளமை இன்றும் தொடர்வதை பார்க்கின்றோம்.

இவ்வாறு அடுக்கிக் கொண்டு போகலாம். இந்தவிதமான சாதனைகளை முன்னெடுக்கும் போது பத்திரிகைகள் எதிர்கொண்ட இடைஞ்சல்கள் யாவும் வேதனைகளே.

**ஈழத்தில் பத்திரிகைத்துறை குறிப்பாக வடபுலம் - கொழும்பு இயங்குதளங்களின் ஆளுமைகள், ஆதிக்கங்கள், செல்வாக்குகள் ஒத்த இயல்புகள் - வேறுபட்ட இயல்பு கள்....?**

குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், மொழிப் போராட்டங்களின் போது பேரின பத்திரிகைகள் இருட்டடிப்பு களிலும் திரிபு படுத்துவதிலும் ஈடுபட்டு இனக் கலவரங்களுக்கு வித்திட்டபோதும் தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்து குரல் எழுப்ப வேண்டியிருந்தது. அந்த வகையில் கொழும்பில் தனியாரால் நடத்தப்பட்ட வீரகேசரி போன்ற பத்திரிகைகள் பேரினக் கும்பல்களின் தாக்குதல்களுக்குள்ளாக நேர்ந்தது. 1956, 58 கல்வரங்களை உதாரணமாகக் கூறலாம். 58 கலவரத்தின் போது கொழும்பில் ஒரு பத்திரிகையாளனாக பணிபுரிந்தபோது ஏற்பட்ட அனுபவம் இன்னமும் நினைவிலிருக்கின்றது எனக்கு. ஈழத்து எழுத்தாளர்கள் பலரை வளர்த்தெடுத்தபெருமை பத்திரிகைகளுக்குண்டு. பத்திரிகை எழுத்தாளர்கள் பலரின் பயிற்சிக்களமாக இருந்துள்ளன. இளம் கவிஞர்களும் பத்திரிகையாளர்களும் பத்திரிகைகளிலேயே பயிற்சி பெற்றார்கள். பிரபலம் பெற்றார்கள். அவ்வாறு அனுபவம் பெற்ற அனேகர் நாட்டின் பல பகுதிகளிலும் இன்றும் இருக்கிறார்கள்.வெளிநாடுகளில் பத்திரிகை துறை சார்ந்த வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பதும் வெளிப்படை.

**நேர்கண்டவர்கள்:**
**ந. மயூரரூபன்**
**கை. சரவணன்**

**ஒருங்கிணைப்பு:**
**சி. நிசாகரன்**

**புகைப்படங்கள்:**
**இளங்கீரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கவலையளிக்கும் ஒரு விடயம் என்னவென்றால் இவ்வாறு பயிற்சியும் அனுபவமும் பெற்ற பலரும் தமக்கு பயிற்சிக்களமாக இருந்த - அதாவது தாம் ஏறி வந்த படிகளையே மறந்துவிடுகிறார்கள் என்பது தான்.

இன்னொரு விடயம் - பத்திரிகைகள் தொழிலாளர் பிரச்சினையாகட்டும், மொழி யுரிமை பிரச்சினை ஆகட்டும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆகட்டும் ஏன் ஆலயப் பிரவேசம் தொடர்பான போராட்ட காலத்தி லும் கூட தங்களால் ஆன பங்களிப்பை வழங்கத் தவறவில்லை. அதேசமயம் யாருக்காக குரல் கொடுக்கப்பட்டதோ அதே தரப்பினர்களால் இந்தப் பத்திரிகைகள் தாக்குதல்களுக் குள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. அதற்குக் காரணம் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு மட்டுமே ஆதரவளிக்கப்பட வேண்டும் என்று கருதியமையும் ஒன்று. ஆலய பிரவேச போராட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகைக் கட்டிடம் நாட்டுக் குண்டு வீச்சுக்கிடமானமை - இன உரிமைப் போராட்டங்களின்போது களத்தில் நின்ற அனைத்து அமைப்புகளுமே அப் பத்திரிகையின் மீது நிர்ப்பந்தங்களை பிரயோகிக்க தவறாமை. கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட அரசு தரப்பு காடையர்களின் எரியூட்டலுக்கு உள்ளாக்கப்பட்டு தலைதூக்கி யிருந்த அப்பத்திரிகை பின்னர் இந்திய அமைதி காக்கும் படையினர் வருகையை அடுத்து அவர்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாக நேர்ந்ததால் போராளிகளால் தகர்த்தப்பட்டது. அக் காலத்தில் ஈழநாடு பத்திரிகை நிறுவனம் மட்டுமல்ல இங்கு வெளிவந்து கொண்டிருந்த ஏனைய பத்திரிகை களும் இரு தரப்பினரதும் இக்கட்டுகளுக் குள்ளாக நேர்ந்தது.

இவ்வாறான சம்பவங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். அவைகளை சோதனையும் வேதனையும் நிறைந்த காலம் என்று கூறும் அதே சமயம் மாகாண பத்திரிகை கள் அவைகளினின்றும் தலைதூக்கி மிடுக்குடன் மிளிர்கின்றனவென்றால் அதனை பெரும் சாதனை என்று கூறாமல் வேறு எவ்வாறு கூறுவது?

வடக்கில் குறிப்பாக இன்று யாழ்ப்பாணத் திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற தினசரி பத்திரிகைகள் எதுவாய் இருந்தாலும் அவைகளுக்கான அடித்தளம் கொழும்பி லிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளும் அவை சார்ந்த பத்திரிகையாளர்களுமே என்று கூறு வதில் தவறு இருக்காது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் ஈழநாடு பத்திரிகை வார ஏடாக இருந்து நாளேடாக பரிணமித்தபோது அதனை அளவில் சிறியதாய் இருந்தபோதிலும் கொழும்புப் பத்திரிகைகளுக்கு இணையாக செய்தி வழங்கு முறை, தலைப்புகள் இடுகின்ற பாணி, மற்றும் ஆசிரிய தலையங்கம் என்பவற்றில் தரம் குறையாத வகையில் வெளிப்படுத்தினார்கள் என்றால் கொழும்புப் பத்திரிகைகளில் பணி புரிந்து பயிற்சி அனுபவங்களுடன் இங்கு வந்த பத்திரிகையாளர்கள் மற்றும் பக்கம் போடுபவர்களின் பங்கு பணியே காரணமாக இருந்தன என்பதில் சந்தேகமில்லை. அந்த முன் மாதிரியானது வேறு பல பத்திரிகைகள் இங்கு தோன்றி நிலைக்க காரணமாயிற்று.

ஒரு காலத்தில் கொழும்புப் பத்திரிகைகளே வட புலத்திலும் ஏனைய பகுதிகளிலும் செல்வாக்கு பெற்றிருந்தமை - ஆதிக்கம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் வடக்கில் நாளேடுகள் ஆரம்பிக்கப்பட்டு அவை மக்கள் பிரச்சினைகளை விரிவாகவும் ஆணித்தரமாகவும் பேசத் தலைப்பட்டமை ஒரு புறமிருக்க வடபுலத்தில் நிகழும் சம்பவங்களின் விபரங்களை உடனுக்குடன் வழங்கத் தொடங்கியமை கொழும்புப் பத்திரிகைகளுக்கு ஒரு சவாலாகவும் போட்டியாகவும் கூட அமைந்து விட்டது எனலாம். அதுவரை காலமும் வடக்கில் கொழும்புப் பத்திரிகைகளுக்கிருந்துவந்த ஆதிக்கமும் தளரத் தொடங்கியது. அதனால் வடபுலத்து மக்கள் மீது கொழும்புப் பத்திரிகைகள் செலுத்திவந்த செல்வாக்கும் குறைந்தது. அந்தவகையில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்றுவந்த நெருக்கடியான நிலைமைகள், போர்க்கால சூழ்நிலை, போக்குவரத்து இடையூறுகள் யாவும் மாகாணப் பத்திரிகைகளுக்கு அதிக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தன.

பிற்காலத்தில் அதாவது போர் ஓய்ந்ததன் பின்னர் மீண்டும் கொழும்புப் பத்திரிகைகள் நவீன தொழில்நுட்ப வசதிகளோடு பழைய தமது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள எடுத்த முயற்சி அவ்வளவாக வெற்றியை தந்ததாகத் தெரியவில்லை. அதற்கு முக்கிய காரணம் நவீன தொழில்நுட்ப வசதிகள் மாகாணப் பத்திரிகை களுக்கும் தாராளமாகவே கிடைக்கின்ற நிலைமை இப்போது உருவாகியுள்ளமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பத்திரிகையின் அளவு, தாள் எண்ணிக்கை மற்றும் அலங்கார வடிவமைப்புகளைவிட அது வழங்கும் செய்திகள், மக்கள் பிரச்சினைகளில் அது வெளியிடும் ஆணித்தரமான கருத்துக் களை மக்கள் விரும்புகிறார்கள். மக்களை அரசியல் மற்றும் கலை கலாசார விடயங்களில் திசைதிருப்பும் வகையில் செயல்படும் பத்திரிகைகளை மக்கள் இனம்கண்டு ஒதுக்கி விடுகிறார்கள் என்பது என் கருத்து.

இதில் இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால் வடக்கில் வாழும் பெரும்பாலான மக்களும் அரசியல் மட்டத்தில் மட்டுமின்றி கலை கலாசார ரீதியிலும் ஒரேவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். எனவே அவர்களின் இந்த விவகாரங்களுக்கு முக்கிய இடம்கொடுக்காத எந்த பத்திரிகையும் நிலைநிற்க முடியாது. அதனால் கொழும்பிலிருந்து வருபவையாக இருந்தாலென்ன இங்கு பிரசுரமாகின்றவை யானால் என்ன அனைத்து பத்திரிகைகளும் மக்கள் பிரச்சினைகளில் பெரும்பாலும் ஒரே விதமாகவே பேசுகின்ற நிலையில் இருக்கின்றன. மாறானவை அவ்வாறு மாறான கொள்கை யுடையவர்களின் மத்தியில் மட்டுமே வாசிக்கப் படுபவையாக இருந்துள்ளன - இருக்கின்றன.

இந்த நிலைமையில் கொழும்பிலிருந்து வருகின்ற பத்திரிகைகளின் ஆளுமை அல்லது ஆதிக்கம் என்பவற்றை மேற்சொன்ன பின்புலத்தில் வைத்தே கணிக்கவேண்டும்.

**நவீன இலத்திரனியல் மற்றும் இணைத்தள வரவுகள் அச்சு ஊடகத்துறையின் மீது செலுத்துகின்ற சாதக, பாதக அல்லது சவால்கள் பற்றிய தங்கள் குறிப்புகள்.**

நவீன இலத்திரனியல் மற்றும் இணையத் தளங்களின் வரவானது அச்சு ஊடகத்துறையின் செயற்பாடுகளுக்கு அல்லது வளர்ச்சிக்கு மேலும் அதிக ஊக்கத்தையும் உத்வேகத்தையும் கொடுத்திருக்கின்றன என்பதை மறுத்துரைத் திட முடியாது. அந்த வகையில் அது ஒரு சாதக நிலைமையே. ஆனால் இவைகளின் வரவானது இத்துறையில் ஈடுபட்டிருந்த அனேக இளைஞர் களுக்கு வேலை இழப்பை உருவாக்கிவிட்டமை கவலைக்குரியது.

எடுத்துக்காட்டாக எழுத்துக்களை கையால் கோர்த்தும் பக்கங்களை மனித வலுவில் தயாரித்தும் யந்திரங்களை மனிதர்களே இயக்கி அச்சிடுவதையும் இல்லாமல் செய்துவிட்டன. செய்திகளை, அல்லது கட்டுரை மற்றும் கவிதை கதைகளை கணினி மூலமே மிக இலகுவாக தட்டச்சு செய்துகொள்ளவும் அதன் வாயிலாகவே பக்கங்களை வடிவமைத்து இயந்திரங்களில் ஏற்றிக் கொள்ளவும் சில மணித்தியாலங்களில் முடிவதாக உள்ளது. சித்திரங்களை நிழல் படங்களை எல்லாம் கூட மிக எளிதாகவும் நுணுக்கமாகவும் பத்திரிகை பக்கங்களில் இடம்பெறச் செய்துவிட முடிகிறது. இவை சமீபகாலம் வரை தனியாக புளக்குகள் செய்து பக்கங்களிற்கு ஏற்றிக் கொள்ளும் தொழில்முறை புழக்கத்தில் இருந்தது. இவைகளுக்கு அதிக நேரமும் மனித வலுவும் தேவைப்பட்டது.

இவையும் இவை போன்ற அச்சு முறைகளும் மனித நாகரிக வளர்ச்சிக்கும் பெரும் வரப்பிரசாதங்களாக அமைந்துவிட்டன. அச்சு ஊடகங்கள் இக்காலத்தில் பெரிதும் கணினி மற்றும் இணையத்தளங்களில் தங்கியிருப்பதால் அவைகளைப் பயின்றவர்களை வைத்துக் கொண்டு விஷயம் அறிந்த பத்திரிகையாளர் களால் பத்திரிகைகளை நகர்த்த முடிகின்றது. குறிப்பாக சொல்வதானால் முன்னர் போன்று ஆள் பலம் (மனித வலு) அதாவது தேர்ச்சி பெற்ற பத்திரிகையாளர்கள் ஒருவர் இருவர் இருந்தால் போதும் என்ற நிலைமை ஏற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

**அச்சு ஊடகத்துறையை குறிப்பாக வடபுலத்தில் மூன்று காலகட்டமாக வகுத்துப் பார்க்கமுடியும் எனும் பொதுவான கருத்து நிலை ஒன்றுண்டு. (அவை, தொடக்ககாலம் - மின்சாரம், அச்சுத்தாள் மை, ஈயஅச்சு போன்றன கிடைக்காத காலம் - தற்போதைய காலம்) இது தொடர்பான தங்கள் பார்வை என்ன?**

அச்சு ஊடகத் துறையின் தொடக்க காலம் பற்றி நாம் பேசுவதானால் அச்சுக் கலையின் முன்னோடியாகக் கருதப்படும் குட்டன்பேர்க் காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கும். அது வெகு நீண்ட கதை. அந்த வகையில் பேசுவதற்கு என்னிடம் தரவுகளும் இல்லை. மேற்கோள்களுக்கான நூல்களும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் நான் இவ்வாறான ஆய்வுகளில் ஈடுபட்டவனுமில்லை. ஆனால் நான் பத்திரிகைத் துறையில் இறங்கிய காலத்திலிருந்து வேண்டுமானால் என் நினைவுகளை ஆதாரமாகக் கொண்டு பேசலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் செய்திகள் மற்றும் கட்டுரைகளை ஆசிரியர் பகுதியினர் தயாரித்து வழங்க அச்சுக் கோர்க்கவென்று இருக்கும் ஆட்கள் கைகளாலேயே எழுத்துக்களை தனித்தனியாக எடுத்துவைத்து கோர்த்து வழங்குவார்கள். அவை பிரதி எடுக்கப்பட்டு திருத்தம் செய்து பக்கம் வடிவமைக்கப்படும். பக்கங்கள் மட்ரிக்ஸ் என்றழைக்கப்பட்ட அட்டைகளில் அழுத்தப்பட்டு அவை ஈயத் தகடுகளாக்கப்பட்டு இயந்திரத்தில் ஏற்றப்படும். இது ஒரு பெரிய நீண்ட செயற்பாடு - ஆனால் அவை எல்லாம் இப்பொழுது கிடையாது.

நான் யாழ்ப்பாணத்தில் 60களில் ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்தபோது அங்கே மிகப் பழைய முறையிலேயே பணிகள் நடைபெற்றன. அச்சு யந்திரங்களும் மிகப் பழைய மாதிரியானவையாகவே இருந்தன. ஆனால் அப்போது கொழும்பில் லைனோ அச்சு கோர்க்கும் யந்திரங்கள் அறிமுகமாகியிருந்தது மட்டுமல்ல அச்சடிக்கும் இயந்திரங்களும் நவீனமயப்படுத்தப்பட்டுவிட்டன. வீரகேசரியில் அந்தக் காலகட்டத்தில் றோட்டரி இயந்திரம் பயன்பாட்டில் இருந்தது. ஈழநாடு ஒரு மாகாண பத்திரிகையாக மிகக் குறைந்த வசதிகளோடு வெளிவந்தபோதும் கொழும்பிலிருந்து வந்த பெரிய பத்திரிகைகளுக்கு இணையாக மக்கள் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்ய முடிந்தமையை இன்று நினைத்துப்பார்க்க ஆச்சரியமாகவுள்ளது. நிறுவனத்தின் உரிமையாளர்கள் மட்டுமன்றி பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பிரதேச நிருபர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் அனைவரும் அன்று தம்மை இந்தப் புதிய பணிக்கு அர்ப்பணித்து செயல்பட்டார்கள் என்று கூறத் தேவையில்லை. கணினிகள், கைபேசிகள், தொலைநகல்கள், மின்அஞ்சல்கள் என்று இன்னும் எத்தனையோ வசதிகளுடன் இன்று பணிபுரியும் பத்திரிகையாளர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறவேண்டும்.

**தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கும் இலக்கியத் துறைக்குமான ஊடாட்டம் தமிழகம், ஈழம் எவ்வாறு இருந்தன - இருக்கின்றன - எப்படி இருக்கவேண்டும் என்பது தொடர்பானதங்கள் கருத்து?**

செய்திப் பத்திரிகைத் துறையானது முற்றிலும் செய்திகளோடு மட்டுமே தன்னை ஆரம்ப காலத்தில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தது. அதற்கு அப்பால் செய்திகள் தொடர்பான கட்டுரைகளையும் பிரசுரிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. இவ்வாறான செய்திப் பத்திரிகைகள் வாரத்துக்கு ஒரு தரம் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் வாரமலர் என்ற வகையில் சஞ்சிகைகளுக்கான அம்சங்களையும் பிரசுரிக்கத் தொடங்கின. அவ்வாறு செய்தபோது வாரமலருக்கென செய்திகளைத் தவிர்த்து கதை, கட்டுரை, கவிதை மற்றும் இலக்கியத்துக்கான அம்சங்களையும் பிரசுரிக்கலாயின. அவை இன்னும் ஒரு படி மேலே சென்று காலத்துக்குக் காலம் கதை, கவிதைப் போட்டிகளாயும் நடத்தியமை இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் வளர்க்கும் களமாக அமைந்தன எனலாம். பிற் காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் திகழ்ந்தவர்கள் இவ்வாறு உருவானவர்களே. அந்தவகையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பத்திரிகைகள் பெரும் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்துக்கென்றே தோற்றுவிக்கப்பட்ட பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் பணி பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை.

செய்தி பத்திரிகைகள் வார இறுதியில் மலர்களை வெளியிட வேண்டிய கட்டாயம் இருந்தமைக்கு பல காரணங்கள் இருந்துள்ளன.

உண்மையிலேயே அப் பத்திரிகை ஆசிரியர்களாய் இருந்தவர்கள் இலக்கியப் பற்றுடையவர்களாகவும் உள்நாட்டு இலக்கிய வாதிகளை வளர்த்தெடுக்கவும் அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவும் விரும்பியிருக்கலாம் என்பது ஒன்று. இன்னொன்று வாரம் முழுவதும் பணியாற்றுகின்ற பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கு வார இறுதியில் விடுப்பு அளிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் வார இறுதியில் அவர்களுக்கு விடுப்பு கிடைக்கும் வகையில் வார மலருக்கென்று ஒரு பிரிவினை ஏற்படுத்தி வாரமலர்களை ஒரு சஞ்சிகை மாதிரியில் இலக்கிய அம்சங்களும் அரசியல் விமர்சனங்களும் இடம்பெறும் வகையில் வெளியிட்டார்கள். அப்பிரிவினர் அம்மலர் வெளிவரும் தினத்திலன்றி வேறு ஒரு தினத்தில் விடுப்பு எடுத்துக் கொள்ளும் வகையில் பணிகள் ஏற்பாடு - நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கும். இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் கொழும்பில் தமிழகத்திலும் கூட என்று நினைக்கிறேன், வார மலர்களில் பிரசுரமாகும் கதை, கட்டுரை, கவிதைகளுக்கு குறிப்பிட்ட அளவில் சன்மானங்களும் வழங்கப்படுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டு. யாழ்ப்பாண பத்திரிகைகளுக்கு விடய தானங்களை வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கும் அளவில் அவை இருப்பதாகத் தெரிய வில்லை. இளம் எழுத்தாளர், கவிஞர்களுக்கு அவர்களின் தரம் அறிந்து சன்மானம் வழங்குவது அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கும்.


**செய்தி சேகரிப்பாளனில் தொடங்கி வாசகன் கையில் சேரும் வரை ஒரு பத்திரிகைக்குள்ள பணிகள், பொறுப்புகள் மற்றும் இவை தொடர்பில் பணிபுரிவோர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள், கடமைகள், பொறுப்புகள் குறித்த கவனம்....?**

செய்தி சேகரிப்பதென்பது நிருபர்கள் - மற்றும் செய்தியாளர்களின் அன்றாட கடமைகள் - இவ்வாறானவர்கள் அந்தந்த பத்திரிகை - ஊடகங்களால் நியமிக்கப்பட்டவர் களாயும் இருப்பார்கள். சில சமயம் பல பத்திரிகைகளுக்கு செய்திகளை வழங்கும் சுதந்திர பத்திரிகையாளர்களாகவும் இருப்பா ர்கள். எவராய் இருந்தாலும் தாம் பணி புரியும் பத்திரிகையின் கொள்கை - நடைமுறை மற்றும் அதன் செய்தி வழங்கும் பாணியை அவர்கள் தெரிந்து வைத்துக்கொண்டு அதற்கேற்ப எழுதுவது முக்கியம் - ஒரு சம்பவத்தில் அல்லது ஒரு பேச்சாளர் கூறும் கருத்தில் தென்படும் புதிய தகவலை செய்தியாளர் புரிந்துகொள்ள வேண்டும் - குறித்த காலகட்டத்தில் நிலவும் சமூக, அரசியல் விவகாரங்களில் அவன் எப்பொழுதும் கவனமாய் இருந்தால் அவனது பணி இலகுவாக அமைந்துவிடும்.

செய்தி வழங்கிய முறையில் குறைபாடு இருந்தால் பத்திரிகை ஆசிரியர்கள் அதனை மீண்டும் திருப்பி எழுதவேண்டும். செய்தி கிடைத்த பின்னர் அதனை எந்த அளவில் - எந்தப் பக்கத்தில், எந்த வடிவில் பிரசுரிப்பது என்பதை ஆசிரியர்களே தீர்மானிப்பார்கள்.

பத்திரிகைகளின் பணிகள் பொறுப்புகள் எப்படியிருக்கவேண்டும் என்பதை அங்குள்ள முக்கிய அலுவலர்களே தீர்மானிக்கிறார்கள். ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கிறவர் அவருக்கென்று சில கொள்கைகளை வைத்திருக்கவே செய்வார். அந்தவகையில் தமது பத்திரிகை பணியாற்றவேண்டும் என்றே விரும்புவார். ஆனால் பொதுப் பத்திரிகைகள் - அதாவது கட்சி சார்பற்றவை என்று விலாசமாக விளம்பரம் செய்துகொள்பவை தேசத்துக்கும் மக்களுக்கும் மன நீதியாக செயல்படுவது அவசியம்.

அண்மையில் பத்திரிகையாளர்களின் பணிகள் தொடர்பாக எழுதும்போது ஆங்கில பத்திரிகையொன்றின் ஆசிரியர் வெளியிட்ட கருத்தினை இங்கு நாம் மீட்டுப் பார்க்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறியது,

"காலத்தால் சோதனைகளுக்குட்படுத்தப் பட்டதும் காலத்தால் கௌரவிக்கப்பட்டது மான ஊடக மற்றும் பத்திரிகைத் துறை கொள்கைகளின் பிரகாரம் எமது பிரதான கடமை என்னவென்றால் குரல் எழுப்ப முடியாது தவிக்கும் மக்களின் குரலாக ஒலிப்பது, தரித்திரநாராயணர்களாக்கப் பட்டுள்ள ஓரங் கட்டப்பட்டுள்ள இலட்சோப லட்சம் மக்களுக்கான, அடிப்படை உணவு உறைவிடம் உடைகளுக்கு வழியில்லாது தவிக்கும் மக்களின் குரலாக பேசுவதாகும்...."

பத்திரிகையாளர்களின் கடமை பற்றி அவர் கூறுவது :

பத்திரிகையாளர்கள் மிக நன்றாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும். நியாயம், பக்க சார்பின்மை மற்றும் உண்மைத் தன்மைகளை தமது அறிக்கைகளில் அல்லது செய்தி கட்டுரைகளில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற தமது அர்ப்பணிப்பினை அவர்கள் உணர்ந்து செயல்படச் செய்யவேண்டும். தமது மன நீதிக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் உண்மையாக நடந்துகொள்ளமுடியாத பத்திரிகையாளர்கள் வேறு தொழில்களை நாடி செல்லும்படியாக அறிவுறுத்தப்படவேண்டும். ஒரு தொழில்சார் பதவிக்கும் மேலான இதன் நற்பெயருக்கு இவர்கள் களங்கம் ஏற்படுத்த வேண்டாம். ஒரு புனிதமான தொழிலின் மேன்மையானதொரு நிலைக்கு அவர்கள் செல்பவர்களாய் இருக்க வேண்டும் என்பதாகும்.

அரசியல் காழ்ப்புகள், பாரபட்சங்கள் இன்றி அவை செய்திகளை வெளியிட வேண்டும். அதேசமயம் மக்கள் மற்றும் தேசத்தின் நலன் சார்ந்து கட்சிபேதமின்றி ஆசிரிய தலையங்கம் போன்றவற்றில் கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட வேண்டும் என்பது என் தனிப்பட்ட கருத்து. செய்திகளில் தனிப்பட்ட மனிதர்களை மனம் நோகச்செய்வது - விமர்சிப்பது அல்லது தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளை விலாவாரியாக வெளியிடுவதெல்லாம் உகந்தவையாக நான் கருதவில்லை. செய்தியாளர்கள் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால் செய்தியின் மூலகர்த்தா விரும்பாதவிடத்து அவர் யார் என்பதை வெளியிடாமல் இருப்பது.

அரசு அல்லது வேறு நிறுவனங்கள் தொடர்பாகக் கிடைக்கும் இரகசிய செய்திகளை வெளியிடும்போது சில சமயம் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படலாம். அவ்வாறான சமயங்களில் செய்தி வழங்கிய வரை வெளியிடும்படியாக சட்டவாளர்கள் நிர்ப்பந்திப்பதுண்டு.

அம்மாதிரி வேளைகளில் பத்திரிகையாளன் தன் தார்மிகக் கடமையைச் சரியாக செய்தாக வேண்டும். அவ்வாறு செய்யும்போது தண்டனைக்குள்ளானாலும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு சிறை சென்ற பத்திரிகையாளர்கள் பற்றிய வரலாறு உண்டு.

**"ஊடக சுதந்திரம்", "ஊடக தர்மம்" போன்றன பற்றி....?**

ஊடக சுதந்திரம் என்பதும் ஊடக தர்மம் என்பதும் ஊடகங்கள் தலையீடு இன்றி செயல்படுவதையும் அவ்வாறு செயல்படுகையில் ஊடகங்கள் தமக்கென்று வகுத்துக்கொள்ளும் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து செயல்படுவதையும் குறிப்பிடலாம்.

தலையீடு இன்றி எனும்போது தாங்கள் நினைத்தபடி சமூகத்து நெறிமுறைகளுக்கு மாறாக செயல்படுவதை ஊடக சுதந்திரம் என்று கொள்ளமுடியாது. அது பத்திரிகை தர்மமும் ஆகாது.

**ஊடகம் "நடுநிலையிலிருப்பது" "சார்பு நிலையிலிருப்பது" என்பன தொடர்பான தங்கள் கருத்து நிலை?**

**"நடுநிலை" எனும் ஒன்று இருக்கிறதா? எப்படி?**

நடுநிலை என்பது செய்திப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை நாட்டில் அல்லது சமூகத்தில் உள்ள சகல தரப்பினருடைய செய்திகளுக்கும் பாதிப்பின்றி இடம் கொடுப்பதைத் தான் குறிப்பிடவேண்டும். அவ்வாறு இடம்கொடுக்கும்போது பத்திரிகை தனக்கென வரித்து கொண்ட கொள்கையிலும் கவனம் செலுத்தியாக வேண்டும்.

சார்புநிலை என்பதைப் பொறுத்தவரை ஒரு கட்சி பத்திரிகை எனில் பிரச்சினைக்கு இடமில்லை. ஆனால் நடுநிலைப் பத்திரிகைகள் பெரும்பாலும் நாட்டின் அல்லது மக்களின் பொதுவான நலனை வைத்து அதற்கேற்ப தன் நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது என் கருத்து.

இன்றைய பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு பார்த்தால் நடுநிலை என்று ஒன்று இருப்பதாகவே தோன்றவில்லை. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வருப வருக்கு அந்தப் பத்திரிகையின் சார்பு நிலை இலகுவில் புரிந்துவிடும்.

**ஊடகங்களின் அரசியல் என்றொன்று இருக்கிறதா? அது எவ்வாறமைய வேண்டும்?**

இன்றைய வாழ்வியலில் அரசியல் என்பது இரண்டறக் கலந்துவிட்ட ஒரு சமாச்சாரம். எனவே அரசியல் பேசாத அல்லது அரசியல் செய்திகளை வெளியிடாத பத்திரிகை இருக்க முடியாது. பொதுப் பத்திரிகை என்று கூறுபவை நான் முன்பு குறிப்பிட்டது போன்று சகல செய்திகளுக்கும் இடங்கொடுப்பது அவசியம். அதிலும் எந்தத் தரப்புக்கு எந்த வகையில் இடம்கொடுப்பது என்பதை பத்திரிகையாளர்களே முடிவுசெய்ய வேண்டும். ஏனென்றால் ஒரு மக்கள் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட ஒரு தரப்பினருக்கு வழங்கப்படும் அளவுக்கு அவர்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினருக்கும் இடம் கொடுக்கவேண்டுமா என்பது சர்ச்சைக்குரியது. இதில் பத்திரிகையின் விற்பனை விடயமும் தங்கியுள்ளது. நிலைமைக்கேற்பவும் சம்பந்தப் பட்ட விடயங்களைப் பொறுத்தும் பத்திரிகை கள் இதில் முடிவெடுக்க வேண்டும்.

**பல்வேறு நோக்கங்கள் - பின்புலங்கள் - வசதிகளோடு தற்போது நிறைய இதழ்கள், ஏடுகள் வருகின்றமை தொடர்பில், தங்கள் அவதானிப்பு எத்தகையது? இதற்காக பெருமையுறவும் கவலையுறவும் வேண்டியன?**

உண்மையில் சொல்லப்போனால் இப்போதெல்லாம் புதிய பத்திரிகைகள் எனக்கு கிடைப்பதில்லை, வாசிப்பும் குறைந்து விட்டது. கிடைக்கும் சஞ்சிகை ஏடுகளை அவகாசம் கிடைக்கும்போது படிக்கிறேன். இதற்கு முக்கிய காரணம் உடல் நிலை அத்துடன் கண்பார்வை, அதிக வேலை கண்ணுக்கு உதவாது, மூளையும் சோர்வடைந்து விடுகின்றது. செய்தி ஏடுகளையே அனேகமாக படிக்கிறேன். அது கட்டாயமாகவும் இருக்கிறது.

ஒரு விடயம் என்னவென்றால் வசதியும் பண வரவும் இருப்பவர் எவராய் இருந்தாலும் புத்தகத்தை அல்லது இதழ்களை வெளியிடுவது இலகுவாக இருக்கிறது. அவைகளின் தரம் பற்றிய விடயம் வேறு.

ஓர் அன்பர் அண்மையில் தனக்கு வேண்டியவர் வெளியிட்டதாகக் கூறி ஆங்கிலக் கவிதை நூல் ஒன்றைக் கொடுத்தார். அதன் தோற்றம் வடிவம் எல்லாம் எடுப்பாகவே இருந்தன. அச்சுக்கலை எவ்வளவு தூரம் முன்னேறியிருப்பதைப் பறைசாற்றுவதாக அதனைப் பார்க்கப் புரிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது. ஆனால் அதன் உள்ளடக்கம், எழுதியவருக்கும் ஆங்கிலம் சரியாகத் தெரியவில்லை. அச்சடித்தவர்களும் அதைப் பற்றி கவலைகொள்ளாமல் அடித்து கொடுத்திருக்கிறார்கள்.

இதேநிலை இப்போது வரும் ஏடுகள் பலவற்றில் காணப்படுகின்றன. அந்தக் காலத்தில் அகமுடையாளின் அதி முக்கிய ஆபரணங்களை அடைவுவைத்து அல்லது முழுமையாக விற்று புத்தகம் போட்டவர்கள் உண்டு. இன்று எதை வேண்டுமானாலும் எழுதி ஏடுகளை வெளியிடும் வசதியும் வாய்ப்பும் (வெளிநாட்டு) பணவரவும் தாராளமாகக் கிடைக்கின்றது. வெளியீட்டு வளங்களும் குறைவில்லை. பேச்சாளருக்கும் குறைவில்லை. ஆனால் இப்படி அச்சாகும் ஏடுகள் எல்லாம் வாசிக்கப்படுகின்றனவா என்பது ஒரு கேள்விக்குறி. எதுவானாலும் தரமான ஏடுகளும் பத்திரிகை மற்றும் நூல்களும் எப்பொழுதுமே வரவேற்புக்குரியவையே. எமது நூலகங்களுக்கு அவை அழகும் அரணும் அளிப்பவையாகவே இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

**பத்திரிகை - படைப்பாளி உறவுநிலை பற்றி....? அன்று - இன்று ஒப்பிட முடியுமா?**

பத்திரிகை படைப்பாளி என்றால் பத்திரிகைகளுக்கு எழுதுபவர்களாகவும் இருக்கலாம் - பத்திரிகையில் இணைந்து அதன் ஓர் அங்கமாகவே செயல்படுபவராகவும் இருக்கலாம்.

பொதுவில் பத்திரிகைகள் செய்தி ஏடுகளானால் என்ன கதை கட்டுரைகளை மட்டுமே பிரசுரிப்பவையாக இருந்தாலென்ன கொள்கை ரீதியில் இல்லாவிட்டாலும் தொழில் முறையில் அவைகளுக்கிடையில் போட்டிகள் எப்பொழுதுமே இருந்துதான் வருகின்றன. இதில் பொறாமையைப் பற்றி கூறவேண்டாம். அதனால் பத்திரிகையாளர்களுக்கிடையிலும் கூட சீரான உறவுமுறை இருந்ததாக - இருப்ப தாக - குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகையாளர் மத்தியில் தெரியவில்லை. இது ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை என்றே நான் பார்க்கின்றேன். இதற்கு பத்திரிகைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துகின்றவர்கள் - அதாவது உரிமை யாளர்கள் - ஏனைய பத்திரிகையாளர்களுடன் தமது பத்திரிகையாளர்கள் தொடர்புகளை வைத்துக் கொள்வதை விரும்பாமையும் ஒரு காரணமாக இருக்கலாம். கொழும்பில் இம் மாதிரி நிலைமை குறைவு - அங்கு பத்திரிகையாளர் அமைப்புக்களும் - தொழிற் சங்கங்களும் இடையூறின்றி செயல்படமுடிகின்றது.

**சமூக கலாசார விழுமியங்கள் தொடர்பில் பத்திரிகைகள் அவற்றுடனிணைந்த ஆக்க இலக்கியகாரர் ஆற்றவேண்டிய கடமைகள் என்ன? பொறுப்புகள் என்ன?**

பத்திரிகை என்று சொன்னால் அதுவும் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகள் என்று சொல்லும்போது அவைகளின் பிரதான நோக்கமும் கடமையும் பொறுப்பும் சமூகத்தின் கலை கலாசார விழுமியங்களின் வளர்ச்சிக்கு உதவுவதும், அவைகளில் சீர்குலைவுகள் ஏற்படாமல் பாதுகாப்பதுமாகும். இவைகளைத் தவிர்த்து செயல்பட துணிதல் வெற்றிபெறமாட்டாது. அதே போல் பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை அனுப்பும் கதை, கட்டுரை, கவிதைகளைப் படைப்போரும் அவ்வாறு பத்திரிகைகளின் போக்குக்கமைவாகவே தம் படைப்புகளை உருவாக்கி அனுப்ப வேண்டும். ஏனென்றால் குறித்த பத்திரிகைக்கென்று சில வரைமுறைகள் இருக்கலாம். அவற்றுக்கு மாறானவை அவைகளால் ஏற்றுக்கொள்ளாமல் விடப்படலாம். ஆனால் தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கு இது பொருந்தாது.

**தகவல் ஒன்றை இனங்காண்பது, பின் அதையே உண்மை திரிபுறாது செய்தியாக்குவது, செய்திக் கட்டுரையாக்குவது தொடர்பில் இன்றைய தலைமுறைச் செய்தியாளருக்கான தங்கள் ஆலோசனை என்ன?**

**ஏனெனில் செய்தி, செய்தி வடிவம், உள்ளடக்கம் தொடர்பில் நிறைய குறைகள் இருப்பதாக கூறப்படுகிறதே?**

பொதுவில் சமூகத்தில் எங்கும் எந்நேரமும் ஏதாவது சம்பவம் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. அதாவது அச்சம்பவங்களிலிருந்து ஒரு செய்தியின் கூறு வெளியிடப்பட்டு கொண்டுதான் இருக்கிறது என்பதையும் காணலாம். ஆனால் இவ்வாறான செய்திகளில் தான் பணிபுரியும் பத்திரிகைக்கு எது முக்கியம் என்பதை பத்திரிகையாளனும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு செய்தி இடம்பெற்று அதில் சம்பந்தப்பட்டவர்கள் அதனை மறைக்க முயல்கின்றார்கள் என்றால் அது பத்திரிகையாளனுக்குப் புரிகிறது என்றால் அதன் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள முயல்வதை புலனாய்வு செய்திகளுக்குரிய அம்ச மாகக்கருதலாம். உண்மையைச் சரியான ஆதாரங்களுடன் கண்டுபிடித்துவிட்டால் அச் செய்தியை எவ்வாறேனும் பத்திரிகையாளன் வெளியிட வேண்டியது அவன் கடமையும், பொறுப்புமாகின்றது. அவ்வாறான நிலைமையில் அவனுக்கு அவன் சார்ந்துள்ள நிறுவனமும், உயர்நிலை ஆசிரியர்களும் நிச்சயம் ஆதரவளிக்க வேண்டும். செய்தியை ஒளிப்பவர்களுக்கு அது பிடிக்காது போனாலும் வாசகர் மத்தியில் அப் பத்திரிகைக்கு மதிப்பும் மரியாதையும் நம்பகத் தன்மையும் அதிகரிக்கும்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் பணிபுரிந்தவரான டிலானே என்ற பத்திரிகை ஆசிரியர் இது பற்றி குறிப்பிடுகையில் அதிகாரிகளால் மறைக்கப்படுகின்ற செய்தியைக் கண்டுபிடித்து - அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொண்டதின் பின்னர் அதனை மறைத்து வைக்கும் உரிமை பத்திரிகையாளனுக்கு கிடையாது. அதனை உடனடியாகவே வெளிப்படுத்தி அச்செய்தியை பொதுமக்களுக்குரிய தாக்கிவிட வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒரு செய்தி கிடைத்துவிட்டால் அதிலுள்ள முக்கியத் தன்மையை செய்தியாளன் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அந்த முக்கியத் தன்மையானது தனது பத்திரிகையின் வாசகர்களுக்கு எவ்வாறு வழங்கவேண்டும் என்பதை அவன் அனுபவத்தின் மூலமே பெற்றுக் கொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக கல்வி அமைச்சர் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஒரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்துகிறார். அந்த உரையின் இடையில் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக் கெல்லாம் அரசு வருங்காலத்தில் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை பணம் வழங்க விருப்பதையும் அறிவித்துக் கொண்டு உரையை மேலும் நீடித்து பல அறிவித்தல்களுடன் முடிக்கிறார். இதில் வறிய மாணவர்களுக்கு பணம் வழங்கும் விடயம் முக்கியமாக இருப்பது புலப்படும். எனவே பத்திரிகையாளன் இந்த விடயத்தை முதன்மைப்படுத்திக் கொண்டு தன் செய்தியை எழுதுவான். அமைச்சர் பல விடயங்களை தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் அழுத்தம் கொடுத்து பேசிவிட்டு இந்த விடயத்தை இடைநடுவில் எழுந்தமானமாகக் குறிப்பிட்டிருந்தாலும் "செய்தி மூக்கு" உள்ள செய்தியாளன் அதனைக் கண்டுகொள்வான். எனவே அமைச்சரின் பேச்சில் காணப்படும் இதர விடயங்களை தனது செய்திக்கான பின்புலமாக வைத்துக்கொண்டு தான் முக்கியமென்று இனங்கண்ட விடயத்தை முன்னுரையாக எழுத அவன் தயங்கமாட்டான். அந்த வகையிலேயே அதன் தலைப்பும் அது வெளிவர வேண்டிய பக்கம் முதலியவையும் அமையும். இது ஒரு புது விடயம், பெரும்பாலான மக்கள் குறிப்பாக ஏழை மாணவர் பயனடையும் விடயம் என்பதால் அது அன்றைய பத்திரிகையின் முதல்பக்க தலைப்புச் செய்தியாக - அதை விட முக்கியமானது கிடைக்காதவிடத்தில் வெளிவரும் என்று கூறத் தேவையில்லை. செய்திகளை எழுதும்போது செய்தியாளன் கருத்தில் கொள்ளவேண்டிய சில முக்கிய குறிப்புக்களை ஒழுக்கநெறிகள் (*Code of conduct*) என்று இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் கழகம் வெளியிட்டுள்ளது. அவைகளை செய்தியாளர்கள் அறிந்திருப்பது அவர்களுக்கு பயனளிப்பதாகவிருக்கும். அவைகளில் சிலவற்றை இங்கு தருகிறேன். இவை இலங்கை பத்திரிகை சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை.

- ❖ விடயங்களை சரிபார்த்துக் கொள்க.
- ❖ எல்லா தரப்பினரின் கருத்துக்களையும் அறிந்து கொள்க.
- ❖ தனிப்பட்ட்வர்களின் வாழ்க்கை இரகசியங்களுக்கு மதிப்பளியுங்கள்.
- ❖ இளையோரின் உரிமைகளை பாதுகாருங்கள்.
- ❖ தகவல் தருபவர்களைப் பாதுகாருங்கள் (காட்டிக் கொடுக்காதீர்கள்)
- ❖ சமூகப் பிரச்சினைகளில் விசேஷ அக்கறை காட்டுங்கள்.
- ❖ அச்சுறுத்தல் மூலம் செய்தி சேகரிக்க முயலாதீர்கள்.
- ❖ உங்கள் தொழிலின் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- ❖ பொதுநலத்தை நோக்கிப் பணியாற்றுங்கள்.

அச் செய்தி வெளியாகும் காலகட்டத்தை உத்தேசித்து ஆசிரிய தலையங்கமும் எழுதப் படலாம்.

பொதுவில் ஒரு செய்தியின் தன்மைக் கேற்பவே அதன் வடிவமும் அமையும்.

**முன்னர் குறிப்பிட்டவாறான மூன்று காலப்பகுதிகளிலும் தங்களுடன் இணைந்து பணியாற்றியவர்களின் ஆர்வம், அர்ப்பணிப்பு, உழைப்பு மற்றும் ஆளுமைகள் பற்றி பகிர விரும்புவது?**

ஆரம்பத்தில் நான் வீரகேசரியில் தான் பழகுனராக பயிற்சிபெற்று அங்கேயே உதவி ஆசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டேன். அக் காலத்தில் என்னுடன் சேர்ந்தவர்கள் பத்திரிகையாளர்களாக வி. ஏ. திருஞானசுந்தரம், டி. எம். முருகையா ஆகியவர்களைக் குறிப்பிட வேண்டும். வீரகேசரியில் தொழிலாளர் போராட்டம் ஒன்று இடம்பெற்று கதவடைப்பும் நடத்தப்பட்டதால் நானும் முருகையாவும் எங்களுக்கு மூத்தவரான எஸ். எம். கோபாலரத்தினமும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான ஈழநாடு பத்திரிகையில் வந்து இணைந்து கொண்டோம். திருஞானசுந்தரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து பல முக்கிய பதவிகள் பணியாற்றினார்.

அக் காலத்தில் எங்களுக்கு முன்னோடிகளாக ஆதித்தன், ஏ. பெருமாள், டேவிட்ராஜூ, இப்றாகிம் மற்றும் பலர் இருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறையில் சிறப்பு பயிற்சி பெற்றவர்களாய் இருந்தனர். ஆசிரியராக கே.பி. ஹரன், செய்தி ஆசிரியராக கே.வி.எஸ் வாஸ், பிரதம உதவி ஆசிரியராக வெங்கட்ராமர் முதலியோர் இருந்தனர்.

கே.வி. எஸ். வாஸ் அக்காலத்தில் தமிழ் செய்திப் பத்திரிகைத் துறையில் ஒரு விற்பன்னராகவே கருதப்பட்டார். நானும் அவ்வாறே இன்றும் கருதுகிறேன். அக் காலத்தில் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராக திரு. சிவநாயகமும், தினகரனின் திரு. நாதன் அவர்களும் ஆசிரியர்களாக இருந்தார்கள். பிற்காலத்தில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தினகரனில் சிறிது காலம் ஆசிரியர் பணியேற்று ஈழத்து இலக்கியவாளர்களுக்கு உறுதுணையாக செயற்பட்டிருந்தார். பின்னர் அவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பின்னர் யாழ் பல்கலைக்கழகம் உருவாகிய போது அதன் பொறுப்பினை கையேற்று சிறப்பாக பணி புரிந்திருந்தார். அக் காலத்தில் இடம்பெற்ற எனது திருமணத்தையொட்டிய வைபவத்தில் பேராசிரியர் கைலாசபதி தமது துணைவியாருடன் வந்திருந்து வாழ்த்தியமை இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது. அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதைய பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரமுகர் அமரர் ஏ.கே. சுப்பிரமணியமும் வந்திருந்தமை நினைவு கூறத்தக்கது.

வீரகேசரியில் ஆசிரியர் பிரிவில் பணிபுரிந்த எனக்கு முதுநிலையாளர்களாய் இருந்த நினைவில் உள்ள சிலர் பற்றி சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

ஆசிரியர்/ அமரர் கே.பி. ஹரன் அவர்கள் லண்டனில் இடம்பெற்ற தார்மிகப் புனருத்தாபன மகாநாடொன்றில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்பிய கையோடு நிர்வாகத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். பின்னர் அவர் யாழ்ப்பாணம் வந்து கே.சி. தங்கராஜா சகோதரர்களால் ஆரம்பிக்கப் பட்டிருந்த ஈழநாடு தினசரியின் முகாமைத்துவ ஆசிரியராகப் பணியேற்றிருந்தார். அக் காலத்தில் தான் நானும் வேறு சில நண்பர்களும் அப் பத்திரிகையில் இணைந்துகொண்டோம்.


செய்தி ஆசிரியராகவிருந்த கே.வி.எஸ். வாஸ் ஆசிரியராகப் பதவிஏற்றம் பெற்றார். ஏறத்தாழ இதே காலத்தில் தான் வீரகேசரியின் தொழிலாளர் வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு இடம்பெற்றது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த முக்கியமான பலர் கருங் காலிகளாக மாறியதால் புதியவர்களையும் இணைத்துக்கொண்டு நிர்வாகம் பத்திரிகையை மீண்டும் அச்சிடத் தொடங்கியது. அதனால் வேலை இழந்த பலரும் வேறு தொழில்களை நாடி செல்லலாகினர். நான் ஈழநாட்டில் சேர்ந்தேன்.

டேவிட் ராஜூ இவர் தமது வேலாயுதம் என்ற பெயரை கிறிஸ்தவப் பெயராக மாற்றிக் கொண்டிருந்தார். பெரும்பாலும் இரவு பணிகளின்போது இவரிடமே நான் பயிற்சி பெற்றேன்.

ஏ. பெருமாள் பல மொழிகளை தெரிந்தவராய் இருந்தார். இப்றாகிம் இஸ்லாமியர் தொடர்பான செய்திகளை கையாள்வார். ஆதித்தன் உலகச் செய்திகளுக்குப் பொறுப்பானவர். லோகநாதன் வாரமலர் ஆசிரியர். இராமசாமி அவருக்கு உதவி ஆசிரியர். பாலசுந்தரம், தேவநாராயணா, வென்ருவாஸ்ட்ரன் முக்கிய நிருபர்கள். றெஜி மைக்கலும் லேக் ஹவுசில் இருந்து விலகியபின் சிறிதுகாலம் எங்களுடன் நிருபராக பணி புரிந்தார்.

ஈழநாடுவில் சேர்ந்ததன் பின்னர் கொழும்பு தொடர்புகள் அற்றுப் போய்விட்டன. எஸ்.எம். கோபாலரத்தினம் செய்தி ஆசிரியராக துடிப்புடன் அந்தக் காலத்தில் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. ராஜா அரியரத்தினம் ஆசிரியராகவும் கே.பி. ஹரன் முகாமைத்துவ ஆசிரியராகவும் இருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் அதற்குமுன் தினசரி பத்திரிகை எதுவும் வெளிப்படாதிருந்த நிலையில் ஈழநாடுவில் பணிபுரிந்த அனைவருமே அர்ப்பணிப்புடன் பணி புரிந்தார்கள் என்பதை குறிப்பிடவேண்டும். அதன் காரணமாக பத்திரிகையும் சிறப்பாக வெளிவந்து மக்கள் ஆதரவைப் பெற்று வளர்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் அப்பத்திரிகை பலவிதமான சிக்கல்களுக்குள்ளானது ஒருபுறமிருக்க நிர்வாக சிக்கல்களுக்கும் உள்ளானது முக்கிய பொறுப்புக்களில் இருந்த பலரும் தவறிழைக்கத் தொடங்கினார்கள். இவைகளுக்கிடையில் தமிழ் மக்களின் ஏகோபித்த மதிப்பினை பெற்றிருந்த அப் பத்திரிகை சில அமைச்சர்களின் ஏற்பாட்டில் வடபுல தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ் நூல் நிலையம் தீயிடப்பட்டபோது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் எரித்து சாம்பலாக்கப் பட்டது.

மீண்டும் மிக மிடுக்கோடு தலைதூக்கிய பத்திரிகை இயக்கங்களின் ஊடுருவலால் பெரும் பாதிப்புக்குள்ளானது. இறுதியில் இந்திய படைகளின் வரவையடுத்து மீண்டும் இயக்கம் ஒன்றினால் வெடிவைத்து தகர்த்தப்பட்டது. அது வரை காலமும் அப்பத்திரிகையில் இணைந்திருந்த நான் தொழில் மற்றும் வருமானம் இன்றி பெரும் துன்பத்துக்காளானேன். எம்முடன் பணிபுரிந்த பலரும் வேறு பத்திரிகைகளுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டார்கள்.

**அக்காலப் பகுதிகளில் மறக்கமுடியாத சவால்கள், சாதனைகள், வேதனைகள் எனப் பகிரக்கூடியன? இதன்போது உடனிருந்து பணியாற்றியோர் பற்றி?**

தனிப்பட்ட முறையில் எனது சாதனைகள் என்று பெரிதாக நான் எதனையும் கூறிக்கொள்ள முயல்வதில்லை. ஒன்றை மட்டும் கூறுவதில் எனக்கு மகிழ்ச்சியுண்டு. நான் பொறுப்பாக இருந்த காலத்தில் பத்திரிகைத் துறையில் எம்மோடு சேர்ந்து பணியாற்றி பயிற்சி பெற்ற பல அன்பர்கள் பல பத்திரிகைகளில் இன்று பணிபுரிகிறார்கள். வெளிநாட்டிலும் பலர் ஊடகங்களில் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி அறியும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னை அவர்கள் நினைவுகூர்கிறார்களா என்பது குறித்து நான் கவலை கொள்வதில்லை.

யாழ்ப்பாணத்திலும் ஒரு தினசரி பத்திரிகையை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை ஈழநாடு நிலைநாட்டிக் காட்டியது. அந்த வகையில் உரிமையாளர்களும் (அவர்களில் முக்கியமானவர்கள் இன்றில்லை) ஆசிரியர் பகுதியிலும் ஏனைய பிரிவுகளிலும் பணி புரிந்தவர்கள் மற்றும் அப் பத்திரிகையின் பிராந்திய செய்தியாளர்களும் பாராட்டுக் குரியவர்கள். அவர்களைப் பின்பற்றி இன்று யாழ்ப்பாணத்திலிருந்து பல பத்திரிகைகள் வெளி வந்து கொண்டிருக் கின்றன. இவைகளுக்கு ஒரு சிறந்த முன்னோடியாக அப் பத்திரிகை விளங்கியது என்பதில் சந்தேகமில்லை.

அக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலுமே பத்திரிகையாளன் தன் கடமையைச் செய்யத் துணிகையில் அதனை ஒரு சவாலாகவே எடுத்துக் கொள்கிறான். எடுத்துக் கொள்ள வேண்டும். தான் முகம் கொடுக்கும் விடயத்தை அல்லது செய்தியை மிகத் திறமாக கையாள வேண்டும். ஏனைய பத்திரிகைகளை விட தன் படைப்பு தன் பத்திரிகையில் முன்னதாகவும் சிறப்பாகவும் வெளிவர வேண்டும் என்பதில் அவன் முனைப்பாக இருப்பான்.

**"ஊடகவியலாளன்" என்பதற்கு வகைமாதிரி *(Rolemodel)* இருக்கலாமா? சாதக - பாதக விளைவுகள்....?**

ஊடகவியலாளன் என்பதற்கு வகை மாதிரி என்று *(Role Model)* இருக்க வேண்டும் என்பதில் எனக்கு அதிக கரிசனை கிடையாது. ஏனென்றால் எந்த ஒரு பத்திரிகையாளனும் தனி ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு செயல் படுவதில்லை. ஆனால் முதுநிலையாளர்களைப் பார்த்து பல விடயங்களை அறிந்து கொள்வதும் அவைகளை தன் திறமைக்கேற்ப பயன் படுத்துவதும் அவன் கடமையாகின்றன. சிலர் இயல்பாகவே விடயங்களை கிரகித்துக் கொள்கிறார்கள். விரைவாகவும் திறமாகவும் செயல்பட்டு பேரும் புகழும் பெற்று விடு கிறார்கள். இன்னும் சிலர் மெதுவாக செயல் பட்டு அனுபவம் பெற்று சிறப்படைகிறார்கள்.

பத்திரிகையாளர்களில் பிறப்பிலேயே பத்திரிகையாளனாக விளங்கக் கூடியவர்கள் என்று எவரும் கிடையாது. பட்டறிவின் மூலம் - சிலர் விரைவாகவும் சிலர் சற்று பின்தங்கியும் முன்னேறுகிறார்கள். பொதுவில் பத்திரிகையாளனின் பயண வெற்றிக்கு அவன் பெறுகின்ற பயிற்சிதான் அடித்தளமாக அமைகின்றது என்பேன் நான்.

**இணையத்திற்குப் பழகிய நமது இளந்தலைமுறையை வாசிப்பின்பால் ஈர்க்க செய்தி/ இலக்கிய அச்சு ஊடகங்கள் ஆற்றவேண்டிய பணி எத்தகையது? எவ்வாறிருக்கவேண்டும்?**

செய்தி/ இலக்கிய அச்சு ஊடகங்களும் இப்போதைய காலகட்டத்தில் இணையத்தை புறந்தள்ளிவிட்டு பணியாற்றுவது இயலாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையே காணப்படுகின்றது. எனவே இணையத்திற்கு பழகிய இளைஞர்களை எங்கு முடியுமோ அவ்வந்த பிரிவுகளில் இவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

இணையத்திற்குப் பழகியவர்களும் தமது அன்றாட தேவைகளுக்கு விடயங்களை அறிந்து கொள்ள பத்திரிகை சஞ்சிகைகளை நாடவே செய்கிறார்கள். அதனால் தங்கள் வெளியீடு களில் அவ்வாறான இளம் சந்ததியினரைக் கவரும் வகையிலான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனலாம்.

**"நான் ஒரு பத்திரிகையாளன்" என்பது தொடர்பான தங்கள் கருத்து நிலை?**

பத்திரிகையாளன் என்பவன் குறிப்பாக செய்திப் பத்திரிகையாளன் என்பவன் "செய்தி மூக்கு" *(News Nose)* உடையவனாய் இருக்க வேண்டும் என்பார்கள். அதாவது தன்னைச் சுற்றி நிகழ்கின்ற சம்பவங்களில் ஏதோ ஒரு செய்தியைக் கண்டுகொள்ளக் கூடிய தன்மை - அவ்வாறு கண்டுகொள்ளும் செய்தியை மெருகுபடுத்தி செப்பனிட்டு தான் சார்ந்த பத்திரிகையில் வெளிவரச் செய்பவனாய் இருப்பான். கட்டுரையாளன் - கவிஞன் - கதாசிரியனாக இருந்தாலும் கூட தனது படைப்புக்கான ஒரு அம்சத்தை தனது அன்றாட பணிகளில், அவதானிப்பில் கண்டுபிடித்து விடுவான். இது அவனது ஆளுமையிலிருந்து வெளிப்படும் ஒரு பண்பு. சாதாரண ஒரு மனிதனின் பார்வைக்கும் இவர்களின் பார்வைக்கும் வேறுபாடு உண்டு. இவர்கள் எதனையும் ஆழமாகப் பார்ப்பவர்கள்.

**தாங்கள் "தொழில்முறைப் பத்திரிகையாளன்" என்பது தொடர்பான தங்கள் கருத்து நிலை?**

ஆம், எனக்கு வேறு தொழில் தெரியாது. வேறு எந்த பயிற்சியும் எனக்குக் கிடையாது. ஏழத்தாழ 55 வருடகாலம் இத் தொழிலில் குப்பை கொட்டி வருகின்றேன். இன்னும் ஓயவில்லை.

**தாங்கள் "தொழில்முறைப் பத்திரிகையாளன்" என அழைக்கப்படக்கூடியவரா? தொழில்முறைப் பத்திரிகையாளன் - தார்மீகப் பொறுப்புள்ள பத்திரிகையாளன் வேறு வேறா?**

இல்லை. எந்தத் தொழிலாய் இருந்தாலும் அதற்கென்று சில வரைமுறைகள், நெறிமுறைகள், ஒழுக்கசீலங்கள் உண்டு. எனவே இரண்டையும் ஒன்றாகவே நான் பார்க்கிறேன். பத்திரிகையாளன் என்பவன் தனக்குரிய ஒழுக்க முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**தொழிலும் தார்மீகமும் வேறுபடும் புள்ளி களை அடையாளப்படுத்த முடியுமா?**

ஓர் உதாரணம்: ஒரு பத்திரிகை நிறுவனத்தில் நண்பர் ஒருவர் பத்திரிகை யாளராய் இருந்தார். அவர் முழுக்கவும் சோஷலிஸவாதி - பணிபுரிந்த பத்திரிகையோ முதலாளித்துவ ஆட்சிமுறையை ஆதரிப்பது. சம்பளத்துக்காக பணிக்கு சென்றவர் - பணியில் இருக்கும்வரை அப் பத்திரிகையின் கொள்கைகளுக்கு மாறு இல்லை. சொந்த வாழ்க்கை வேறுவிதமாக இருந்தது. இதில் இரண்டும் வேறுபடும் புள்ளிளைக் கண்டு பிடித்துக் கொள்ளுங்கள்.

**தங்களது பத்திரிகைத்துறை அனுபவத்தில் தங்களது அல்லது தாங்கள் நம்பும் அரசியல் சித்தாந்தம் என்ன?**

சோஷலிஸ ஜனநாயக சமுதாயம் உருவாக வேண்டும் என்பதில் எனக்கு அக்கறையுண்டு. சொந்த வாழ்க்கையில் இயன்ற அளவு பின்பற்ற முயன்றிருக்கின்றேன்.

**தங்களது இளமைக் காலத்தில் இலங்கை யில் ரசிய - சீன சார்பு என இரண்டு மார்க்சிய சித்தாந்தப் போக்குகள் செயற்பட்டன. தங்களது நிலைப்பாடு அப்போது எவ்வாறிருந்தது?**

ரஷ்ய மற்றும் சீன சார்பு மார்க்சிய சித்தாந்தப் போக்குகள் அரசியல் மட்டத்தில் கட்சிகளாக செயல்பட்ட அளவில் நான் இருந்த பத்திரிகைகளில் அவைகளின் செயற்பாடு களுக்கு போதிய இடம் வழங்குவதில் நான் தவறியதில்லை.


**தங்களது இளமைக் காலத்தில் இருந்த மார்க்சிய செயற்பாட்டாளர்கள் தொடர் பாக கூறமுடியுமா?**

உண்மையில் சொல்லப்போனால் சமசமாஜக் கட்சியின் தலைவர்களாய் இருந்த டாக்டர் என். எம் பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்டி சில்வா முதலியவர்களின் செயற்பாடுகள் என்னைக் கவர்வதாய் இருந்தன. கொழும்பில் பணிபுரிந்தபோது பாலா தம்பு அவர்களின் வர்த்தக ஊழியர் தொழில் சங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்துள்ளேன்.

கம்யூனிசத் தலைவர்கள் டாக்டர் விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன் போன்றோரும் என்னைக் கவர்ந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தில் பீகிங் கார்பு கம்யூனிசக் கட்சியின் ஏ.கே. சுப்பிரமணியம் எனது நெருங்கிய நண்பராக விளங்கினார். எல்லாவித அரசியல் கட்சிகளிலும் எனக்கு நண்பர்கள் இருந்தார்கள். பத்திரிகையாளனாய் இருப்பவனுக்கு இது இன்றியமையாத தன்மையாக இருக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

**தங்களது அனுபவத்தில் தங்களைச் சுற்றி முதலாளித்துவக் கூறுகளை எவ்வடிவங்களில் உணர்த்துகின்றீர்கள்?**

நான் பணிபுரிந்த இடங்கள் எல்லாமே தனிப்பட்ட முதலாளிகளின் நிறுவனங்கள்தான் என்றாலும் சில வித்தியாசங்களை உணர முடிந்தது. கொழும்பில் நான் முதலில் சேர்ந்து பழகி பின் முறையாகப் பணிபுரிந்த நிறுவனம் ஆரம்பத்தில் தனி ஒரு முதலாளியின் சொத்தாக இருந்தபோதிலும் பின்னர் அது ஒரு குழுவின் அல்லது பல உரிமையாளர்களைக் கொண்ட ஒரு சபையின் நிர்வாகத்தில் இருந்தது. எவ்வாறு இருந்தாலும் பத்திரிகையின் கொள்கை கோட்பாடுகள் எல்லாமே ஒரு விதம் தான். பொதுவில் தமிழ் பத்திரிகைகள் என்ற முறையில் தமிழர் நலன் சார்ந்ததாக - அவர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பவையாக இருந்தன. அந்த வகையில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த அரசியல் தரப்பினருக்கு அதிக பரப்புரைகள் கிடைப்பதாக இருந்தது. அவ்வாறு செய்யாத விடத்து பத்திரிகையின் விற்பனை படுத்துவிடும் என்ற நிலைமை இருந்தது.

ஒரு விடயத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கொழும்பில் எந்த நிறுவனமானாலும் தொழிற்சங்கங்கள் செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. அதனால் தொழிலாளர்களும் ஏனைய அலுவலர்களும் பத்திரிகையாளர்களும் கூட ஏதாகிலும் அமைப்பில் இணைந்து தம் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் அந்த நிலைமை இல்லை என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

**"பத்திரிகா தர்மம்" என்பது தங்களது எண்ணத்தில் எவ்வாறமைகிறது?**

இது ஒரு சிக்கலான கேள்வி. ஒரு பத்திரிகையானது தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. அந்த கொள்கை நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலைமையில் அப்பத்திரிகை ஒரு கட்சிப் பத்திரிகையாக இல்லாமல் பொது அல்லது நடுநிலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுவதாக அறிவித்துக் கொண்டு பணியாற்றும்போது அந்த நடுநிலைக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றி செயல்பட வேண்டும். அதுவே பத்திரிகை தர்மம் என்று நான் கருதுகிறேன்.

**இலங்கையின் தமிழ்ப் பத்திரிகையியலின் அரசியல் பற்றிக் கூறமுடியுமா?**

இலங்கையில் வெளிவருகின்ற பத்திரிகைகளில் குறிப்பாக அரசு பத்திரிகைகளைத் தவிர ஏனைய அனைத்துமே தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை முன்வைத்தே செயற்படுகின்றன. அதுதான் அவைகளின் அரசியல் அடிநாதமாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்று வரும்போது அவைகளிலும் முரண்பாடுகளைக் காண்கின்றோம். இந்த முரண்பாடுகளின் அடிப்படையில் சில பத்திரிகைகள் தளம்பிக் கொண்டு இருப்பதுவும் அவைகளின் ஒருவித அரசியலாகவே தென்படுகின்றது.

**தேசியம் தொடர்பான தங்கள் கருத்துநிலை எத்தகையது?**

தேசியம் - தேசம் என்பதை ஆங்கிலத்தில் நேஷன் *(Nation)* என்று கொள்வோமானால் அதற்கு லிப்கோ அகராதியில் ஒரு தேச மக்கள், மொழியின் மூலமாகவும் சரித்திர பூர்வமாகவும் பிணைக்கப்பட்டு கூடி வாழும் மக்கள் என்று கருத்து வழங்கப்பட்டுள்ளது. நேஷன் என்பதற்கான ஒக்ஸ்போர்ட் அகராதியின் கருத்து : *community of people having mainly common descent, history, language etc, forming state or inhabiting territory* இதன் கருத்து பின்வருமாறு அமையும்.

பொது வம்சாவளி, வரலாறு, மொழி என்பவற்றை பிரதானமாகக் கொண்டு ஒரு தேசமாக அல்லது ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் சமூகம்.

அவ்வாறாயின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இந்த வரைவிலக்கணத்திற்கு பொருத்தமான ஒரு சமுதாயம் என்பதில் சந்தேகமில்லை. இந்த சமூக அமைப்பினை மாற்றிவிட அல்லது ஆங்காங்கே ஊடுருவல்களை ஏற்படுத்தி இவர்கள் ஒரே பிரதேசவாசிகள் அல்லது சமூகத்திதைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதைத் தோற்றுவிக்க கடந்த காலங்களில் பெரும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன. இதனை இந்த மக்கள் பெரும் இழப்புகளுக்கு மத்தியிலும் தற்காத்து வருவதைப் பார்க்கின்றோம்.

பேரின மக்களைப் பொறுத்தவரை இந்த நாடு முழுவதுமே தமக்கே உரியது என்பதை நிலைநாட்டிக் கொள்ளவும் அதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தை நிராகரித்து விடவும் அவர்களில் ஒரு பிரிவினர் முயற்சித்து வருகின்றனர். ஐ.நா.கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழர்கள் விடுக்கும் கோரிக்கை சரியானது என்றே நீதிமான்கள் ஒப்புக் கொள்கிறார்கள். இந்த நிலைப்பாட்டையே நானும் சரியானதெனக் கருதுகிறேன்.

**தற்போது ஒரு பத்திரிகை எதை அல்லது எவற்றை எப்படிப் பேசவேண்டும்/ பேசலாம் எனக் கருதுகிறீர்கள்.**

தற்போது மட்டுமல்ல எப்போதுமே ஒரு பத்திரிகையானது அதனை ஆரம்பிக்கின்றவரின் கொள்கை கோட்பாடுகளைத்தான் பேசவேண்டும். பத்திரிகையை ஆரம்பிப்பவரே அதன் ஆசிரியராகவும் இருக்கலாம் - அல்லது ஏதாகிலும் ஒரு நோக்கத்தைப் பின்புலமாக வைத்து ஒருவர் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கலாம். எதுவானாலும் அதற்கென்று ஒரு கொள்கை இருக்கும் - இருக்கவேண்டும்.

எதுவானாலும் நாட்டையும் மக்களையும் அவைகளின் நலன்களைச் சார்ந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**தங்களுடைய தனிப்பட்ட/ ஊடகத்துறை வாழ்க்கை பற்றி கூறமுடியுமா?**

நான் முன்பே கூறியதுபோல நான் பணிபுரிந்த பத்திரிகைகள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமானவை. எனவே தனிப்பட்ட என் கருத்துக்கள் அவைகளில் பெரிதாக இடம்பெறவில்லை. எதுவானாலும் ஒரு தொழில் முறை பத்திரிகையாளன் என்ற முறையில் எனக்கு வழங்கப்பட்ட கடமைகளை என் மனநீதிக்கு ஏற்றாற்போல் செய்ய முனைந்துள்ளேன். இதில் எனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் புகுத்த முனைந்ததில்லை. நான் செய்த பணிகளுக்குப் புறம்பாக கபடமான உழைப்புகளிலும் நான் ஈடுபட்டதில்லை.


**பத்திரிகைத் துறையில் தாங்கள் அடைந்த திருப்திகள்/ திருப்தியீனங்கள் தொடர்பான பகிர்வு....?**

பல சமயங்களில் நாம் செய்யும் பணிகள் சரியாகக் கவனிக்கப்படாமல் போவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையளிக்கும் விடயமே. இருந்தாலும் அன்றாடம் நான் செய்யும் பணிகள் அதாவது நாம் வழங்கும் ஆக்கங்கள் அச்சாகி பத்திரிகையாக வெளிவரும்போது அதில் ஏற்படும் திருப்தியே அலாதிதான். அதுவும் எமது ஆக்கங்கள் பிறரால் படிக்கப்பட்டு விமர்சிக்கப்படுவதை அறியும்போது ஏற்படும் மகிழ்ச்சியே தனிதான். ஆனால் நாம் பாடுபட்டு கருத்துக்களையும் கருவூலங்களையும் தேடி ஏதாவது ஒரு ஆக்கத்தை உருவாக்கி வழங்கியிருக்கும்போது அதனை வேறு யாராவது தலையிட்டு வேண்டுமென்றே தடுப்பார்களானால் - சிதறடிப்பார்களானால் அது பெரும் அதிப்தி யையும் கவலையையும் ஏற்படுத்துவதாய் இருக்கும்.



**தங்களது பத்திரிகைத் துறைக்கான நுழைவு - தொடர் பயணிப்பு தொடர்பில்....?**

பத்திரிகைத் துறைக்குள் நான் காலடி வைத்த சூழ்நிலை சற்று விசித்திரமானது தான். அக் காலத்தில் சிரேஷ்ட பாடசாலை தராதர சான்றிதழ் (SSC) பரீட்சையில் (ஆங்கிலமூலம்) தேர்ச்சி பெற்றதின் பின்னர் ஆசிரியர் தொழிலில் ஈடுபட நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும் பத்திரிகை தொழிலிலும் நாட்டம் இருந்தது. அந்த வகையில் ஒரு பெரியவரின் ஆலோசனையை ஏற்று வீரகேசரிக்கு விண்ணப்பம் அனுப்பினேன். அடுத்த வாரமே அழைத்து நேர்முகம் நடத்தினார்கள். நான் ஏற்கனவே ஓரளவு மொழிபெயர்ப்பில் பயிற்சி பெற்றிருந்ததால் அவர்கள் வைத்த சோதனையில் இலகுவாக வெற்றிபெற முடிந்தது. பத்திரிகை தொழிலிக்கு அக்காலத்தில் ஆங்கில அறிவும் மொழிபெயர்ப்பும் மிக முக்கியமாகக் கருதப் பட்டது. ஆறு மாதம் பயிற்சி பின்னர் நிரந்தரமாக ஆசிரியர் பகுதியில் நியமனம். அங்கிருந்து விலகிய சூழ்நிலை பற்றி முன்னரே கூறினேன்.

பின்னர் ஈழநாடுவில் இணைந்து அப்பத்திரிகை நிறுவனம் தகர்க்கப்படும் வரை அங்கேயே பல நிலைகளில் - இரவு பொறுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், வாரமலர் ஆசிரியர், உதவி ஆசிரியர், பதில் ஆசிரியர் என்று பல பதவிகளில் இருந்துள்ளேன். அப்பத்திரிகையில் இருந்த காலத்தில் - பன்னீரன், வர்ணம், பேனா, பெரு, பி.எஸ்.பி; போன்ற புனை பெயர்களில் கதை, கட்டுரை, கவிதை என பல ஆக்கங்களை படைத்துள்ளேன்.

அதிலிருந்து விலகியதன் பேரில் சிறிது காலம் வட்டுக்கோட்டை வள்ளியம்மை வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக பணி புரிந்ததின் பின்னர் உதயனில் ஆசிரியர் பிரிவில் இணைந்துகொண்டேன்.

**தங்களது பத்திரிகைத்துறை - குடும்ப வாழ்க்கை இரண்டுக்குமிடையேயான ஊடாட்டம்....?**

ஈழநாடு பத்திரிகையில் பணிபுரியும் காலத்திலலேயே நான் விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணம் புரிந்துகொண்டேன். எங்களுக்கு ஒரு ஆண்மகன் உண்டு. அவர் இப்போது தொலைபேசி நிறுவனமொன்றில் முக்கிய பணியாளராக இருக்கின்றார். எனது குடும்ப வாழ்க்கை எந்த வகையிலும் எனது ஊடகப் பணிக்கு இடையூறாக இருந்ததில்லை. எனது மனைவியும் ஊடகத் துறையில் இருந்தவர் என்பதால் எனது பணிகள் தொடர்பான அவர்களின் ஒத்துழைப்பும் உண்டு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருதத்

# தடை

அவர்கள் இன்னும்
எங்கள் காவலர்கள்
முகமுழுதும் புன்சிரிப்புடன்
பக்குவமாய்த்தான் கதைக்கிறார்கள்.
அவர்களிடமும்
எங்களிடமும் கூட,
எந்த விபரப்பட்டியலும் தற்போது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்கள்
மிகவும் பொல்லாதவை
என,
அவர்கள் சொல்கிறார்கள்.
மிகவும் பொல்லாதவை
புகைப்படங்கள்
என்கிறார்கள். "யூரியூப், பேஸ்புக், ருவிற்றரில்
எல்லாமுமே வருகின்றன" - என,
தன் உப்பிய கன்னங்களை
தடவியவாறு அவர்களில் ஒருவன்
சொல்லுகின்றான்.
இருப்பினும்,
தங்கள் கட்டளைப் பணியகம்
பொறுப்புச் சொல்லவேணும் - என்கின்றான்.
எங்கதையும்
எங் கவிதையை
எங்கள் வீட்டின் முற்றத்தில்
நாம் படிக்க முடியாது.
அவர்கள் இன்னும் எங்கள் காவலர்கள்.
"இந்தப் பிரதிகளை நீங்கள்
என்ன செய்வீர்கள்?"
"எங்கள் மொழி உங்களிற்குப் புரியாதே?"
"நாங்கள் கவனமாக
தலைமைப்பீடத்திற்கு அனுப்புவோம்"
"பிறகு?"
"அவர்கள் என்ன செய்வார்கள்?"
"ஆழமாகப் படிப்பார்கள்! பரிசீலிப்பார்கள்!!"
"பிறகு?"
"அழகிய தாள் ஒன்றில்
பக்குவமான சொற்களால்,
உங்கள் மீது வழக்குத் தொடரமுடியும்"
என்று,
கண்ணியமாக பதிவுதபால் ஒன்றை
அனுப்பலாம்
"ம்ம்.... ம்ம்ம்...."
"பிறகு?"
"அல்லது அவர்கள்
பிரதிகளை எரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு அடையாளங்களின் உலகமயமாக்கம்: உள்ளூர் அறிவை உலகமயமாக்கும் வழிமுறை



பண்பாட்டு அடையாளங்களின் மீட்டுருவாக்கம் தொடர்பான சிந்தனைகள் இன்று வலுப்பெற்று வருகின்றன. ஒரு மனிதக் குழுவின் பண்பாட்டின் சகல தனித்துவக் கூறுகளாலும் அந்தக் குழுமத்துக்கான தனி அடையாளம் ஒன்று நின்று நிலைபெற்று வந்துள்ளது. அத்தகைய அடையாளங்களை இன்றைய உலக மயமாக்கச் செயன்முறையினுள் உள்ளடங்கும் 'ஓரினப்படுத்தல்' (*homogenization*) என்ற பொறிமுறை இழக்க வைத்துள்ளது. இந்த ஓரினப்படுத்தல் பொறிமுறையானது அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினைக் காட்டிலும் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் மிகவும் உயர்வானது. 'அடையாளங்கள் அற்ற உலகு' என்பது இந்தப் பொறிமுறையின் உள்ளார்ந்த அரசியலாக அமைகின்றது. இதற்கான எதிர்வினையாற்றல் பற்றிச் சிந்திப்பவர்கள் பண்பாட்டு அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்தல் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்கின்றனர்.

இ. இராஜேஸ்கண்ணன்

பொதுநிலையில் 'பண்பாட்டு மீட்டுருவாக்கம்' (*Cultural reproduction*) என்பது நிலைபெற்று வந்த பண்பாட்டின் விழுமியங்கள் நியமங்களை ஒரு சந்ததியிலிருந்து இன்னொரு சந்ததிக்கு பரிமாற்றம் செய்வதையே கருதுகின்றது. ஒரு பண்பாட்டு அனுபவத்தின் தொடர்ச்சியை காலங்கடந்து நிலைபெற வைப்பதற்கான ஒரு பொறிமுறையாக இது அமைகின்றது. இதனை 'தன்பண்பாட்டு வயமாக்கம்' (*enculturation*) சாத்தியமாக்குகின்றது. முன்னைய சந்ததியின் மரபுகள், வழக்காறுகள் மற்றும் நியம விழுமியங்களை 'நகல்' செய்வதன் வழி இது சாத்தியமாகின்றது. இந்த நகல் செய்தல் தொடர்ச்சியான ஒரு சமூக மாற்றத்திலும் பண்பாட்டு பரவுகைகளாலும் சவாலுக்கு உட்படுகின்றது. இவற்றால் பரம்பரைகளுக்கிடையிலான பண்பாட்டுக் கையளிப்பு அச்சொட்டான ஒரு நகல் செய்தல் பொறிமுறையை தன்னகத்தே கொண்டிருப்பதில்லை. இதனால் தான் கல்வி ஏற்பாடுகள் வாயிலாக இந்தப் பண்பாட்டு அம்சங்கள் சமூக மயப்படுத்தப்படுவதன் வழி கையளிக்கப்படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலெழுகின்றது. கல்வி முறையாயினும் சரி பண்பாட்டு முறைமையாயினும் சரி ஆதிக்கம் மிக்க பண்பாட்டைத் தான் சமூக மயப்படுத்திக் கையளிக்க முனைகின்றது. இதனால் தன்பண்பாட்டு வயமாக்கல் செயன்முறையும் சவால்களை எதிர்கொள்கின்றது.

'ஆதிக்கம் மிக்க பண்பாடு' (*dominant culture*) என்பது பெரும்பான்மை மக்களால் எந்தவித எதிர்ப்புமின்றி பகிரப்படுகின்ற அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சமூகத்தில் உள்ளடங்கும் பிரதான பண்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஒரு மனிதக் குழுமத்தின் பண்பாட்டு அடையாளங்களாக முனைப் பாக்கம் செய்யப்படுபவை இந்த ஆதிக்கம் மிக்க பண்பாட்டின் அடையாளங்களே. உலகமய மாக்கச் செயன் முறையில் அடங்கும் ஓரினப்படுத்தல் பொறிமுறையும் ஒரு வகையில் ஆதிக்கம் மிக்க உலகப் பண்பாட்டின் அடையாளங்களைப் பரப்புவதன் வழியே உலகப் பொதுப் பண்பாட்டைக் கையளிக்க எத்தனிக்கும் ஒரு தந்திரோபாய வழிமுறைதான். இந்த ஆதிக்கம் என்பது இயங்கும் தளங்கள் வெவ்வேறானவை. முதலாவது ஒரு குறித்த மனிதக் குழுமத்தை அடையாளப்படுத்த, மற்றது வேறுபடும் தனித்துவம் வாய்ந்த பல்வேறு மனிதக் குழுமங் களுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாளங் களை நிராகரித்து அடையாளமற்ற உலகைச் சித்திரிக்க முனைகின்றது. இந்த ஆதிக்க நிலையில்தான் மக்கள் தமது சொந்த, தனித்துவமான பண்பாட்டு அடையாளங்கள் குறித்து அதிக சிரமத்தை கொள்கின்றனர்.

உலக மயமாக்கம் என்ற செயன்முறை யானது மக்களிடத்தில் பண்பாட்டு அடையாளங்கள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை தந்துள்ளது. *Yi wang* என்பவர் தனது *Globalization enhances cultural identity (2007)* என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார். இவர் தனது முடிவை நிலைநாட்ட *Deny (2005)* என்பவரின் விளக்கங்களை முன்வைக்கின்றார். 'நான் யார்? நாம் எங்கு செல்கிறோம்? மற்றும் நாம் எவற்றைக் கொண்டுள்ளோம்? என்ற வினாக்களுக்கு பதிலளிப்பதுதான் பண்பாட்டு அடையாளம்' என்று *Deng* குறிப்பிடுவதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். 'விஞ்ஞான தொழினுட்பம் அல்லது பொருளாதார அபிவிருத்தி என்ற அடிப்படைகளில் உலகத்தை ஒரு புள்ளியில் குவியவைத்தல் என்ற கோட்பாட்டை உலகமயமாக்கம் பிரதி பலிக்கலாம். ஆனால், ஆழமாக உணர்ந்தால் உலகமயமாக்கம் பண்பாட்டு அடையாளத் தினையும் மக்களிடத்தில் அவர்களின் பண்பாட்டு ஒருமை நிலை மற்றும் தனித்துவ த்தினையும் வளர்த்தது' என்று *Yi Wang* கூறுகின்றார். இவரது கருத்தின்படி உலகமயமாக்கம் இரு பரிமானங்களில் பண்பாட்டு அடையாளத்துடன் தொடர்புறு கின்றது. ஒன்று, 'ஒன்றாயிருத்தல் தொடர்பான உணர்வு' *(Sense of togetherness)* மற்றது, 'உள்ளூர் அறிவுக்கான உலகமய முக்கியத்துவம்' *(global significance of local knowledge)*. இவற்றில் இரண்டாவது எண்ணக்கருவானது உள்ளூர் மற்றும் தனித்துவம் வாய்ந்த மனிதக் குழுமங்களின் பண்பாட்டு அடையாளங்களின் நிலைபேற்றுக்கு அவசியமான சில பொறிமுறை களை வேண்டிநிற்கிறது.

உள்ளூர் அறிவுக்கான உலகமய முக்கிய த்துவம் என்பது எந்த வழிமுறைகளில் சாத்திய மாக்கப்படலாம்? இதற்கு இரு வழிகள்உள்ளன. ஒன்று, ஒரு மனிதக் குழுமம் தன் சொந்த பண்பாட்டின் வேர்களைச் சரிவரக் கண்டு வெளிக்கொணர்தலும் பாதுகாத்தலும் மற்றொன்று, அதன் தொடர்ச்சியாக தம் பண்பாட்டு அடையாளங்களின் சமூக, பண்பாட்டு மற்றும் பொருளாதாரப் பெறுமானங்களை உலக சமுதாயத்துக்கு அறிமுகம் செய்தல். இந்த வழிமுறை சரியான தர்க்கங்களுடனும் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளுடனும் செய்யப்படும் நிலையில் 'பண்பாட்டு உலகமயமாக்கம்' என்பதற்கு பதிலாக 'பண்பாட்டு அடையா ளங்களின் உலக மயமாக்கம்' என்பது சாத்திய மாகலாம். இது உண்மையில் உள்ளூர் அறிவை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாகின்றது.

உள்ளூர் அறிவை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்வதில் உலகளாவிய நிலையில் எதிர்கொள்ளும் சவால்களிலும் உள்ளூர் நிலையில் எதிர்கொள்ளும் சவால்கள் வலிமை வாய்ந்தவை. உள்ளூரில் ஆதிக்கம் மிக்க பண்பாட்டு அடையாளங்களாக முதன்மை பெற்ற அம்சங்களும் உள்ளன. ஆதிக்கம் குறைந்த அடையாளங்களாக நீடித்த பண்பாட்டுக் கூறுகளும் உள்ளன. உள்ளூர் நிலைமையினைப் பொறுத்தவரையில் இவை பெரு மரபுகளாயும், சிறு மரபுகளாயும் அமைந்து விடுகின்றன. பெருமரபுகள் ஆதிக்கம் மிகுந்தவை. சிறு மரபுகள் ஆதிக்கம் குறைந்தவை. உள்ளூர் நிலையில் கூட சிறு மரபுகள் தம்மை பெரு மரபுகளுக்குள் உள்ளடக்கிக் கொள்வதையே ஒரு வகை 'தகுதிப்படுத்தல்' அல்லது 'தராதரப்படுத்தல்' என்று கருதும் நிலை உள்ளது. இந்நிலையில் உள்ளூர் பண்பாட்டு அடையாளங்களை உலகம் என்ற தளத்திற்கு 'தளமாற்றம்' செய்வது குறித்த சவால்கள் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவைஞன் சுப்பிரமணியன்



# "அளப்பருங்கருணை" வினாக்களின் ஆற்றுகை

நீண்ட எதிர்பார்ப்புகளை விளம்பரங்களும் எழுத்துரு இயக்கம் மற்றும் அணிசெய் திறனாளிகளின் பெயர்களும் ஏற்படுத்திய பிரமிப்புகளுடன் அரங்கேற்றப்பட்டிருந்தது "அளப்பருங் கருணை" நடன நாடகம்.

வங்கம் தந்த நோபல் பரிசு வென்ற மாபெருங் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் ஆழமான சிந்தனை வழித்தோன்றிய நாடகமான "சன்யாசி" யைத் தழுவியும் அவரது "கீதாஞ்சலி" மற்றும் "வசந்தத்தின் சுழற்சி" ஆகிய கவிதைத் தொகுதி களிடமிருந்து பெறப்பட்ட கவிவரிகளால் உயிர்ப்பூட்ட ப்பட்டதுமாக ஈழத்தின் மூத்த நாடகர் குழந்தை ம. சண்முக லிங்கம் அவர்களால் எழுத்துருவாக்கப் பட்டிருந்தது. மூத்த நடன நெறியாளர்களாகிய திருமதி சாந்தினி சிவனேசன் மற்றும் திருமதி தேவந்தி திருநந்தன் ஆகியோரால் பயிற்றுவிக்கப்பட்டு, சிறந்த இளம் இசையாளர் தவநாதன் றொபேட் அவர்களால் இசையூட்டப் பட்டிருந்தது. காட்சியமைப்பினை நுண்கலைத் துறை விரிவுரையாளர் தா.சனாதனன் மேற்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியமைப்பை தி. தர்மலிங்கமும் ஒலிய மைப்பை ப. குமணதீபனும் செய்திருந்தனர். அனைவருமே ஈழத்தின் துறைசார் விற்பன்னர்கள். நாடக மாந்தரும் துறைசார் பயிற்சி பெற்றவர்கள் மொத்தத்தில் யாழ் குடாநாட்டிலிருக்கக்கூடிய உச்ச வளங்கள் ஒருங்கு குவிக்கப்பட்ட ஒரு அரங்காற்றுகை என்பதன் எதிர்பார்ப்புகள் மிகையாகவே இருந்தன. காரணம் "ஆர்கொலே சதுரர்" ஏற்படுத்தியிருந்த உச்ச அதிர்வு எனலாம்.

நாடக மாந்தர், ஒளி, ஒலி, இசை என்ற கூட்டு நல்லதொரு வெளிப்பாடு என்பதில் ஐயமேதுமில்லை. சுவைஞர்களின் எதிர்பார்க்கைக்கு ஏதுவாயிருந்தன. பாத்திர வடிவமைப்பும் பொருத்தமும் நுட்பமான தெரிவு. எனினும் உறுத்தலான விடயம் புதுமை என்ற அடைமொழியுடன் புகுத்தப்பட்ட நகரும் காண்பியத்தட்டிகள் நடன மாந்தரின் வெளிப்படுத்துகைக்கூடே நகர்கின்ற காண்பியங்கள் நுகர்வில் ஒரு தடங்களாக அல்லது கவனத்திருப்பான்களாகவே அமைந்து விட்டன. முன் அறிமுகத்தில் விபரிக்கப் பட்டதற்கமைய கொண்டிருந்த எதிர்பார்க் கைகள் அரங்கில் அவர்களாலேயே தகர்க்க ப்பட்டிருப்பது கண்கூடு.

இவை இவ்வாறிருக்க எவ்வளவோ அரங்கப் பட்டறிவுள்ள மூத்த முன்னோடி நாடகாசிரியர் உருவாக்கிய பிரதி நுகர்வோனுக்கு ஐயங்களை அல்லது தெளிவற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றுள் இரு விடயங்களை முன்னிறுத்த விரும்புகிறேன்.

1) வசந்தி யாருமற்ற ஏழைச் சிறுமி. இவள் மீதான ஊராரின் அக்கறையீனம் அவளது பெற்றோர் வழி வந்தது என்பதை "நீ யாருடைய மகள்?" எனக் கேட்டு அறிந்து வெறுப்பதாய் அமைந்திருக்கிறது. ஆயினும் பெற்றோர் ஊரார் வெறுக்கும்படி அல்லது ஒதுக்கும்படி அப்படி என்னதான் செய்திருந்தனர் என ஓரிடத்திலும் சிறுகுறிகாட்டுகை கூட பிரதியிலோ ஆற்றுகையிலோ இல்லை.

2) முற்றும் துறந்தவராக தன்னை முன்னிலைப்படுத்துகிற துறவியின் சிறுமி (வசந்தி) மீதான ஈர்ப்புக்கான அக - புற காரணங்கள் வலுவானதாகவும் தர்க்கரீதியாவும் ஆற்றுகையில் இடம்பெறவில்லை. மறை பொருளாக கூறப்பட்ட காரணங்கள் கூட வலுவானதாக இல்லை.

இவையிரண்டும் நாடகம் ஏற்படுத்தியிருக்க வேண்டிய அதிர்வை உணர்ந்துகொள்ள தடையாகவே அமைந்துள்ளன. பெரும் பொருட்செலவு - மற்றும் மனித உழைப்பு என்பவற்றுடன் அளிக்கையிடப்பட்ட நிகழ்வின் நோக்கம் எட்டப்பட்டிருக்கிறதா என்ற கேள்வி தவிர்க்கமுடியாதபடி எழுகிறது.

ஏற்பாட்டாளர்களிலொருவர் "நிறையக் கருத்துகள் செறிவாகவும் குறியீட்டுப் பாங்கிலும் சொல்லப்படுகிறது. இரண்டாம் மூன்றாம் தடவைகளில் விசயங்கள் வெளிப்பட்டுவிடும்" என்று அன்பர் ஒருவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தபோது அழுவதா சிரிப்பதா எனத் தடுமாற முடிந்தது". அரங்காற்றுகை என்பது சொல்லவந்த கருத்தை தகவலை ஒரே தடவையில் துல்லியமாகவும் தெளிவாகவும் நுகர்வோனுக்குத் தொற்ற வைக்க வேண்டும்" எனும் பொதுவான கருத்துக்கு மதிப்பளிக்காத ஆற்றுகையாக "அளப் பெருங் கருணை" திகழ்ந்தது என்பதற்கு வேறு காரணங்கள் தேவையில்லை என நினைக்கிறேன். மேலும் ஒரு (அரைநாள் ஊதியம்) தொகையைச் செலவிட்டு இரண்டாம் மூன்றாம் தடவை பார்க்கும் வலுவில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எனும் வினா தவிர்க்க வியலாததாகிறது.


மொத்தத்தில் முழு எதிர்பார்ப்புக் களையும் தகர்த்து புதிய புதிய கோணங்களில் நிறைய விடயங்களை சர்ச்சைகளை கிளறி விட்டிருக்கிறது "அளப்பெருங் கருணை" ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. க. சிந்துதாசன்



# விமோசனம்

காற்றைப் புணர்ந்து
அலையிலும் கரையிலுமாய்....
அலைவுறும் துரும்புகளாய்....
மனசுகள்.

ஆணியில்
தொங்கிக் கொண்டிருக்கும்
என் மனசை
சொற்கள் சுவைக்கின்றன.

ஓங்கியறையும் சொற்களில்....
சிந்துமென் குருதியை
புசித்துப் போகிறது காலம்.

வனாந்தர வெளியொன்றில்
தங்கியுறைகிறது
புன்னகைத் திரையிட்ட
என் மூச்சுக்காற்று.

மூச்சுக்காற்றை
கட்டியிழுக்கும் சொற்களை
கடந்து செல்கின்றன
எந்த அடைகளையும்
சேராமற் திமிறியெழும்
என் எண்ணங்கள்.

ஏகாந்த வழியில்....
என் கால்பட்டு
உருமாறக் காத்திருக்கும்
கல்லினுள்ளே
“தேரை” தன்நாட்களை
எண்ணிக் கொண்டிருக்கிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. கதிர்காமநாதன்

# இரவு நாடகம்

கையில் அழைப்பிதழ் கிடைத்தவுடன் படித்து முடித்தேன். மனமும் உடனேயே போக வேண்டுமென்று தீர்மானம் எடுத்தது. அது ஓர் இசை நாடகத்திற்கான நிகழ்வு. நிதி திரட்டுவதற்காக அதனை அரங்கேற்றுகின்றார்கள். இடமோ யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்தான். நேரம் மாலை ஆறு மணி எனச் சொல்லி, அது இரண்டு மணித்தியாலத்தில் முடிந்துவிடும் எனவும் விளக்கம் இருந்தது.

எனது மனம் அதனைப் பார்க்க உறுதி பூண்டு விட்டது. இரவு நிகழ்வுகள் பார்த்து கன காலமாகிவிட்டது. மாலையானதும் வீட்டுக்குள் முடங்குவது இயல்பானதாகிவிட்டது. இரவென்றால் பயம். தேவையில்லாமல் இரவுப் பயணத்தை ஏன் தேர்ந்தெடுப்பான், என்ன நடந்தாலும் அது அபாயகரமானதொன்றாகவே நடக்குமென மனம் தீர்மானித்து விடுகின்றது.

இரவு எட்டு மணியானதும் எங்கள் வீட்டு "கேற்" பூட்டப்பட்டுவிடும். வீட்டிலுள்ள அனைத்து ஜீவன்களும் அடங்கிவிடுவார்கள். தத்தமது பிடித்த அலுவல்களில் மூழ்கிவிடுவார்கள். பிள்ளைகளும் இப்போது வளர்ந்து விட்டார்கள்.

"தம்பி வெளியால போறியோ.... எட்டு மணிக்குள் வீட்டை வந்திடு.... எங்கள தேட வைக்கப்போடாதை"

"ராவில என்ன நடந்தாலும் யாருக்கும் தெரியாது"

முந்தி நடந்த பயங்கரமான சம்பவங்கள், அனுபவங்கள், வெளிச்சம் வந்தாலும், இப்போதும் பழைய கசப்பான "இருட்டை" மறக்க முடியாதுள்ளது. மொத்தத்தில் அரசாங்கம் இப்போது "ஊரடங்குச் சட்டம்" போடாத நிலையிலும் நாங்கள் போட்ட மாதிரி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் கையில கிடைத்த ழைப்பிதழை பார்த்தேன். யோசித்தேன்.

"ஆறு மணிக்கு தொடங்கினால் எட்டு ணிக்கு முடிஞ்சுபோகும். எட்டேகால் ட்டாலும் பரவாயில்லை. ரா.... எண்டாலும் திடலாம்.... இப்படி யோசித்தாலும் ஞ்சம் கலக்கமாகத் தான் இருந்தது.

நேரம் அதிகம் பிந்தினால்....
மனது குழம்பிக் கொண்டிருந்தது.
என்ன செய்வது?
னவி உதவிக்கு வந்தாள். அதுவும் கணித ஞ்ஞான ஆசிரியை. மூளை நன்றாக வேலை ய்யும். கணக்கு நன்றாகப் போகும்.

"தஞ்சியக்காவின்ர கண்ணனிட்ட ளுங்கோ. காரைநகர் டிப்போவில வேலை ய்கிறார். கடைசி பஸ் எத்தனை ணிக்கெண்டு கேட்டால் சொல்லுவார். பிறகு ட்டுவாறதைப் பற்றி யோசிக்கலாம்."

"அடடா.... நீயல்லவோ மனுசி...."
நான் பாடத் தொடங்கிவிட்டேன்.

"கண்ணன் வந்தான். எங்கள் கண்ணன் வந்தான். எழுத்தாளர் துயரம் தீர்க்க கண்ணன் வந்தான்"

"காணும் நிப்பாட்டுங்கோ.... சரி.... நீங்கள் .... தனியாகவே.... போகப்போறியள்"

"இல்லை.... உம்மையும் கூட்டிக்கொண்டு தான் போறன்."

"இசை நாடகமென்றால்.... மகளையும் கூட்டிக்கொண்டு போவமே?"

"இப்ப கதைக்க வேண்டாம்.... நாங்கள் போறதுக்கு வழியைப் பார்த்துப் போட்டு யோசிப்பம்"

தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது கண்ணன் சொன்னார். இரவு எட்டு நாற்பதுக்கு கடைசி பஸ். அப்ப முடிஞ்ச கையோடு ரவுணுக்குப் போனால், காரைநகர் பஸ்சை பிடிச்சுப்போடலாம்.

"கடைசி நேரத்தில் இரவைக் காரணம் காட்டி மகளைக் கூட்டிச் செல்வதைத் தவிர்த்தோம். இலங்கையில் புதிய ஆட்சி மலர்ந்தும், சரியான தீர்வுகள் கிடைக்காத தமிழ் மக்கள் போல் எனது மனம் சந்தோஷம் இல்லாமல் இருந்தது. ஒன்று இரவு நேரத்துப் பயணம். மற்றையது வீட்டில் பிள்ளைகளின் பாதுகாப்பு. இருந்தும் எங்கள் வெளிநாட்டுப் பயணம் அண்டை நாடுகளுக்குப் பரவத்தான் செய்தது.

"போட்டு வாங்கோ ஒண்டுக்கும் பயப்படாதையுங்கோ. அப்பா நாங்கள் இருப்பம். போன் இருக்குத்தானே பத்து மணிக்குள்ள வந்திடுவியல் எல்லே"

எல்லாமே சரிதான். என் முகத்தில் சிரிப்பைக் காணோம். சார்ஜ் போன தொலைபேசி போல் நானிருந்தேன்.

"நேரம் போனால் ஆட்டோவை பிடிச்சுக் கொண்டு வந்திடுங்கோ"

பிறகென்ன அமெரிக்காவே ஒப்புதல் அளித்துவிட்டது. ரசியாவை தாக்கினால் என்ன.... சிரியாவைத் தாக்கினால் என்ன.... எதனையும் நியாயப்படுத்தலாம் தானே. புறப்பட்டு விட்டோம்.

மண்டபத்தில் நண்பர்கள் இருந்தார்கள். பலர் பட்டணத்தைச் சுற்றி இருப்பவர்கள். நிகழ்வு முடிந்தவுடன் பயமில்லாமல் போகலாம்.

"அண்ணை வந்திட்டியள். ராவில வந்து போறது பிரச்சினை எண்டியள்"

"எல்லாம் பழகத்தானே வேணும்"

"அண்ணி இவர் ராவில வெளிக்கிட மாட்டார் எதில வந்தனீங்கள்"

"முடிஞ்ச பிறது பஸ்சிலயே போகப் போறியள்"

"நேரத்தைப் பாத்திட்டு வெளிக்கிட்டி டுங்கோ" உள்ளே இருக்கையில் அமர்ந்தோம். நாடகம் ஆரம்பமானது. கலைஞர்கள், இளம் பிள்ளைகள் குதித்து, துள்ளி ஓடினார்கள். மான் குட்டிகளாகத் தெரிந்தார்கள். விரித்தார்கள். நாடகம் .... மனிதர்கள் எதைத் தேடுகிறார்கள் எனச் சொன்னது. எது உண்மையான வாழ்க்கை என்பதை யோசிக்க வைத்தது. மின் விளங்குகள் வர்ணங்கள், தாளப் பிடிப்புடனான இசை, ரசிகர்கள் கலையில் மூழ்கிக் கொண்டிருந் தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ரசித்தபடி நேரத்தை கவனித்துக் கொண்டேன். நாடகமோ அரைமணி நேரம் தாமதித்தே தொடங்கியது. அதனால் நாடகம் முடிவுபெற அரைமணி நேரம் அதிகமாகப் போகின்றது.

"மனைவி என்னைக் கவனித்தாள்"

"முடிஞ்சிடும்.... அந்தரப்படாதையுங்கோ"

"இல்லையப்பா.... நேரம் சென்றால் C.T.B ஐ பிடிக்க முடியாமல் போயிடும்.

*8.00.... 8.15.... 8.30....*

இடையில வெளிக்கிட்டு போறது சரியில்லை. சரியாக 8.40 க்கு நாடகம் நிறைவடைந்தது. அவசரமாக வெளியில் வந்தோம். தெரிந்தவர்களைக் கவனியாது வந்து விட்டோம். தெருவில் கூட்டத்தைக் காண வில்லை. இருட்டு அதிகம் படர்ந்திருந்தது. என்னமோ நெஞ்சு படபடத்தது.

"ஐ.சி. கொண்டந்தனீரே?"

"உங்களுக்கு என்னப்பா? இப்ப என்னத்துக்கு ஐ.சி."

"ராவில தேவையாயிருக்கும். பொலிஸ் காரங்கள் செக் பண்ணினால்....

"எங்கட காலத்திற்கு பாதுகாப்பு அமைச்சு .... இண்டைக்கு ராவிலயிருந்து, வெளியால போகேக்க ஐ.சி கட்டாயம் தேவையெண்டால்"

திருநெல்வேலிச் சந்தியில் இரண்டு ஆட்டோக்கள் மாத்திரம் நின்றன. அதிலொன்று எங்களை கண்டதாலோ என்னவோ ஓடியே போய்விட்டது.

நிறுத்தியிருந்த ஒரே ஒரு ஆட்டோவை அணுகினோம். ஆட்டோ சாரதி கீழேயிருந்த "ஹெட் லைற்" ஏதோ வேலைசெய்து கொண்டிருந்தார்.

"எங்க போகணும் ஐயா....?"

"தொல்புரம்"

"தொல்புரமா....?

அவர் அப்படியொரு ஊரை இப்போது தான் கேள்விப்பட்டது போல எங்களை எழுந்து நின்று பார்த்தார்.

"தம்பி.... காரைநகர் பாதை.... மானிப்பாய்.... சங்கானை.... சித்தன்கேணீ....

"அட.... சங்கானைப் பக்கமே.... நான் அந்தப் பக்கம் வாறதில்லை...."

"கடவுளே! ஐ.நா.விற்கான அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதி சமந்தாபவரே தொல்புரம் எண்டால் தெரியுமெண்டு சொல்லிப் போட்டு எல்லே.... விளையாட்டு விளையாடிட்டு போயிருப்பார்.

"தம்பி யோசிக்குது...."

"தம்பி வருவியள் தானே?"

"இல்ல.... நான் பக்கத்திலயெண்டால் போவமெண்டு யோசிச்சன்"

"தம்பி.... யோசிக்காதையுங்கோ.... போவம்.... வேணுமெண்டால் காசு கூடத் தாறன்."

"இல்லை.... ஐயா.... இனி வீட்டை போற நேரம். உவ்வளவு தூரம் போட்டுவர.... ரொம்ப லேட்டா போயிடும்.... பொறுங்கோ வேற ஆட்டோ பிடிச்சு விடுறன்"

கடைகளை பூட்டத் தொடங்கினார்கள். அவர் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ஒருவரும் வர மறுத்தார்கள்.

ஐ.எஸ்.... ஐ. எஸ் அழிப்பதற்கு உதவப் போய்.... தங்கள் நாட்டுக்கு ஆபத்து வந்து விடும் என நினைக்கும் நாடுகள் போல் பின் வாங்கிப் போட்டார்கள்.

நேரம் போய்க் கொண்டிருந்தது.

"தம்பி வெளிக்கிடுவம்"

ஆட்டோக்காரர் எங்களைப் பரிதாபமாகப் பார்த்தார்.

நேரமோ ஒன்பது பத்தை தாண்டியது. காரைநகர் இ.போ.ச. பஸ்வண்டி இப்போது மானிப்பாயை நெருங்கியிருக்கும்.

"சரி.... ஐயா கூட்டிக்கொண்டு போறன்.... கொஞ்சம் *wait* பண்ணுங்கோ.... ஹெட் லைற் எரியுதில்ல. நேற்றுத்தான் வேலை செய்சனான்.... அதான் யோசிக்கிறேன். வழியில பொலிஸ் பிடிச்சா....

எங்கட கூட்டமைப்புக்குள்ள தான் பிரச்சனை எண்டு எழுதித் தள்ளுறாங்கள் எண்டால் இங்கையும் பிரச்சனையா?

அவர் திருத்த வேலை செய்து பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலனில்லை.

"ஏறுங்கோ.... போவம்.... ஒரு விசயம். ஆனைக்கோட்டையில இறக்கிவிட்டால் போவியள்தானே...."

நானும், மனைவியும் விழி பிதுங்கினோம்.

"என்ன தம்பீ.... அங்க இறங்கி நாங்கள் என்ன செய்யிறது.... நீங்க தான் கொண்டுபோய் விடவேணும்"

"சரி.... சரி.... பயப்படாதையுங்கோ.... வழியில ஏதாவது ஆட்டோ கிடைச்சா அதில ஏத்தி விடுறன்"

ஆட்டோ கைதடியில் அமைந்துள்ள மாகாணசபை போல் தட்டு தடுமாறி ஓடியது.

கொக்குவில் சந்தியில் புதுக்கோவிலுக்கு எதிரேயிருந்த மூடாதிருந்த வாழைப்பழக் கடைக்கு முன்னால் ஆட்டோவை நிறுத்தி அதன் மின்விளக்கு வெளிச்சத்தில் ஹெட் லைற்றை திருத்தினார். வேறு மின்குமிழ் போட்டுப் பார்த்தார். அது வெளிச்சம் பரப்பியது. ஆனால் போதவில்லை.

மறுபடியும் தொலைபேசியில் யாருடனோ தொடர்புகொண்டார்.

"ஹெலோ.... மச்சான்.... பிரச்சனையாய் கிடக்கு. ஒரு சவாரி இருக்கு.... தொல்புரம்...."

"....தொல்புரமா.... அவன் மறுப்பது தெரிந்தது."

"சரி.... இனி ஒண்டும் செய்யேலாது.... நம்பி வந்த உங்களை இடையில் விடேலாது. போக வேண்டியதுதான்." ஆட்டோ கிளம்பியது.

அவரோ வெற்றிலை சப்பி.... அடிக்கடி துப்பிக் கொண்டிருந்தார்.

"பாத்தனீங்களே.... உந்தாள் குடிச்சிருக்கி றான். அதான்.... அடிக்கடி துப்பிக் கொண்டிருக்கிறான்."

"ராவில.... குடிச்சுப்போட்டு.... ஓடுறது மனைவி கண்டுபிடித்து விட்டாள்."

நான் கதை கொடுத்தேன்.


"தம்பீ, .... நீங்க எந்த இடம்"

"கல்வியங்காடு"

"கலியாணம் முடிச்சிட்டியளோ"

"ஓ.... ஒரு பிள்ளை இருக்கு.... வழமை யெண்டால் வீட்டை இருப்பன். இண்டைக்கு நண்பனின்ட பேர்த்டே பார்ட்டி.... கொஞ்சம் முசுப்பாத்தி. நெடுக இல்லை"

தெரு முழுமையாக அடங்கிவிட்டது. பொலிஸ் வாகனம் ரோந்து போனது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் என்னவெல்லாமோ நடக்கின்றது. குடித்துக்கொண்டு வாகனம் ஓட்டுவது. ஹெட் லைற்றை விட ஆட்டோ ஓட்டுநரின் ஹெட்டே குழப்பமாய் இருக்குமோ.... பத்திரிகையில் வரும் அபாயகரமான செய்திகள் மனதில் தோன்றி மறைந்தன. "அப்பா.. நாங்கள் மகளையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தால்...."

இருவரும் ஒருவரையொருவர் பதை பதைப்புடன் பார்த்தோம்.

வாலிப பட்டாளம் கூச்சலிட்டபடி மோட்டார் சைக்கிளில் பறந்து போனது. மானிப்பாய் சந்திக்கு அருகில் திறந்திருந்த கடைக்கு முன்னால் (அதுவும் ஒற்றைக் கதவில்) ஆட்டோ ஒன்று கம்பீரமாக நின்றது.

"ஐயா.... ஆட்டோக்காரரிட்ட கேட்டுப் பார்க்கிறன். ஓமெண்டால்.... உதில உங்கள ஏத்திப்போட்டு நான்.... போறன்"

அவருடைய நிலைமையும் கஸ்ரம் தான்.

ஆட்டோவை மெல்ல அருகில் நிறுத்தி, வெளியில் நின்ற ஆட்டோகாரரிடம் விஷயத்தைச் சொன்னார்.

"சரியண்ணை.... விளங்குது.... ராவில பொலிஸ்காரர்கள் வழியில மறிப்பாங்கள்.... எண்ணூறைத் தாங்கோ"

"என்ன....? கனக்க கேக்கிறியள்.... இங்கையிருந்து தொல்புரம் கொஞ்சத் தூரம் தானே?"

ஒருவாறு நாங்கள் மூவரும் பேச்சுவார்த்தை நடாத்தி (வட்டமேசை பயன்படுத்தப்படவில்லை) ஒரு உடன்பாட்டுக்கு வந்தோம்.

எங்களுடைய ஆட்டோகாரருக்கு பரம சந்தோஷம்.

"ஐயா.... அம்மா.... கவனமாய் போட்டு வாங்கோ. நான் போட்டு வாறன்."

"போட்டுவாரும் தம்பி.... குடிக்காதையும். அவர் கையில் சந்தோஷமாக பணத்தைத் திணித்தோம். நோர்வே சமாதானத் தூதுவரை நான் கண்டதில்லை. இவரையாவது நரங்கள் தூதுவராகப் பார்த்துக் கொண்டோம்.

நானும் மனைவியும் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கு எதிரே, தமிழ் சினிமாவில் கிராமத்தை விட்டு தப்பி வந்த காதல் ஜோடிகள் போல் திசை தெரியாமல் நின்றோம்.

எங்களை ஏற்றிச் செல்வதாக இருந்த ஆட்டோகாரர் திறந்திருந்த கதவினூடாக "ஐயா நில்லுங்கோ வாறன்" எனச் சொல்லிப்போட்டு உள்ளே போனார். சற்று நேரத்தில் வெளியே வந்தார்.

"ஐயா ஒரு பிரச்சினை. அவன் வர பஞ்சிப் படுகிறான்.... ஆள் படுத்திட்டான்.

"எ..ன்..ன சொல்...லுறியள்?"

"இது என்ர ஆட்டோ இல்லை. சொந்தக் காரன் உள்ளே படுத்துக் கிடக்கிறான். அவன் வருவனெண்டு நம்பித்தான்.... நா.....ன்...."

"என்ன தம்பி இப்பிடி சொல்லுறியள்.... நீங்கள் வருவனெண்டு சொன்னபடியால் தானே.... நாங்கள் வந்த ஆட்டோவையும் அனுப்பிப் போட்டம்.... (என்னத்தைச் சொல்லுறது.... இலங்கைத் தமிழர் நிலைமை உப்பிடித்தான்.... இந்தியா காப்பாற்றும்.... அமெரிக்கா காப்பாற்றும் என்று புழுகித் திரிந்து.... இப்ப பரணகம விசாரணைக்கு முன்னால....)

மனைவி தலையில் அடித்துக் கொண்டாள்.

"கடவுளே! மதுரைக்கு வந்த சோதனையைப் பார்"

"பிழைப்பா.... இப்ப தொல்புரத்துக்கு வந்த சோதனை"

"தம்பீ.... நீங்கதான் கொண்டே விட வேணும் வேறை வழியில்லை"

ஆட்டோகாரன் யோசித்தார்.

இதுவரை நேரமும் இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்த "கைத்தொலைபேசியில் *Game* விளையாடிக் கொண்டிருந்த தம்பியை உதவிக்கு அழைத்தார்"

வாறியே போட்டு வருவம்?

அவன் தலையை அசைத்தான்.

பின் ஆசனத்தில் இருந்த அந்த தம்பியும் எங்களோடு ஐக்கியமானான்.

வீட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு.

"என்னப்பா.... எங்க் நிக்கிறியள்.... நாடகம் முடியேல்லையா?


"ஒரு நாடகம் முடிஞ்சுதம்மா.... மற்ற நாடகத்தை வீட்டை வந்தவுடன் சொல்லுறன்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மெய்யியல்

## மறுவாசிப்புக்கான சில குறிப்புக்கள்



தி. செல்வமனோகரன்

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்றார் பாரதி. தமிழர்களுக்குத் தொன்ம வரலாறு, தனித்துவமான அரசியல், சமூக, பொருளாதார, கலை, பண்பாட்டு அம்சங்கள் என்ற கட்டுமானங்கள் உண்டு. அந்த அடிப்படையில் தனித்துவமான மெய்யியல் சிந்தனையும் உள்ளது. அதுவே சைவசித்தாந்தம் என்பர்.

தமிழர்களின் தனித்துவமான மெய்யியலாக - தமிழர்களுக்கே உரித்தான மெய்யியலாக சைவசித்தாந்தத்தை மறைமலையடிகள், *C.K.* சுப்பிரமணிய முதலியார், பேராசிரியர்களான க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோர் எடுத்துரைத்து நிற்கின்றனர். அதிலும் குறிப்பாகப் பேராசிரியர் க. கைலாசபதி பேரரசை நிறுவ எழுந்த பெருந்தத்துவமாக சைவ சித்தாந்தத்தை எடுத்தாண்டுள்ளார். அனவரத தம்பிள்ளை, 'திருவுந்தியாரோடு தோத்திர முறைமை நீங்கிச் சாத்திர முறைமை தோன்றுகிறது' என்று கூறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ***1999***, கைலாசபதி, ப. ***123***) கா. சிவத்தம்பியோ "திராவிட இறையுணர்வு, தமிழக வரலாற்றுத் தொன்மையுணர்வு ஆகியன காரணமாக வளர்ந்த அறிவியக்கம் தமிழர்க்கும் பாரம்பரிய இந்து மதத்திற்குமுள்ள உறவினை எடுத்து விளக்க முனைந்தபோது தமிழகத்து இந்து பாரம்பரியம் ஆரிய பிராமண வழி வரும் வைதீக நெறிப்பட்டது அல்லவென்றும் அது தமிழர்க்கே உரித்தான தனிமத நெறியொன்றினைச் சார்ந்தது என்றும் அந்த மத, மதச் சிந்தனை நெறியைச் சைவசித்தாந்தத்திற் காணலாம் என்றும் வற்புறுத்திற்று. தமிழ், தமிழ்நாட்டுத் தனித்துவம் பற்றிய அறிவு வாதத்திற்குச் சைவ சித்தாந்தம் மிக முக்கியமான பண்பாட்டு அம்சமாக அமைந்தது. (சிவத்தம்பி.கா. தனித் தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி ப. ***34***) இதே போல் நூற்றுக்கு மேற்பட்ட காரணங்களைக் கூறிச் சாத்திர முதன் னூலாக சிவஞானபோதம் தமிழின் தனித்துவமான முதன்னூல் எனக் கூறப்படுகின்றது.

பெரியாரின் வருகையோடு தோற்றம் பெற்று அறிஞர் அண்ணாத்துரையூடாகப் பெரு வளர்ச்சி கொண்ட சிந்தனை மரபே திராவிட மொழிக் கொள்கையாகும். தமிழைத் தாய்மொழியாக' அல்லது மூலமொழியாகக் கொண்டு எழுந்த மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையாக எடுத்தாளப் படுகின்றன. இதன் வழிதான் சிவத்தம்பி, அவர்களின் மேற்படி கூற்றை நாம் புரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரங்களை அருளிய பக்தி இயக்கத்தின் வழி சித்தாந்த சிந்தனைகள் முன்மொழியப்படுகின்றன. அவற்றை கி.பி. 10ம், 11ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான நம்பியாண்டார் நம்பி சைவத் திருமுறைகளாகத் தொகுத்தார். சேக்கிழாரின் பெரிய புராணம் சைவ நாயன்மார்களின் வரலாற்றை - திறத்தை எடுத்துரைக்கின்றது. இப்பன்னிரு திருமுறைகளின் உருவாக்கம் சைவசித்தாந்தத்தின் சாத்திர உருவாக்கத்திற்கு அகக் காரணமாகச் சுட்டப்படுவது போல் புறக் காரணங்களாகச் சமண, பௌத்த சிந்தனைகளோடு வைணவ, சமய - தத்துவ சூழமைவுகள் முக்கியமானவையாகச் சுட்டப்படுகின்றன. சைவசித்தாந்த சிந்தனை பிராமணச் சார்பின்மை உடையதாகவும் வேளாளச் சார்புடையதாகவும் பெரும்பாலான ஆய்வாளர்கள் சுட்டியிருப்பதும் கவனிக்கத் தக்கதாகும். அத்தோடு திருமந்திரமே தமிழில் சைவசித்தாந்தம் என்ற சொல்லை முதன்முதல் எடுத்தாண்ட நூலாகவும் முப்பொருள், சைவநாற்பாதம் சார்ந்த சைவசித்தாந்தக் கருத்தியலை முன்வைத்த நூலாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வடிப்படைகளையெல்லாம் மனங்கொண்டே தமிழர் மெய்யியலாக சைவசித்தாந்தம் சுட்டப்படுகின்றது.

இதற்கு மாறாகப் பிறிதொரு சாரார் சைவ சித்தாந்த சிந்தனை வேத உபநிடத வழி வந்தது என்றும் ரௌரவ ஆகம பாவவிமோசனப் படலத்தின் மொழிபெயர்ப்பு என்றும் வடமொழிச் சிவஞானபோதத்தின் வழி உருவானது என்றும் பலவாறு உரைக்கப்படுகிறது. ரௌரவ ஆகமத்தில் பாவவிமோசனப்படலமே இல்லை என்பது எமக்குத் தெரியவந்துள்ள செய்தியாகும். வடமொழிச் சிவஞானபோதமும் காலவாராய்ச்சியின் படி பிற்பட்டதாகவே கூறப்படுகிறது. ஆக, இவ்வாதங்கள் வலிதிழந்து போகின்றன. ஆயினும் வேதாகம வழி வந்தது எனும் கருத்து இற்றைவரை நிராகரிக்க முடியாததாகவே உள்ளது. திருமந்திரம் தொட்டு, சித்தியார் வரை தம் பிரமாணநூல்களாக வேதாகமத்தைச் சுட்டி நிற்கின்றன. சிவஞான முனிவர் உள்ளிட்டோரின் வடமொழிச் சார்புடைய மேற்படி கருத்துக்களுக்கு மாறாக நூற்றுக்கு மேற்பட்ட காரணங்களை கூறும் நூல்களும் வெளிவந்துள்ளன.

ஆயினும் கைலாசபதியின் சோழர்காலம் பற்றிய ஆராய்ச்சி, அதன் வழி உருவான மற்றைய தமிழ் ஆய்வாளர்களின் கருத்தியல் என்பன சோழர்காலப் பேரரசின் எழுச்சி, வர்க்க உருவாக்கம், வேளாள எழுச்சி, வைணவ, சமய - தத்துவ சூழமைவுகளுக்கு நிகரான சைவ எழுச்சியின் தேவை போன்ற இன்னோரன்ன காரணங்கள் சைவசித்தாந்தக் கோட்பாட்டியல் எழுச்சிக்கு வித்திட்டன என்பதை நிறுவியுள்ளன. மேற்படி இரு வாதங்களையும் உள்ளது உள்ளபடி ஆராய்தல் நம்முன்னுள்ள காலத்தின் கடமையாகும்.

'பேரரசு ஒன்று நிறுவிய காலத்திலே பெருந் தத்துவம் ஒன்றும் வடிவம் பெற்றமை குறிப்பிடத்தக்க உண்மையாகும்' எனக் கூறி, சோழப் பேரரசையும் சைவசித்தாந்தத்தையும் எடுத்துரைக்கிறார் க.கைலாசபதி. சோழப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கிய பின்னரான கி.பி. 13ஆம் நூற்றாண்டிலேயே சிவஞானபோதம் தோற்றம் பெற்றது என்பது கவனிக்கத்தக்க உண்மையாகும்.

வேதாகமமே சைவசித்தாந்த பிரமாண நூல்களாகத் திருமூலர் தொட்டு அருணந்தி சிவாச்சாரியார் வரை கூறிப் போந்துள்ளனர். ஆயினும் கா. வை. தகாரே போன்றோர் ஆகமமே சைவத்தின் பிரமாண நூல் என்பர். மூலரும் வேதத்தைப் பொதுநூல் என்றும் ஆகமமே சிறப்புநூல் என்றும் கூறியது மனங்கொள்ளத்தக்கது. அத்தோடு ஆகமத்தின் அந்தமான ஆகமாந்தமே சைவசித்தாந்தம் என்றும் ஆகம ஞானபாத விளக்கமே சைவ சித்தாந்தம் என்றும் சிவாகமங்களின் விளக்கமே சைவம் என்றும் அதன் வழி உருவானவையே சைவத் திருக்கோயில்களும் வழிபாட்டு முறைகளும் என்பதும் கவனிக்கத்தக்கது. கிரந்தத்திலேயே ஆகமங்கள் எழுதப்பட்டுள்ளன. கிரந்தம் வட்ட எழுத்துக்களின் வழி உருவானது என்றும் வட்ட எழுத்துக்களே தமிழின் தொன்ம வடிவம் என்றும் தமிழின் மூல எழுத்தில் எழுந்த ஆகமங்கள் ஆரியரின் அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்ட காலத்தில் வடமொழிக்கு மாற்றப்பட்டதாகவும் திராவிட மூல ஆகமங்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாதம் தர்க்க அடிப்படையில், வளர்த்தெடுக்கப்படவில்லை.

ஆகம வேத மரபின்றும் மாறுபடுவதையும் தனித்துரைக்கப்படுவதையும் அதன் வழியேயே தமிழர்கள் மெய்கண்ட சாத்திரத்தைப் பற்றிய உரையாடலையும் வளர்த்தெடுக்க முற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளனர். திருக்கைலாய ஞான பரம்பரையினரை அகச்சந்தான குரவர் என்றும் அதன் இறுதிக் குரவரான பரஞ்சோதி மாமுனிவரே மெய் கண்டாருக்கு ஞானவுபதேசம் செய்தார் என்றும் அதன் வழி புறச்சந்தான மரபு உருவான தென்றும் கூறப்படுகிறது. அப்புறச் சந்தான மரபை உருவாக்கியதே மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படுகின்றன. வடமொழிச் சைவசித்தாந்தமும் வேதங்களை முதன்மைப்படுத்தாது ஆகம மரபையே முதன்மைப்படுத்தி அதன் சாரமாகவே தன்னை வெளிப்படுத்தி நிற்கிறது. இன்னும் நுணுகியுரைக்கின் சைவ தத்துவத்திற்கு பிரமாணமாக ஆகமமே அமைகிறது என்கிறார் க.வை. தகாரே. மேலும் சைவசித்தாந்தம் சுட்டும் பிரமாணங்களுள் ஒன்றான ஆப்த வாக்கியத்திற்கு ஆகம அளவை என்றொரு பெயரும் உள்ளமை அவதானிக்கத்தக்கது.

சைவசித்தாந்த வரலாறு எழுதிய அனவரத விநாயகம்பிள்ளை திருவுந்தியாரோடு தோத்திர முறைமை நீங்கி சாத்திரமுறைமை உருவாகி விட்டதென்பார். இதனை மறுத்து திருவுந்தி யார், திருக்களிற்றுப்படியாரை முழுச் சாத்திர நூலாகக் கொள்வதில் சிக்கல் உண்டென்றும் சிவஞானபோதமே சாத்திர நூல் என்றும் கூறுகிறார் கைலாசபதி. இது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றே. தர்க்கமுறையில் கட்டமைக்கப் பட்ட ஒன்றே சாத்திரமாக - கோட்பாடாக உரைக்கப்படக் கூடியதாகும். அதேவேளை சிவஞானபோதத்திற்கு ஏறத்தாழ 100 வருடங்களுக்கு முன்பே தர்க்க ரீதியான - சாத்திர முறைக்குட்பட்ட சைவசித்தாந்த நூல் தோற்றம் பெற்றுவிட்டது. அது கோளகி சந்தானமடத் துறவியான வாகீசமுனிவரால் ஆக்கப்பட்ட ஞானாமிர்தம் ஆகும். அனுமான, பாரிஷேட அளவைகள் இந்நூலில் முதன்மை பெறுகின்றன. பசு, பாசம், பதி எனும் வைப்பு முறை கைக்கொள்ளப்படுகின்றது. மேலும் தர்க்க முறையில் முப்பொருளை நிறுவி முக்தி பற்றிய கருத்தை முன்வைக்கின்றது. அந்த வகையில் மெய்கண்ட சாத்திரத்திற்கும் முற்பட்ட கருத்தை முன்வைக்கின்றது. அந்த வகையில் மெய்கண்ட சாத்திரத்திற்கும் முற்பட்ட சைவசித்தாந்த சாத்திர நூல் இது என்றே குறிப்பிட வேண்டும்.

தோத்திர நூல்களின் உருவாக்கத்தின் வழி, அவற்றின் சமூக, சமய தளங்களில் நின்று எழுந்த சாஸ்திர நூலாக - சைவசித்தாந்த முன்னூலாக சிவஞானபோதம் எடுத்தாளப்படுகின்றது. திருஞானசம்பந்தரின் காலம் - கி.பி. 7 ஆம் நூற்றாண்டு மெய்கண்டாரின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. சிவஞானபோதம் திருமந்திரத்தின் வழி பதி, பசு, பாசம் எனும் கட்டமைப்பை முன்வைக்கின்றது. இடையில் தோன்றிய ஞானாமிர்தம் பசு, பதி, பாசம் எனும் கட்டமைப்பை முன்வைக்கின்றது. இடையில் தோன்றிய ஞானாமிர்தம் பசு, பதி, பாசம் எனத் தன் கட்டமைப்பை முன்வைத்துள்ளமை கவனத்திற்குரியது. தோத்திர காலத்தின் பின் ஞானாமிர்த மற்றும் சிவஞானபோத நூல்கள் எழுந்த காலத்திற்கு முன் வடநாட்டில் - காஷ்மீரத்தில் சைவசித்தாந்த நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவை அஷ்டப்பிரணங்கள் எனப் படுகின்ற எட்டு நூல்களுமாகும். இவற்றுள் தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், இரத்தினத்திரயம், போககாரிகை, நாதகாரிகை, பரமோட்ச, நிராசகாரிகை என்பனவாகும். இவற்றுள் தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்யணம், போககாரிகை, மோட்சகாரிகை, பரமோட்சநிராசகாரிகை என்பன சத்தியஜோதி சிவாச்சாரியாரால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரது காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு ஆகும். இரத்தினத்திரயம் ஸ்ரீகண்டாச்சாரியாராலும் நாதகாரிகை ஸ்ரீபட்டராமகண்டராலும் தத்துவப்பிரகாசம் போஜதேவராலும் எழுதப்பெற்றவை. சத்தியஜோதி சிவாச்சாரியார், சித்தாந்த சைவ எனும் சொல்லை எடுத்தாண்டுள்ளார். இந்நூல்கள் ஆகமங்களின் வழி உருவானவை, தம் பிரமாண நூல்களாக ஆகமங்களையே சுட்டுகின்றன.

மெய்கண்ட சாத்திரங்களுக்கு ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முற்படத் தோன்றிய நூல்கள் இவை. கருத்தியல், உருவவியல் ரீதியில் மெய்கண்ட சாத்திரங்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவை. சைவசித்தாந்தத் தளத்தில் ஞானாமிர்தமே அளவை பற்றிய கருத்தை முன்வைத்ததாகவும் தர்க்கரீதியான கருத்தியலை முன்வைத்த நூலாகவும் காணப்படுகின்றது. அதற்கு இருநூறு வருடங் களுக்கு முன்பே இந்நூல்கள் அளவையியற் கருத்தை முன்வைத்துள்ளன. பிற சமயக் கருத்துக்களை எடுத்துரைத்து அதனை நிராகரித்துத் தன் சைவசித்தாந்த கருத்தினை முன்னிறுத்தும் "பரபக்க" வடிவத்தை சித்தியார், சங்கற்ப நிராகரணத்திற்கு முன்பே இந்நூல்கள் முன்வைத்துள்ளன. பேராசிரியர் சுந்தரமூர்த்தி, கலாநிதி கலைவாணி இராமநாதன் முதலா னோரின் அஷ்டப்பிரகரண ஆய்வுகள் காலத் தால் முற்பட்ட வடமொழிச் சைவசித்தாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபின் செழுமையை மெய்ப்பித்து நிற்கின்றன.

சைவசித்தாந்த வளர்ச்சி - செல்நெறியோடு வேளாள மேலாண்மையின் எழுச்சியைப் பெரிதும் தமிழ் ஆய்வாளர்கள் முன்வைப்பர். ஆனால் வடமொழிச் சைவசித்தாந்த மரபினோடு பிராமண, சத்திரிய மரபுகளே தொடர்புற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதே போல பக்தியியக்க காலத்தில் சமணம் சார் விஷிட்டாத்வைத - வைணவச் செல்வாக்கை எடுத்துரைப்பர். ஆனால் வடநாட்டு மரபில் பௌத்த செல்வாக்கையும் ஏனைய வைதிக பிரிவினரையும் நிராகரித்து சங்கரர் அத்வைதத்தை முன்வைத்தார். காஷ்மீர் சைவர்கள் ஒருமைவாத சைவத்தை முன்வைத்தனர். கால மாற்றத்தில் பன்மைவாத சைவமாக சித்தாந்த சைவம் முன்வைக்கப் பட்டது.

இந்த அடிப்படையில் சிந்திக்கும் போது முன்னைய ஆய்வாளர்கள் தமிழர் மெய்யியல் சைவசித்தாந்தம் என்பதற்கு முன்வைத்த வாதங் கள் வலிதற்றுப் போகின்றன. அதேவேளை க.வை. தகாரே ஒரு ஒளிப்பொட்டைக் காட்டுகிறார். மகாராஷ்டிரப் பிராகிருதத்தில் 'மஹார்த்த மஞ்சரீ' எனும் நூலை எழுதிய மஹேச்வரானந்தர் இந்நூலுக்குத் தானே எழுதிய பரிமலம் என்ற உரையில் தம் குரு சோழ நாட்டவர் என்றும் தம்முடைய நூல் காவிரியின் நீரைப் போலவே இனிமையாக இருப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் காஷ்மீர் சைவமெய்யியலாளரான அபிநவகுப்தரின் குரு சம்புநாதர் என்பவர் அர்த்தத்ர்யம்பக சம்பிரதாயத்தைச் சார்ந்தவர். சம்புநாதரின் குருவும் பராத்பரகுருவுமான சோமநாதரும் ஸுமதிநாதரும் தென்னாட்டவர்கள் என காஷ்மீர சைவநூலான தந்திரலோக ஆஹ்நிகம் 1 - இன் உரையில் கூறப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டுகிறார். (வேதாந்தத்தைப் பரப்பிய சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரும் திராவிடர்களே என்பது மனங் கொள்ளத்தக்கது) ஆக, காஷ்மீர் சைவ - சைவ தத்துவ வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு அளப்பரியது என்பதையும் அதன் வழி வடமொழி சித்தாந்த சைவமரபிற்கு சைவர்களின் பங்களிப்பு இருந்ததனையும் அறிய முடிகிறது. மஹேச்சவரானந்தர் குறிக்கும் சோழநாட்டார் யார்? என்பதை அறிவதனூடாகவே இவ்வாய்வை மேலும் வளர்த்தெடுக்க முடியும்.

வடமொழியில் '5' சித்தாந்த சைவ நூல்களை எழுதியவரான சத்தியயோதி தாம் ரௌரவ ஆகமத்தை ஆதரிப்பதாக மோட்ச காரிகை என்னும் நூலில் கூறியுள்ளார். சிவஞானபோதம் ரௌரவ ஆகம மொழி பெயர்ப்பு எனக் கூறப்படும் கூற்றை - கதையை இதன்வழி சிந்தித்தல் நல்லது. வடமொழி அஷ்டப்பிரகரண சித்தாந்த நூல்களில் ஆறுக்கு உரையும் மிருகேந்திர ஆகமத்திற்கு விருத்தியும் கண்டவர் அகோரசிவாச்சாரியார். இவர் எழுதிய பத்ததியே அகோரசிவாச்சாரியார் பத்ததி. இவரது காலம் கி.பி. 12ம் நூற்றாண்டு. இவ்வளவு தூரம் வடமொழி சைவசித்தாந்தத் திற்கு அருந்தொண்டாற்றிய இவர் சோழ நாட்டுத் தமிழன் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இவர் தமிழில் ஏதும் நூல் இயற்றிய தாகத் தெரியவில்லை.

அதேவேளை தமிழில் சைவசித்தாந்தம் பற்றி முதலில் கூறிய திருமூலர், வடநாட்டில் இருந்தே வந்தார் என்றும் அவர் வட நாட்டவராக இருக்கலாம் என்றும் அல்லது வட நாடு சென்று கற்றுவந்த தமிழராக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. அவரே மஹேச்வரானந்தர் கூறும் சோழ நாட்டவராகவும் இருக்கக்கூடும். கால ஆராய்ச்சியின் படி பொதுவில் திருமூலரின் காலம் 6ம், 7ம் நூற்றாண்டுகளாகவே எடுத்தாளப்படுகின்றது. ஆகவே சத்தியோயோதிக்கும் முன்பே சைவசித்தாந்தம் என்ற சொல்லை திருமூலர் கூறிவிட்டார் என்றாகின்றது. அதேபோல சத்தியோயோதி முதலில் சைவசித்தாந்த வடமொழி நூல்களை முதலில் ஆக்கியவராகச் சுட்டப்பட்டாலும் அவரே அத்தத்துவத்தில் மூலவர் என்று எங்கும் கூறப்படவும் இல்லை என்று தகாரே கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆக, சைவசித்தாந்தம் தமிழரின் மெய்யியல் என்று கூறுவதில் முன்னைய ஆய்வாளர் கூற்றுக்கள் வலிதற்றுப்போகின்றன. ஆகமம் சார் மொழி ஆராய்ச்சியும் தகாரே கூறும் சோழநாட்டுத் தமிழர் யார் என்பதற்கான ஆராய்ச்சியும் திருமூலர் பற்றிய கதையாடலும் காலவாராச்சியும் இது தமிழர் மெய்யியலா என்பதை கட்டவிழ்க்க வல்லனவாகின்றன. அதேவேளை தமிழில் எழுந்த ஞானாமிர்தம் ஏன் தமிழ்ச் சைவசித்தாந்திகளால் முதன்மைப் படுத்தப்படவில்லை என்ற கேள்வியும் எம்முன் நிற்கின்றது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்துச் சமகால இலக்கியப் போக்கு

*தெணியான்*

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாறு பல்வேறு காலகட்டங்களாகப் பகுத்துக் கூறப் பட்டு வருகின்றது. அவ்வக் காலப்பகுதிகளில் மேலோங்கி இருந்த இலக்கியப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட அக்காலப் பகுப்புகள் செய்யப்பட்டுள்ளன. அக் காலப் பகுதிகளில் குறிப்பிட்டுக் கூறத் தகுந்த இலக்கியப் பண்புகள் அல்லது இலக்கியப் போக்குகள் மேலோங்கி இருந்தமைக்கு அன்றைய சமூக, அரசியற் பின்னணிகளே காரணிகளாக அமைந்தன. இலக்கியம் என்பது சமூகத்தில் இருந்து தோன்றுகிறது. வெறும் சூனியத்தில் இருந்து கற்பனையாகப் பிறப்பதில்லை. ஒரு காலகட்டத்துக்குரிய இலக்கியப் பண்பின் தொடர்ச்சியாகவே அடுத்து வரும் காலப்பகுதிக்குரிய இலக்கியம் தோன்றுகிறது. அது மாத்திரமன்றி ஒரு காலத்துக்குரியது என்று கொள்ளப்படும் இலக்கியப் பண்பு அடுத்தடுத்து வரும் காலப் பகுதிகளில் இடம்பெறாது முற்றாக அழிந்து போவதில்லை. சமூகப் பிரச்சினைகள் சில அழிந்து போகாது இருக்கும்வரை அந்தப் பிரச்சினைகள் இலக்கியங்களில் தொடர்ந்து இடம்பெற்று வருவதென்பதே சமூக யதார்த்தம்.

இத்தகைய பின்னணியில் நோக்கும்போது சம காலம் என்பதன் பிரி கோடு அல்லது எல்லைக் கோடு எதுவென்னும் வினா எழுகின்றது. அறுதியிட்டுத் திட்டவட்டமாக ஒரு காலத்தைப் பகுத்து இதுதான் சமகாலம் என்று கூறுதல் என்பது இயலாத ஒரு காரியம். ஆயினும் சமகாலம் என்பது இல்லை என்றாகி விடாது. போர்க்காலம், போருக்குப் பின்னுள்ள காலம் என்பவற்றைத் தற்போது சமகாலம் எனக் கொள்ளலாம். போருக்குப் பின்னுள்ள காலம் தற்போது ஒரு சில ஆண்டுகளாக இருப்பதனால், குறிப்பிட்டுப் பேசப்பட வேண்டிய அக் காலத்தைப் போர்க்காலத்துடன் இணைத்து நோக்கலாம். இன்னும் சில ஆண்டுகள் கழிந்த பிற்பாடு இவ்வாறு நோக்குவது தவறான ஒரு கணிப்பாகவே கொள்ள வேண்டி நேரும். போர் நடைபெற்ற காலம் ஒரு காலப்பகுதியாகவும், போருக்குப் பின்னுள்ள காலம் இன்னொரு காலப் பகுதியாகவும் நோக்க வேண்டியதாக இருக்கும்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் அப்போது மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த அவலங்கள் பற்றியே பெரும்பாலும் பேசின. மக்கள் கண்ணீரை,வலியை, வடுவை எடுத்துக் கூறின. அதேவேளையில் படைப்பாளி களினால் சுதந்திரமாகத் தங்கள் கருத்துக்களை இலக்கியங்களாகப் படைப்பதற்கு முடிந்ததா? என்பது நியாயமான ஒரு கேள்வி. போருக்குப் பின்னர் நிலைமை முற்றாக மாற்றம டைந்துவிட்டது. படைப்பாளிகள் சுதந் திரமாகத் தமது பேனாக்களைப் பிடிப்பதற்கான சூழ்நிலை உருவாகிவிட்டது. அதேசமயம் படைப்பாளிகளாக இருக்கின்றவர்களின் பக்கச் சார்பு நிலையும் வெளிப்படுவதற்கு ஆரம்பித்து விட்டது. நடுநிலை என்பது பொய்யான ஒன்று தான். படைப்பாளி என்பவர் எதுவோ ஒரு பக்கம் சார்ந்தவராகவே இருப்பார். ஆனால் அந்தப் பக்கச் சார்பின் அளவு அல்லது நெருக்கம் என்பதில் ஒவ்வொருவருக்கும் வேறுபாடு இருக்கலாம். கொள்கை சார்ந்த பக்கச் சார்புகள் தவிர்க்க இயலாதவை. அத்தகைய பக்கச் சார்பு வரவேற்கத் தகுந்தது. ஆனால் சுயநல நோக்குடைய தற்சார்பான பக்கச் சார்பானது இலக்கியங்களில் வெளிப்படும் போது, அது விரும்பத் தகுந்த ஒன்றல்ல.

அடிப்படையான இந்த உண்மைகளை விளங்கி வைத்துக் கொண்டே சமகால ஈழத்து இலக்கியங்களை நோக்குதல் வேண்டும். இலக்கியங்கள் பற்றி இன்று பேச முற்படும் வேளை இன்னொரு உண்மையைக் கவனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மூத்த தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளிகள் சிலர் சமகாலப் படைப்புகள் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த அளவுக்கு சிறப்பானவைகளாக இல்லையென, தமக்குரியதான பொற்காலச் சிந்தனையுடன் வாழ்ந்து வருகிறார்கள். இளைய தலைமுறைப் படைப்பாளிகளின் எண்ணக்கருத்து வேறுவிதமாக வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தங்களது ஆக்கள் யாவும் உன்னதமானவை என்று எண்ணும் மனமயக்கத்துடன் காணப்படுகின்றார்கள். இத்தகைய இரண்டு பிரிவினர்களின் எண்ணப் போக்குகள் முறையானவையல்ல. சிறந்த படைப்புகளும், வெகு சாதாரணமான படைப்புகளும் எந்தக் காலத்திலும் தோன்றின; தோன்றிக் கொண்டிருக்கின்றன. மூத்த படைப்பாளிகளுக்கு ஒரு காலத்தில் இல்லாத வசதிகள், வாய்ப்புகள், இன்றைய படைப்பாளி களுக்குக் கிடைக்கின்றன. அதனால் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களைத் தங்குதடையில்லாது நூல்களாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். படைப்புகள் நூல் வடிவத்தில் வெளிவந்துவிட்டால், அவை கணிப்புக்குரிய இலக்கியப் படைப்புகள் என்று எண்ணத் தலைப்படுகிறார்கள்.

இலக்கியங்களின் அரசி கவிதை என்று சொல்லப்பட்டு வருவது நிராகரிக்க இயலாத ஒரு கருத்து. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த வரை கவிதை அல்லது பாட்டு அல்லது செய்யுள் என்பதற்கு மிக நீண்ட கால வரலாறுண்டு. இரண்டாயிரம் ஆண்டு காலத்துக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களின் தொடர்ச்சியே இன்றைய கவிதைகள். பாரதியின் (1882.12.11 - 1921.09.11) வருகைக்குப் பின்னர் தோன்றிய இலக்கியப் பாய்ச்சலினால் செய்யுள்களாக இருந்து வந்த பாட்டுகள் கவிதைகளாக மாற்றம் பெற்றன. இன்றைய காலகட்டத்தில் புதியனவாகப் புனையப்பெறும் ஆக்கங்கள் பெரும்பாலும் கவிதைகள் என்றே பேசப்பட்டு வருகின்றன. சொல் புதிது, சோதிமிகு நவ கவிதைகள் என்றே பேசப்பட்டு வருகின்றன. 'சொல் புதிதி, பொருள் புதிது, சோதிமிகு நவகவிதை' எனப் பாரதி கூறுவது போல எத்தனை கவிதைகள் வெளிவருகின்றனவென நோக்க வேண்டியது இன்று அவசியமான ஒன்று. இன்று பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் புத்தகங்களாகவும் ஏராளமான கவிதைகள் வெளிவந்து குவிகின்றன. ஏனைய துறை சார்ந்த இலக்கிய ஆக்கங்களிலும் பார்க்க வெளிவந்து கொண்டிருக்கும் கவிதைகளின் தொகையே பன்மடங்கு அதிகமாக காணப்படுகின்றது. இவற்றுள் ஒரு சில நல்ல கவிதைகளை இன்றைய கவிஞர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை. எந்த ஒரு படைப்பாளியின் பெயரையும் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுக் கூறுவதை நான் தவிர்த்துக் கொள்ளுகின்றேன். எடுத்துக் காட்டாக படைப்புகளின் பெயரையும் இங்கு நான் குறிப்பிடுவதற்கு விரும்பவில்லை. ஆயினும் அண்மையில் ஒரு வாரப் பத்திரிகையில் நான் இதுவரை அறியாத, எனக்குப் பரிச்சயமில்லாத ஒரு கவிஞனின் கவிதை எனது உள்ளத்தைப் பெரிதும் பாதித்தது. அதனை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

'உங்கள் திருமணத்தன்று
நான் எங்கிருந்தேன்?'

மகளின் கேள்விக்கு
விடைகூற முயன்றேன்.

"அந்தத் தீயின்
நடுச்சுடராக ஒளிர்ந்திருந்தாய்.

எம் தலைமீது தூவப்பட்ட
அட்சதையில்
ஒரு மணியாக இருந்தாய்.

சூடிய மாலை நறுமணத்தில்
இருந்ததும் நீதான்.

தாத்தா பாட்டியரின்
கண்களில்
நீர்த்துளியாக நீதிரண்டு நின்றாய்.

உன் தாயைக் கரம்பற்றிய
என் உள்ளங்கைக்குள்
வெப்பமாக இருந்ததும்
நீயே....!"

இலக்கியப் படைப்பாளியாக இருப்பது பெயரும் புகழும் சம்பாதிப்பதற்கான ஒரு குறுக்கு வழியாகப் புலரும் கருதுவதாகத் தோன்றுகிறது. கவித்துவம், மொழி ஆளுமை, இரசனை உணர்வு, சமூக நோக்கு என்பன இல்லாதவர்கள் இன்று கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். வெட்கமும் வேதனையும் தரும் இலக்கியத்துறையாக இன்று காணப்படுவது கவிதைத் துறைதான். பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்புவதற்காகக் கவிதைகள் என்ற பெயரில் வெளியிடப்படுபவைகளால் தமிழ் இலக்கியம் செழுமைப்படப் போவதில்லை. இவற்றுக்கு மத்தியில் நல்ல கவிதைகளைத் தேடிக் கண்டடைவதில் சிரமம் ஏற்படுகிறது. உள்ளத்தை வருடி, சிந்தனையைத் தூண்டிவிடும் சிறந்த கவிதைகள் சில இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதனைத் தயங்காமல் கூறலாம்.

கவிதைகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் சில சிறுகதைகளுக்கும் இன்று பொருத்தப்பாடுடையவைகளாகக் காணப்படுகின்றன. சற்றும் எதிர்பார்க்காத விதமாகப் புதிய படைப்பாளிகள் சிலர் மிகச் சிறந்த சிறுகதைகள் சிலவற்றை இன்று எழுதிக் கொண்டிருக்கிறார். அந்தப் படைப்புகள் சில வரவேற்கத் தகுந்தவைகளாகவும், பாராட்டத் தகுந்தவைகளாகவும் காணப்படுகின்றன. அதே சமயம் பக்கம் நிரப்பிகளாக வெளிவரும் படைப்புகளுக்கும் குறைவில்லை. நூல்களாக வெளியிட்டு வைப்பதற்கான பலம் ஒன்று மாத்திரம் இருந்தாற் போதுமானதாகிவிடாது, படைப்பின் தரமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் இளைய தலைமுறைப் படைப்பாளிகளிடம் இருந்து மாத்திரமல்லாது மூத்த படைப்பாளிகளிடம் இருந்தும் சிறந்த சிறுகதைகளை எதிர் பார்க்கலாம்.

இலங்கையில் வெளியீட்டு வசதிகள் போதுமான அளவு இல்லாமையால் தொகையில் நாவல்கள் மிகக் குறைவாகவே வெளிவருகின்றன. நாவல் எழுதுகின்றவர்களும் மிகச் சிலரே இருக்கின்றனர். இன்று வெளிவரும் நாவல்களுக்கு விசேடமான ஒரு பண்பு இருக்கிறது. சமூக நோக்கில்லாத, வெறும் பொழுதுபோக்கு அம்சங்களுடைய நாவல்கள் ஈழத்தில் வெளியிடப்படுவதில்லை. இத்தகைய உயர்ந்த நோக்குடன் நாவல் இலக்கியம் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய நிலையிலேயே இன்று இருந்து வருகின்றது.

கட்டுரைகள் ஆக்க இலக்கியங்கள் வரிசையில் வைத்து நோக்கப்படாத ஒரு காலம் இருந்து வந்தது. கருத்துச் செறிவு அல்லது கருத்தாழமே கட்டுரைகளின் பிரதான அம்சமாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றது. இன்று அத்தகைய நிலையில் இருந்து பெருமளவு மாற்றம் உருவாகிவிட்டது. கலைத்துவச் செறிவும் கருத்தாழமும் ஒருங்கே கொண்டவைகளாகக் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. புதிய தலைமுறைக் கட்டுரை எழுத்தாளர்கள் தேடல் மிகுந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். சிலர் தேடிப் பெற்றுக் கொண்ட தகவல்கள் அனைத்தையும் குறித்த ஒரு கட்டுரைக்குள்ளே உள்ளடக்கி வாசகனுக்குச் சலிப்பினை ஊட்டிவிடுகிறார்கள். ஆயினும் கட்டுரைகள் பல இன்று தரமானவைகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

விமர்சனத் துறை மிகவும் மலிந்து போய்விட்ட நிலையிலேயே இன்று காணப்படுகின்றது. சிறந்த விமரிசனம் சிறந்த வழிகாட்டி என்பர். சிறந்த விமரிசனங்கள் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக விளங்குகின்றன. ஈழத்து இலக்கியத் துறையில் விமரிசனங்கள் மிக உன்னதமானவைகளாக இருந்து வந்த ஒரு கால மட்டம் பற்றி இன்றும் குறிப்பிட்டுப் பேசப்பட்டு வருகின்றது. அக்கால விமரிசனப் போக்கினை உடன்பாடாகவும் மறுதலித்தும் கருத்துக் கூறுகின்றவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். அதனை விரிவாக இங்கு குறிப்பிடுவதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. ஆனால் அக்காலத்தில் கொள்கை சார்ந்த நிலை நின்று இலக்கியங்களை விமரிசித்தார்கள். இன்று விமரிசனம் எழுதுகின்றவர் மிகமிகச் சிலரே. அவர்களிடத்தில் அடிப்படையான கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வேண்டியவர், வேண்டாதவர் என்ற பக்கச் சார்புடன் விமரிசனங்கள் என்ற பெயரில் சில வெளிவருகின்றன. பெயர்ப்பட்டியல் தயாரித்து வழங்கிச் சலிப்பினை ஊட்டுகிறார்கள். ஈழத்து இலக்கியத்துறையில் மிகவும் தேய்ந்துபோன நிலையில் இன்று இருப்பது விமரிசனம் என்பது மறுப்பதற்கில்லை.

இன்று எழுத்து இலக்கிய உலகில் முஸ்லீம் படைப்பாளிகளிடத்தில் தேடல் முயற்சி பெருமளவிற் காணப்படுகிறது. கட்டுரைகளையும் ஏனைய இலக்கியங்களையும் சிறப்பாக உருவாக்குகிறார்கள். தேடல் முயற்சிகளை புதிய தலைமுறைப் படைப்பாளிகள் அனைவரும் செய்ய வேண்டும். எதிர்கால நம்பிக்கைக்குரியவர்களாகக் குறிப்பிடத் தகுந்த படைப்பாளிகள் சிலர் காணப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உரையாடலுக்கு என்று மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த கைத்தொலைபேசி இப்போது வளர்ச்சியடைந்து புத்தி சாலித்தனம் கொண்ட பல பயன்பாட்டுச் சாதனமாக பரிணாமம் பெற்று வருகின்றது. அத்துடன் இன்று அனேகமான மக்களுக்கு இன்றியமையாத ஒரு சாதனமாகவும் இருக்கின்றது. அது மட்டுமல்ல இதன் பாவனையும் தேவையும் வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதற்குக் காரணம் கைத் தொலைபேசிகள் கணினிகளின் அளவிற்கு மாறி வருவது மட்டுமல்ல தொலைத் தொடர்புத் தொழினுட்பத்தின் பரிணாம வளர்ச்சியுமாகும்.

# 4G என்றால் என்ன?

**சி.சிவபாலன்**


இன்று கைத்தொலைபேசிப் பாவனையாளர்களினால் அடிக்கடி உபயோகிக்கப்படும் "4ஜி", "3ஜி" என்கின்ற சுருக்கமான குறியீடுகள் தொலைத்தொடர்புத் தொழினுட்பத்தின் இப் பரிணாம வளர்ச்சியையே குறிக்கின்றது. இங்கு "ஜி" எனக் குறிப்பிடப்படுவது ஜெனரேசன் *(Generation)* என்னும் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்தாகும். அதாவது இத் தொழினுட்பத்தின் தலைமுறையை குறிக்கின்றது. இவ்வாறு முதலாம் தலைமுறை தொடக்கம் ஐந்தாம் தலைமுறை வரையிலான வளர்ச்சியானது *1G, 2G, 3G, 4G, 5G* எனக் குறிப்பிடப்படுகின்றது.

முதலாம் தலைமுறையின் *(1G)* காலமானது 1984 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிறது. அதுவரை காலமும் கம்பியினால் இணைக்கப்பட்ட தரைவழித் தொலைபேசிகள் மட்டும் பாவனையில் இருந்துவந்த நிலையில் நகரும் மோட்டார் வாகனத்தில் சென்றவாறே உரையாடக் கூடிய வகையில் கைத்தொலைபேசிகள் அமைக்கப்பட்டன. பொதுவாக இத் தொலைபேசிகள் தனிநபர்களுக்கு விற்கப்படவில்லை. பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவோர் மற்றும் அரசாங்கங்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இதனை உபயோகித்தனர். அனலொக் *(analog)* முறையிலான அலை இங்கு பயன்படுத்தப்பட்டமையால் இலகுவாக இடைமறித்து ஒட்டுக்கேட்கக் கூடியதாகவும் பாதுகாப்பு அற்றதாகவும் குரல் தகவல்கள் தெளிவு குறைந்ததாகவும் இருந்தது. அத்துடன் ஒலி வடிவில் மட்டுமே தகவல்களை அனுப்ப முடிந்தது.

இதற்குப்பின் 1991 ஆம் ஆண்டளவில் இரண்டாம் தலைமுறைத் தொழினுட்பம் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. இங்கு இரும சமிக்ஞைகள் *(digital signals)* பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் பேசும் வசதியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுந்தகவல்கள் (SMS), படங்கள் அனுப்பும் வசதி, ஒளி - ஒலி வடிவ தகவல்கள் (MMS) அனுப்பும் வசதி என்பன ஏற்படுத்தப்பட்டன. 1 ஜி தொழினுட்பத்தை விட தரமான குரல் தகவல்களைப் பெறமுடிந்தது. எனினும் வலிமையான சமிக்ஞைகள் உள்ள இடத்தில் மட்டுமே தரமான தொடர்புகளைப் பெற முடிந்தமை இதன் குறைபாடாக இருந்தது. இதன் மேம்படுத்தப்பட்ட 2.75 ஜி என அழைக்கப்படும் தொழினுட்பத்தில் இணையத் தளங்களைப் பார்வையிடும் வசதியும் ஏற்பட்டது.

பின்னர் 2001 ஆம் ஆண்டில் மூன்றாம் தலைமுறைத் தொழினுட்பம் அறிமுகமானது. இங்குஇணையத்தைப் பயன்படுத்தும்போது இரண்டாம் தலைமுறையைவிட வேகமாக தகவல்களைக் கையாள முடிந்தது. தகவல்களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் தெளிவான குரல் பரிமாற்றம் தெளிவான வீடியோ பரிமாற்றம் தொலைக்காட்சிப் பயன்பாடு என்பனவற்றை சிறப்பான முறையிலே பெறமுடிகின்றது.

நான்காம் தலைமுறைத் தொழினுட்பம் 2011 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இணையப் பயன்பாட்டின்போது தகவல் பரிமாற்ற வேகத்தை அதிகரிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. இணையத்தள தகவல் பரிமாற்ற வேகமானது ஒரு செக்கனுக்கு எத்தனை கிலோபிற் (kbit) தகவல்கள் என்ற அடிப்படையில் (kbps) என்ற அலகில் அளவிடப்படுகிறது. இந்தவகையில் 2ஜி யில் இணைய வேகம் 144 kbps ஆக இருந்தது. 3ஜி இல் 2000 kbps ஆக அதிகரித்தது. 4ஜி யில் இது வேகமாக இயங்கும் வாகனங்கள் போன்றவற்றிலிருந்து பயன்படுத்தும்போது 100000 kbps (100 Mbps) ஆகவும் வேகம் குறைந்த வாகனங்கள் இயங்காத இடங்களிலிருந்து பயன்படுத்தும் போது அதனைப் போல 10 மடங்கு வேகத்திலும் (1000 Mbps or 1 Gbps) இணையத்திலிருந்து தகவல் களைப் பெறமுடியும். இதன் காரணமாக ஒரே நேரத்தில் அதிக இணைப்புகளை ஏற்படுத்துதல் அதிகமானோருடன் வீடியோ சந்திப்புக்களை நடாத்துதல் முப்பரிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுதல் வேகமான தரவிறக்கம் தரவேற்றம் என்பன சாத்தியமாகி யுள்ளது.

அதிகரித்து வரும் தொலைத்தொடர்பு பாவனைக்கு ஈடுகொடுக்கும் வகையில் தொலைத் தொடர்புத் தொழினுட்பமானது மேலும் வளர்ச்சியடைந்து ஐந்தாம் தலைமுறை (5ஜி) நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. 2020 ஆம் ஆண்டில் 5ஜி தொழினுட்பம் பயன்பாட்டிற்கு வந்துவிடும் என எதிர்வு கூறப்படுகிறது. இதன் வேகம் 4ஜி ஐ விட 66 மடங்கு (66 Gbps) அதிகமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 4ஜி தொழினுட்பம் “எங்கிருந்து எப்போதும் எவருடனும்” இணையமூலம் தொடர்புகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதெனில் 5ஜி தொழினுட்பம் “அனைத்தும் இணையமூடாக” என்னும் நிலையை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷாந்

# மிக அந்தரக் கணம்

பரிவகலாப் பார்வை.
தொடுகையின்
கடைசிக் கணம் வரை
எஞ்சும் அன்பு.

முடிவில்லாத மூன்று முத்தங்கள்
முன் நின்ற நீ
ஒரு கணம் தாய்
அதே கணம் குழந்தை

உயிரூறிய வார்த்தைகளையும்
சில உருண்டைச் சோற்றையும்
எனக்களித்தாய்

மலரரும்பிய பொழுதில்
நான் வழங்கிய சோற்றில்
மிகுதி சொல்லாத வார்த்தைகளையும்
சொல்ல முடியாத பரிவையும்
குழைத்து உனக்களித்தேன்.

பின்
கணங்கள் நம்மைப் பிரித்தன

நீளச் செல்லும் வாழ்வு
"பின் தொடரும்...." என்ற
வார்த்தையில் வாழ்கிறது

இனி எப்போதும்
மனிதக் குட்டியொன்றுக்குக் கிடைக்கும்
அரிதான முத்தங்களில் சிலதை
ஈரம் காயாத கன்னங்கள்
மறக்கப் போவதில்லை

என்னருஞ் சுடரே,
காமத்தில் காதலிருக்கிறது
அன்பில் முத்தமிருக்கிறது. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடாத மனம்


த. அஜந்தகுமார்

1. அமைதியாய் இருக்கும் இரவு, சப்தங்களை உடைத்துப் போடுகிறது மனம் எங்கும்.

நடந்து செல்லும் மனப் பாதங்களில் ஒட்டியிருக்கும் மணற் துகள்களில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது.

முட்கள் கீறிக்கொண்டே இருக்கும் போது காயங்களைச் சந்திக்காத பயணத்தில் ஓய்வின் போது காயங்கள் அவனை ஆக்கிரமிக்கின்றன.

இரவு என்பது எது? கனவுகளைத் திறந்த விடும் வாசலா? பிரமைகளில் உறங்கியும் விழித்தும் சுழலவைக்கும் உலகமா? பயங்கரங்கள் பட்டுத் தெறிக்கும் பாதையா? காதலின் கனியா? திருடர்களின் திறவுகோலா?



இந்த இரவில்தான் அவன் அதிகம் மூச்சிரைக்க சிந்தித்தும், மனம் வானத்தில் மிதந்தும் மண்ணைத் தழுவியும் பெரும்பாலான கவிதைகளை எழுதுகின்றான். மனதைக் கீறி ஒழுகும் இரத்தங்களைத் தொட்டு எழுதுகின்றான். உலகத்தின் விருப்பும் வெறுப்புமான மையத்தில் அவன் தலை சுழலும்போது தலையைச் சொறிவது போல இயல்பாய் எழுதிக்கொண்டே இருக்கிறான்.

2.

நீங்கள் அவன் கவிதைகளை இலகுவில் கடந்துவிடுகின்றீர்கள். கவலைகளைக் கடக்கவே அவன் கதவிதை எழுதுகின்றான். அவனால் கவலையையும் கவிதையையும் கடந்துவிட முடியவில்லை. கவனிக்கப்படாத ஒன்றாய் அவன் கவிதை மாறும் போது அவன் கவிதைக் காகிதங்களால் நீங்கள் சாப்பாட்டுப் பார்சல் கட்டுகிறீர்கள். வடையின் எண்ணெயை உறிஞ்சும் வேலையைச் செய்கிறீர்கள். பிள்ளையின் கக்காவை அள்ளுகிறீர்கள். அக்கணத்தில் அவன் தன் மனதைத் திறந்து காயங்களின் அணிவகுப்பில் இருந்து ஒரு கவிதையைக் கண்ணீருடன் கண்டெடுக்கிறான்.

3.

புரிந்துகொள்ளப்படாத அவன் கவிதைகளின் நிலையே அவனுக்கும் இருந்தது. அவன் கவிதைகளுக்குள் சொற்படிகளால் மாத்திரம் இறங்கிவிடமுடியாது. அப்படி இறங்கியவர்கள் மயக்க நிலையில் மீட்கப்பட்டிருக்கிறார்கள். ‘கிணற்றுக் கவிதைகள்’ சப்தமிடுவதைப் போல இவன் கவிதைகள் சப்தமிடுவதில்லை. படிகளுடனும் படியில்லாமலும் கிணற்றை அடைகின்ற போது ஒரு சங்கீதம் ஆட்கொள்கின்றது. மேலே வந்துவிடவே விருப்பமற்றுவிடுகின்றது. அந்த ஊற்றுக்கிணறு கடலுடன் தொடர்புடையதாய் இருக்கிறது. அங்கிருந்து கடலுக்கு அழைத்துச் செல்கின்றது. அலைகளுடன் மணலில் சென்று விளையாடி மீள்கின்றன. சொற்கள் நண்டுகளைத் தமது கால்களிலே போட்டு அமத்தி அவற்றைத் துடிக்கவைத்துவிட்டு அந்தத் துடிப்பைக் கவிதைகளில் எடுத்து வருகின்றன. அவன் கிணற்றில் வாளியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் குளிக்கிறானா? கிணற்றில் பாய்ந்து குளிக்கின்றானா? கிணற்றில் இருந்து கடலுக்குச் சென்று குளிக்கின்றானா என்று தெரியவில்லை ஆனால் அவன் கவிதைகள் உலர்த்தப்படாமல் எப்போதும் ஈரத்துடனேயே இருக்கின்றன. அவன் கவிதைகளுடன் நடக்கும்போது ஒரு ஈரம் இருப்பதை உணரலாம், கண்ணில் மட்டுமன்றி உடல் மனம் எங்கும்.

4.

அவன் கவிதைகள் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட வேண்டியவை என்று விமர்சகர்கள் சிலர் பரிந்துரைத்தனர். சொற்களைக் கொலை செய்யும் ஒருவனாய் கவிதையை ஒளித்து வைக்கும் ஒருவனாய் அவன் இருப்பது பலருக்கு உவப்பாக இருக்க வில்லை. அவனது எழுத்துக்களை கவிதைகள் என்று சொல்வோருடனான கலந்துரையாடல் பற்றியும் சிந்திக்கப்பட்டது. அவனுக்கு ஆற்றுப்படுத்தல் செய்யும் போது அவன் கவிதைகளும் இயல்பிலேயே புனர்வாழ்வு அடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

5.

புனர்வாழ்வின் பின்னர் அவன் சொற்களைப் பிடித்து பிடித்து உண்ணத் தொடங்கினான். சொற்கள் உடல் முழுவதும் ஊருவதாய் சொறியத் தொடங்கினான். தனது கவிதைப் பிரதிகளை சாம்பலாக்கி அந்தச் சாம்பலைக் கொண்டு உடல் முழுவதும் தேய்த்தான். அவன் நிம்மதியை சொற்கள் அழிக்கத் தொடங்கின.

மின்மினிப் பூச்சியாய் வெளிச்சம் சுமந்து திரிந்த அவன் சொற்களின் மீதான பிரியங்கள் மறைந்து போக புனர்வாழ்வின் பின்னர் அவன் ஒரு கவிதையை எழுதுமாறு பணிக்கப்பட்ட போது கழுத்து நெரிபடுவதாய் உணரத் தொடங்கினான். இதுவரை அவனோடு துள்ளிக் குதித்த சொற்கள் எழுதும் போது தட்டிவிட்ட அட்டையாய்ச் சுருளத் தொடங்கின.

6.

சொற்களுக்கு ஆயுதப் பயிற்சிக்கான அழைப்பு வந்திருந்தது. ஒரே நேரத்தில் ஓசை எழுப்பவும் ஓசைப்படி செயற்படவும் ஒழுங்கில் அணிவகுக்கவும் பணிக்கப்பட்டன. சொற்கள் சுடத் தெரிந்தவையாக இருப்பதே கவிதைக்கான தயார்நிலையென்று மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டன. அவனுடைய சொற்களை முறையான ஆயுதப் பயிற்சிக்கு அவன் அனுப்பவில்லை. ஒரே ஆயுதங்களால் சுட்டுக் கொண்டிருப்பதையும் துளைத்துக் கொண்டிருப்பதையும் அவன் விரும்பவில்லை. நாகரிகப் பெண்கள் சிலரின் ஒரு நாள் ஆடை, ஒரு நாள் காதலன் போலவே சொற்களை அவன் பயன்படுத்த விரும்பினான். இராணுவச் சொற்களைவிட கொரில்லாச் சொற்களையே அவன் நேசித்தான். நேருக்கு நேர் போரிடுவதோ வெடித்துக் கொள்வதோ சலிப்படைந்துவிட்டன. ஆழ ஊடுருவும் படையணியாகவே திடீரென வெடிக்கவும் அணுகுண்டாய் வெடித்தும் சேகரமாகித் தொடர்வதை விரும்பினான். ஓசையில்லாமல் காயங்களைச் செய்யும் சொற்களை அவன் வைத்திருக்க விரும்பினான்.

பூமராங் சொற்களை வெறுத்தான். இராமபாணமாய் வேகம் கொண்டு இரத்தம் தீண்டாது பாயும் சொற்களை அம்பறாத் தோணியில் வைத்திருந்தான். உயிர் திருகும் கவிதையின் மந்திரங்களுக்கான ஆயுத பூஜையில் சொற்கள் படைக்கப்பட்டிருக்க வில்லை. அவை அக்கினியில் இருந்து உருப்பெற்றெழுந்தன. அக்கினிச் சொற்கள் சிலருக்குச் சுடவில்லை. ஆகவே அவர்கள் கற்புத் தவறாதவர்கள் என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்திருப்பீர்கள்.


அவன் கற்பு என்ற சொல்லையே வெறுத்தான். உடலில்தான் எல்லாம் என்பதை வெறுத்தான். ஒரு அரூபவெளியில் சொல்லி னால் ஒரு குடிசையே அமைத்தான். ஒற்றைக் குடிசைக்கு அங்கு வாஸ்துவின் தேவையும் இருக்கவில்லை. சொற்கள் நிறைந்த ஒரு ஈரத் தலையணையில் அவன் பள்ளி கொண்டான். தலையணையில் இருந்து கவிதைப் பூச்சிகள் அவன் தலைக்குள் நுழைந்து கொண்டபோது அவை வண்ணத்துப்பூச்சிகளாகி இருந்தன.

அந்த வண்ணத்துப்பூச்சிகள் மயிர்கொட்டி யின் இயல்பாய் உடம்பையே தடிக்க வைத்து விடும் போல இருக்கையில் வண்ணத்துப்பூச்சி கள் காகிதங்களில் பறந்தன. காகிதங்களோடும் பறந்தன. இவனைத் தூக்கியபடியும் பறந்தன.

வண்ணத்துப்பூச்சிகளைக் காகிதங்களில் இனங்காண வந்தவர்கள், பொன் வண்டு பிடிக்கப் போய் பீ வண்டு பிடித்த கதையாய் பிள்ளையார் பிடிக்க குரங்காகிய கதையாய் தடுமாறித் திகைத்துப் பின்வாங்கத் தொடங்கினார்கள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மக்களின் கலைஞன், அரசியல் போராளி

# எஸ்.ரி.அரசு

### : ஒரு சகாப்தம்

***கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்***

மண்ணோடு தம்மைப் பிணித்தவர்கள் ஈழத்துக் கலைஞர்கள், படைப்பாளிகள், அரசியலாளர்கள். அறுபதுகளில் தொடங்கிய மண் வாசனைக் கோஷம் மண் சார்ந்த அரசியலை மொழிசார்ந்த உரிமைப் பிரகடனத்துடன் முன்னோக்கிச் சென்றது. இங்கு மக்கள் தம் வாழ்வுடன் மொழியும் பண்பாடும் மறக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தி நிற்க அரசியல் உரிமைக் கோஷம் வலுவுள்ள சக்தியாகி அனைவரையும் பிணைத்தது.

இலங்கை அந்நியராட்சிக்கு உட்பட்டிருந்த வேளையில் விதேச பண்பாட்டுத் திணிப்புக்கு எதிராக போராடிய பண்பாட்டுக் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதற் கொண்டு தொடர்ந்த காலங்களில் அரசியலில் தமிழர் இருப்பைத் தக்கவைத்த சேர் பொன் இராமநாதன் அருணாசலம் சகோதரர்கள் மற்றும் சுதந்திரத்தை பெறுகின்ற வேளையில் தமிழர் தனித்துவம் பேணிய ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம் ஆகியோர் ஈறாக தமிழரின் சுயாதீனமான வாழ்வையே தக்கவைக்க அரும்பாடு பட்டனர்.

இந்த அரசியல் பண்பாட்டு மொழியுரிமைத் தனித்துவம் 1958 களில் இலங்கை அரசு கொண்டு வந்த தனிச் சிங்கள சட்டத்தால் மேலும் உரம்பெற்றது. இதன் காரணமாக தமிழர் அடையாளத்தை பறைசாற்றும் கைங்கரியங்கள் பல தரப்பட்ட மட்டத்திலும் செயல் வடிவங்கள் கண்டன. கலைஞர்கள் நாடகத்தினூடாக தேசிய அரங்கு எனவும், எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியம், மண் வாசனைக் கோஷம் எனவும் செயற்பாடுகள் கண்டனர். அத்தோடு சமகாலத்தில் கலையரசு சொர்ணலிங்கம் காத்திரமான நாடக உருவாக்கம் பெறும் நவீன அரங்கு ஒன்றை ஈழத்து தமிழ் நாடக உலகில் தோற்றுவிக்க காரணமானார். பம்மல் சம்பந்த முதலியாரைக் குருவாகக் கொண்டு ஐரோப்பிய விக்ரோறியின் பாணியிலான படச்சட்ட அரங்கில் நவீன நாடகத்தை ஈழத்தமிழ் அரங்குக்கு வளர்த்து சென்ற கலையரசு சொர்ணலிங்கம் பாசறையில் பயின்று அவர்தம் ஒறியன்ஸ் கிளப் பண்ணையில் வளர்ந்து அவரது தேரோட்டி மகன் நாடகத்தில் அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று நடித்து முத்திரை பதித்த எஸ்.ரி.அரசு, தொடர்ந்து வண்ணக் கலைவாணர் அரங்கில் T. லோகநாதன் பற்குணம் ஆகியோருடன் தீவிர நாடக நடிகராகவும், இயக்குநராகவும், ஒப்பனைக் கலைஞராகவும் மிளிர்ந்தார்.

நல்லூர் காமாட்சி நாடக மன்றம், அரியாலை சரஸ்வதி வாசிகசாலை, வட இலங்கை நாடகமன்றம், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், யாழ் ஒறியன்ஸ் கிளப், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் போன்ற நாடக அமைப்புக்கள் ஊடாக சமகால அரசியல் உணர்வுடன் ஒட்டிய புராண இதிகாச இலக்கிய நாடகங்களில் எஸ்.ரி.அரசு கலைவண்ணம் கூட்டி நின்றார்.

'திப்பு சுல்தான்' எனும் நாடகத்தினூடாக சிறந்த இயக்குநராகவும் 'தமிழன் கதை', 'வீர மைந்தன்' என்பனவற்றினூடாக தமிழர் அரசியல் போராளியாகவும் தன்னை வெளிக்காட்டிக் கொண்ட எஸ்.ரி.அரசு 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டத்தில் முன்னிலைப் போராளியாக பொலிஸ் ஜீப்பை வழிமறித்து நகர முடியாதபடி நெஞ்சை நிமிர்த்தி நடு றோட்டில் படுத்திருந்த காட்சி உள்ளூர் சர்வதேச பத்திரிகைகளில் பதிவானது வரலாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டிக்குளி, V.C. பரமானந்தின் குழுவில் நடிக்கத் தொடங்கிய அரசர் சமூக சீர்திருத்த அரசியல் நாடகங்களிலும் தம் ஈடுபாட்டைக் காட்டி நின்றார். தி.க./தி.மு.க. காலத்து நாடக இயக்கம் ஈழத்தமிழ் நாடக உலகிலும் செல்வாக்கை காட்டி நின்ற வேளை அரசரின் நாடகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒருபுறம் மொழி உரிமை சார்ந்த அரசியல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை மாற்ற முயலும் கலை முயற்சிகள் என வளர்ந்து சென்ற ஈழத் தமிழ்க் களத்தில் காத்திரமான நாடகங்களை ஒரு நடிகனாக 'இளங்கோவின் சிலம்பு' நாடகத்தில் கோவலனாக பாகமேற்று நடித்ததாகட்டும், சொக்கனின் 'கவரி வீசிய காவலன்', 'ஞானக் கவிஞன்', 'தெய்வப் பாவை', 'கூப்பிய கரங்கள்' போன்றவற்றையும் சு. வேலுப்பிள்ளையின் 'வீர சிவாஜி', 'சைலொக்', 'ஒத்தொல்லோ' போன்ற பிற மொழி நாடக இயக்கமாகட்டும் அரசரின் பாணி தனித்துவம் மிக்கது என்பர் அவர் காலத்து நடிகர்கள்.

பின்னாளில் 70/ 80 களில் குழந்தை ம. சண்முகலிங்கம், விதானை செல்வரத்தினம் போன்ற கலைஞர்களுடன் இணைந்து 'அன்னத்துக்கு அரோகரா' நாடகம் முதல் தொடர்ந்து சண்முகலிங்கம் எழுதிய 'வையத்துள் தெய்வம்' எனும் திருவள்ளுவர் பற்றிய நாடகம் மற்றும் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' கவிதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட குழந்தைகளின் நாடகத்தையும் சமகால இரசிகர்கள் மறக்கமாட்டார்கள். இவற்றின் உச்சக்கட்டமாக குழந்தை சண்முகலிங்கம் எழுதிய 'எந்தையும் தாயும்' எனும் சமகால போர் அவலங்கள் மற்றும் புலம்பெயர் வாழ் மூதாதையர் படும் துயரம் கூறும் நாடகத்தில் அரசரின் ஐயாத்துரை பாத்திரம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது யாவரும் அறிந்ததே.

இவற்றோடு ஒரு சினிமாக் கலைஞராகவும் 'கடமையின் எல்லை', 'குத்து விளக்கு', 'டாக்ஸி றைவர்' மற்றும் 2000 ஆண்டுகளில் உருவான 'இனி அவன்' (ஹத்தனுகம இயக்கியது) முதலிய திரைப்படங்களிலும் அரசர் நடிப்பின் எல்லையைக் காட்டி நின்றார்.

ஒரு புகைப்படக் கலைஞராக வாழ்க்கையை தொடர்ந்தவர் ஒரு சிற்பியாகத் தன்னை வளர்த்துக் கொண்டார். சிற்பத் தொழில் தமிழகத்து விருது நகர் வெயிலுகந்த கோயில் திருப்பணி வேளைகளில் பயின்ற அரசர் ஈழத்தில் மருகர் ரமணி மற்றும் அன்ரன் ஆகியோருடன் இணைந்து சதாவதானி கதிரவேற்பிள்ளை, புற்றளை கந்தமுருகேசனார், தியாகி சிவகுமாரன் ஆகியோரது சிலைகளை வடிவமைப்பதில் பங்கு கொண்டார்.

இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு கொண்டவராக கூட இருப்போரை மகிழ்விக்கும் அரசர், கலைஞர் திருப்பூங்குடி ஆறுமுகம் மற்றும் வில்லிசைக் கலைஞர் சின்னமணி குழுவினர் உடன் இணைந்து பக்கப்பாட்டு கலைஞராக இரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டார்.

பாரம்பரிய குடும்ப வழி வைத்திய அறிவு யாழ்ப்பாண மரபு சார்ந்த வேதாந்த சைவ சித்தாந்தப் புலமை தமிழிலக்கிய, புராண இதிகாச அறிவு, நாட்டார் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் பற்றிய ஞானம் என்பவற்றுடன் சமகால அரசியல் செல்நெறிகள் பற்றிய தெளிவும் செயல்வேகமும் ஒரு நாடகக் காரரான திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களை வெற்றிகரமான ஒரு படைப்பாளியாக உருவாக்கிய காரணிகள் ஆகும்.

நல்லூர் பூங்கா அருகே அமைந்த வீடு போர்க்களச் சூழலில் அடிபட்டுப் போக வவுனியாவில் இடம்பெயர்ந்து வாழ்ந்த காலத்திலும் வவுனியா வளாகம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் பாடசாலைகளில் நடாத்தப்பட்ட நாடகப் பயிற்சிகளிலும் பட்டறைகளிலும் (1996 - 2002) கலந்து கொண்டு தமது பணியை ஆற்றினார். திருகோணமலை வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா நாடகப் பட்டறைகளிலும் (1997 இல்) மட்டக்களப்பு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் இ. மௌனகுருவின் அழைப்பின் பேரில் நாடகத்துறை மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கியும், கொழும்பில் கலை இலக்கிய பேரவை நடாத்திய கூட்டங் களிலும் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கியும் தென்னிந்தியாவில் 1999 இல் இலங்கை 'நாராய் நாராய்' நாடகக் குழுவுடன் எந்தையும் தாயும் நாடக மேடையேற்றத்தில் பங்கு கொண்டு அளப்பெரும் பணிகளை ஆற்றிய திரு. அரசு தமது பிள்ளைகளான கலா, ஜீவா மற்றும் மகன் குடும்பங்களை விட்டுப் பிரிந்து அமரர் உலகு சென்றுள்ளார். தாம் வாழ்ந்த பூமியின் கலை அழகை மெருகூட்டிய கலைஞனின் வாழ்வு அம் மண்ணில் என்றும் நிதர்சனமாக பரிமளிக்க அவர் பெற்ற 'மாமனிதர்' விருதும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வழங்கிய 'நாடகச் செல்வர்' விருதும், இலங்கை அரசு வழங்கிய 'கலாபூஷணம்' விருதும் காலந்தோறும் பறை சாற்றும் என்பது திண்ணம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாக. பத்மநாதன் உருவகக் கதைகள்

மறைந்த தமிழ் அறிஞர் நாக. பத்மநாதன் அவர்களின் உருவகக் கதைகள் சில "அதிர்ச்சி நோய் எமக்கல்ல!" என்னும் தலைப்பில் 1993ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் யாழ்ப்பாணம் தமிழ்த்தாய் வெளியீடாக வந்தது.

தமிழ், தமிழ்மக்கள், அவர்தம் நலன்கள் என்ற கருத்தில் உறுதியாக வாழ்ந்த அந்தப் பெருமகனாரின் நினைவாக மேற்குறித்த தொகுப்பில் இருந்து ஒரு கதையினை நன்றியுடன் இங்கு மீள் பிரசுரம் செய்கின்றோம்.

இந்த நூலில் இரண்டு சிறப்புக்கள் உள்ளன. ஒன்று கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதிய சிறப்புரையின் சில பகுதியிலே நாக. பத்மநாதன் அவர்களின் சிறப்புக்களை பொழிப்பாக கூறும் பெறுமதி மிக்கது.

மற்றது நாக. பத்மநாதன் அவர்களின் புகைப்படம். அந்தப் படத்தை எடுத்தவர் அண்மையில் மறைந்த நாடகக் கலைஞர் அரசையா எனப் போற்றப்பட்ட மதிப்புக்குரிய சிவக்கொழுந்து திருநாவுக்கரசு அவர்கள் ஆகும்.

## எழுபது வயது இளைஞனைப் பற்றி நாற்பது வயது கிழவனின் மதிப்பீடு

முதுமை சுமையாகிப் போவதற்கு,
பேணப்படும் சமூக நிலையும்;
பண்பாட்டு வாழ்நிலையும், காரணிகளாகின்றன.
அறுபது அகவைக்கு மேல்....
தொட்டதுக்கும் குற்றம் கண்டுபிடிக்கும்,
'நக்கீரர்'களாகி;
பொல்லாப்புத் தேடுவது,
எல்லோருக்குமான பொது விதியா?
இல்லை.
அந்திமகாலத்தில் "அறுவை" ஆவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"பழசு"களைப் பார்க்குமிடத்தில்
தலைகளை மறைத்துக் கொள்ளுதல்
கட்டாய பாடமாகின்றது.
இந்தநிலை ஏதுமில்லாமல்,
எழுபது வயதிலும் இருபது வயது இளைஞனைப் போல
நினைவு தடுமாறாத "கம்பீரம்" ஒன்று
எங்களுடன் வாழ்கிறது.
ஒட்டி உறவாடக் கூடிய
விழுதெறிந்த விருட்சமொன்று
எமக்க நிழலாக நின்று குடைபிடிக்கிறது.
நேரம் கிடைக்கும் போதிலெல்லாம்
நாங்கள் நிழல் தேடிச் செல்வோம்.
மனதுக்குள் இனிய மலர்கள்
இதழ்விரித்துக் கொள்ளும்.
இந்த மரம் நிழல்மட்டும் தானா தரும்?
இல்லை,
அறிவுப்பழம் தந்தும் ஆதரிக்கும்.
யாரிவர்?
ஐயா, நாக. பத்மநாதன்.
திருக்குறள்,
பலருக்கு அலுமாரியை அலங்கரிக்கும் பொருள்
இவருக்கு மட்டும்
வாழ்வுக்கு வழிகாட்டும் பாதச்சுவடு.
பொய்யாக வாழ்ந்து பிரகாசிப்பதிலும் பார்க்க
மெய்யாக வாழ்ந்து
சின்னத் திரிவெளிச்சமாவது இருக்கிறதே
ஆகா, அது எவ்வளவு அழகானது!
ஐயா இதற்கு வாழ்ந்துகாட்டி விளக்கம் தந்தவர்
தமிழுக்காகவும்
தாய் மண்ணுக்கானதுமான
போராட்ட ஓட்டக்களத்தில்
புதிது புதிதாக
இவரின் பாதப்பதிவுகள் படிவதால்
காலக்காற்றினால்
ஐயாவைக் கரைக்க முடியவில்லை.
புறத்தோற்றத்தைக் கமரா பிடித்துக் கொள்ளும்
ஐயாவின் அக அழகைப் படம்பிடிக்க
கருவியொன்று கைகளில் வேண்டும்.
யப்பான்காரனுக்கு கடிதம் எழுதலாம்
விஞ்ஞானம் தோற்றதென்றே விடைவரும்.
அறிவும், அடக்கமும் ஒன்றாகக் குடியிருப்பது
அபூர்வம்.
பதவியும், பண்பும் கூடப்பிறப்பது குறைவு.
ஐயாவிடம் மட்டும்
எல்லாமே கூட்டுக் குடும்பமானது.
நா. ப. வின் அறிவின் ஆழத்துக்கு
ஒரு உவமை சொல்லு?
'நிலாவரைக் கிணறு'.
பிழையான உவமை'.
ஆழத்தை அளந்தறிந்த கிணற்றை
ஐயாவுக்கு எப்படி உவமையாக்கலாம்?
நேரடி விவரணங்கள் நெஞ்சத்தை ஊடுருவும்,
உருவகங்களோ உள்ளே அதிர்வுகளை ஏற்படுத்தும்.
அதிர்வுகள் எல்லாமே விளைவுகளை உருவாக்கும்.
சமூகம் தன்காலத்தில்
வேண்டப்படும் விளைவுகளைத்தான் விரும்புகின்றது.
விருப்பங்களை நிறைவேற்ற துணை நிற்பவையே
அழியாத இலக்கியங்களாகின்றன.
ஐயாவின் உருவகங்கள் வெறும் கதைகளல்ல
கண்ணெதிரே காணும் சத்தியத்தின் தரிசனங்கள்
எழுதுபவன்
எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும்
அவனது எழுத்து உன்னதமானால்
அதுபோதும்.
இப்படியும் ஒருகுரல் அடிக்கடி கேட்கிறது.
நாங்கள் இதற்கு மாறுபட்டவர்கள்.
நித்தக் குடிகாரன்
போதைப்பொருட்களின் தீமைபற்றி
போதிக்க முடியாது.
கணிகையர் வீடே கதியெனக் கிடப்பவன்
பத்தினிகள் பற்றி பாட்டெழுத முடியாது -
எழுதவும் கூடாது.
எழுத்தும் வாழ்வும் எப்படி வேறுபட முடியும்?
ஐயாவின் வாழ்வின் உன்னதங்கள் பற்றி
அவரைத் தெரிந்தவர்களுக்கு தெரியும்
விளம்பரத்தை விரும்பாதவர் என்பதால்
எல்லாவற்றையும்
வெளிச்சம் போட்டுக் காட்ட முடியவில்லை.
"சிங்களம் மட்டும் சிம்மாசனமொழி:
வேண்டுமானால்
தமிழ் பக்கத்தில் நின்று சாமரம் வீசட்டும்"
பண்டாரநாயக்கா நடுநிலை வழுவியபோது
ஐயா அரசசேவை முடிவைத் துறந்தவர்.
அத்தாணி மண்டபத்திலிருந்து வெளியேறி
வீதியில் நின்று விளக்கம் கேட்டவர்.
எங்கள் தாயகத்தின் எல்லைவேலியை
எதிரிக் கறையான்கள் தின்று தொலைப்பதால்....
"நாட்டின் எல்லைப்புறம்
விரைவில்
வீட்டின் கொல்லைப்புறமாகலாம்"
"குடாநாட்டுக்குள் குந்தியிருப்பது குற்றம்"
"தமிழன்,
எல்லையில் மனித வேலி ஆகவேண்டும்" -
இப்படி முதல் முழுக்கமிட்ட மூலவர்களில்
ஐயாவும் ஒருவர்.
முப்பது வருடங்களுக்கு முன்பே
வன்னியின் எல்லையில் காடுவெட்டி
காட்டு யானைகள் வராமல்
கட்டுத்துவக்கோடு காவல் இருந்தவர்.
ஐயா வீட்டிலிருக்கும் நாட்கள்
வெகு குறைவு.
ஐயாவுக்கு ஏறக்குறைய எழுபது வயதாகிறதாம்
எப்படி நம்புவது?
இன்னும் ஒரு இளைஞனைப் போலவே
எழுந்து நடப்பார்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி



தடார் என்று பனைமரம் வீழ்ந்தது. அது விழவில்லை; வீழ்த்தப்பட்டது.

இதிலென்ன புதுமை? ஒவ்வொரு நாளும்தானே பனைகள் வீழ்த்தப்படுகின்றன?

இருந்தும் ஏதோ ஒன்றை மனம் உணர்த்திக்கொண்டே இருந்தது.

"வெறும் சோத்தி" என ஒருவன் கூறியது கேட்டது.

"அவ்வளவும் வைரம்" என்ற பாட்டியின் முனகலும் தூரத்தே ஒலித்தது.

மனம் கூறியது விளங்கவில்லை. அவை பனையைப் பற்றியே ஏதேதோ வார்த்தைகள்.

பனை வீழ்ந்துவிட்டது. பிறருக்குப் பயன் தந்த வாழ்வு. பச்சை ஓலைகள், குலை குலையாக நுங்கு, பின்னர் பனம் பழம்.... பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. காலமும் ஓடிக் கொண்டிருந்தது.

எஞ்சிய காவோலை மட்டைகள்.

கருகிய வேலிகள், அழிந்த வீடுகள்.

பிரிந்த உயிர்கள்.

பனம்பழத்திற்குப் பதில் விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகள்.

பதுங்கு குழிகள்.

"ஹெலி வருகுது."

"இல்லை பொம்பர்", தாயைக் குழந்தை திருத்துகிறது.

சத்தம் பயங்கரம் கொள்கிறது.

"வங்கருக்குப் போவோம்."

பழக்கப்பட்ட அச்சுறுத்தல் எம்மைப் பதுங்குகுழியில் சேர்க்கிறது. எங்கும் மரணத்தின் எதிர்பார்ப்பு. இருள், அமுக்கம்; எனினும் மண் தரும் தஞ்சம் ஆறுதல் தருகிறது. பதுங்கு குழியுள் இருக்கிறோம்.

நிமிர்ந்து எழுந்தபோது மண்டையைப் பிளக்கும் அடி! இருளின் நடுவே பலத்த சிரிப்பொலி! "நாம் சாவதில்லை" என்னும் எக்காளம்!


அடிபட்ட தலையை உயர்த்திப் பார்த்தபோது சில துண்டங்கள் தெரிந்தன. அவை பதுங்கு குழியை மறைக்கும் மேற்பாகம்.

உற்றுப் பார்க்கிறேன். அவை மெல்லிய பலகைகள் அல்ல. அவை பனம் குற்றிகள். இல்லை. அதே பனை! வீழ்ந்த அந்த பனை! உறுதியோடு எம் உயிர் காத்து நிற்கிறது.

- சிரித்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவலக்குறிப்புகள்

*என். கேசவன்*

இருமடிப்பு அழைப்பு. அதில் முழுவதும் நெருக்கியடித்து நிறையவே இருந்தனர் ஏராளம் பேர். அத்தனை பேரிற்கும் முன்னும் பின்னும் பதவிகள் பட்டங்கள் என ஏராளம் நீளமாக இருந்தன.

வெளியீட்டு விழா. இருந்த பெயர்கள் எல்லாவற்றுக்கும் வேலைகள் குறித்தொதுக்கப் பட்டிருந்தன. படித்து முடிக்கையில் கண்கள் சோருமளவில் சிறிய எழுத்துக்களால் (அனேகமாக பத்து அல்லது பதினொரு புள்ளியாக இருக்கலாம்) பக்கங்கள் நெரிவு பட்டன.

உரிய நேரத்தில் விழா ஆரம்பமாகு மென்பது கொஞ்சம் தடித்த எழுத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. கையில் வழங்கும்போது "வித்தியாசமா யோசிச்சு நிறைய ஏற்பாடுகள் செய்திருக்கு கட்டாயம் வந்திட வேணும். சிறப்புப் பிரதிக்கு பேர் போட்டிருக்கு" என்று சொல்லியபடியே தந்தான் அவன் நண்பன். நன்றாக கதைக்கக் கூடியவன்.



இடம் : .....ஓ.... பிரபலமான ஆடம்பர மண்டபம். நாள் : சனிக்கிழமை மாலை சரியாக மூன்று மணி.

மண்டபக் குறிப்புகள் :

i) மாலை மணி 03:00

அழைப்பிதழ் தந்த நேர வலியுறுத்தல். சனிக்கிழமை மதிய உணவை அவசரப்படுத்தியிருந்தது. அரக்கப்பரக்க நடு வீதியில் ஆட்களை ஏற்றும் இ.போ.ச., ஓடிப் பிடிக்கும் தனியார் பேருந்து, திடீரென கடக்கும் அவசர நாய்கள், கடந்துபோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியாலத்தைப் பிடிக்கப் பறக்கும் உந்துருளிகள், கடந்து மண்டபத்தை அடைந்த போது, சந்தேகமாயிருந்தது. உறுதிப்படுத்தலா மென்றால் அவசரத்தில் அழைப்பை எடுக் காதது நினைவில் வந்தது. ஊரடங்கு நாட் களின் தெருவின் பிரதியாயிருந்தது மண்டபம். வேலிப் பொட்டுக்கூடாகப் பார்த்துப் பழகிய ஊரடங்குத் தெரு மீண்டும் நினைவுக்கு வந்து கரைந்தது.

ii) மாலை மணி 03:05

கதிரைகள் நேர்த்தியாக அடுக்கப் பட்டிருந்தன. மேடையில் மிகப் பெரிய பதாகைக்கு முன்பாக பதினைந்திருபது கதிரைகள், மண்டபத்துச் சுவரோரம் இரண்டிரண்டாக நான்கு சத்தப் பெட்டிகள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தன. உள்ளே இருந்த தனிமைக்குப் பயந்து மண்டபத்துக்கு முன்னிருந்த மாமர நிழலுக்கு வரவும், நூலாசிரியனும் வேறும் மூவரும் வியர்வையில் நனைந்தபடியே தோன்றினர். பரபரத்தபடி வந்தனர்.

iii) மாலை மணி 03:15

தலைகள் ஒவ்வொன்றாக முளைக்கத் தொடங்கின. தலைகள் எண்ணிக்கையில் கூடிய ஒவ்வொரு தடவையும் நூலாசிரியன் முகம் மலர்ந்தது. ஆயினும் ஏக்க ரேகை தொடர்ந்தும் குடியிருந்தது. ஓடித் திரிவதிலும் தொ(ல்)லைப் பேசியை நோண்டுவதிலும் களைத்ததாக இல்லை.

iv) மாலை மணி 03:30

திடுக்கிட்டுத் தூக்கம் கலைந்தெழுந்த சத்தப் பெட்டிகள் அதிர்ந்தன. கதிரைகளுடன் மண்டபமும் அதிர்ந்தது. மண்டபத் தூண்கள் ஏதும் ஆடவில்லை என்பதை சுற்றும்முற்றும் பார்த்து உறுதி செய்தபின்னர் அரைத் தூக்க த்திலிருந்து எழுந்த எழுபதளவிலிருந்த பெரிய வர் பெட்டிகளிலிருந்து விலகி சற்றப்பால் வசதியாக அமர்ந்தார். அந்த அதிர்வு அப்போதும் அவருடனேயே இருந்ததுபோல். நெளிந்தபடியே ஏதோ சொன்னார் போலி ருந்தது. வாய் அசைந்ததாயினும் ஏதும் கேட்கப்படவேயில்லை.

v) மாலை மணி 03:35

வாயில் நிறைகுட மேசை போர்வையைப் பெற்றது. வாழையிலை நெல்லையும் மஞ்சள் மாப் பிள்ளையாரையும் ஒரே மாதிரிப் பழுத்த வாழைப்பழச் சீப்பையும் சுமக்கத் தொடங் கியது. நடுவில் கும்பம், அங்கிருந்த இரு குத்துவிளக்குகளும் மேடைமுன் நின்ற ஆளுயர விளக்கும் திரிகளைப் பெற்று எண்ணெயில் நனைந்தன. நூலாசிரியன் மனைவி கையில் பட்ட எண்ணெயைத் தலையில் தடவியபடி அப்பால் போனாள்.

vi) மாலை மணி 03:40

கால்வாசி மண்டபக் கதிரைகளும் முன் மாமர நிழலும் ஒருவாறு கனத்திருந்தன. முன் வரிசையின் கதிரைகளில் முக்கால்வாசியும் ஓய்வாக காற்றாடிக் கொண்டிருந்தன. மணிக்கூட்டையும் நுழைவாயிலையும் அனேக சோடிக் கண்கள் பார்க்கப் பழகியிருந்தன. அலுப்புச் சலிப்பில்லாமல் நூலாசிரியனையும் பார்த்தன. அவன் முகத்தில் சோர்வு தொங்கிக் கொண்டிருந்தது. மேடையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த நூல்களையும் சபையையும் தன் மணிக்கூட்டையும் எத்தனை தடவை பார்த்தான் என்பது ஞாபகத்தில் இல்லை. எதையாவது ஒன்றை எப்போதும் பார்த்தான் என்பதை உணர்க.

vii) மாலை மணி 03:50

ஒலி வாங்கி உயிர்த்ததில் பெட்டிகள் மூர்க்கம் தணிந்தது. அடுக்கலங்கார வார்த்தைகளை இப்போது சத்தமாகப் பெட்டிகள் ஓதத் தொடங்கின. அழைப்பிதழ் மீளமீள முன்னிருந்து முடிவுவரை நீளமாக உச்சாடனம் செய்யப்பட்டதில் அனேகருக்கு மனப்பாடமாகியிருந்தது. முன்வரிசையில் அரைவாசி ஆட்களை எதிர்பார்த்திருந்தது. எனக்கு தலையில் சிறுபுள்ளியளவில் "சுரீர்" என்ற வலி மெல்லத் தலையெடுத்தது.

viii) மாலை மணி 04:05

விளக்கேற்றும் அழைப்பில் சபை நிமிர்ந்தமர்ந்தது. முதலில் வாயிலிலும் பின்ன தாக மேடை முகப்பிலுமாக அனைவர் கவனத்தையும் ஒருங்கிணைத்தது. அழைப் பிதழ் பெயர்களுக்கும் உதிரிப் பெயர்களுக்கும் வாய்ப்பளித்ததில் பெரிய முள் நான்கு இலக்கங்களை சத்தமின்றிக் கடந்து சாதனையை நிலைநாட்டியது. புகைப்படக்காரரினதும் ஊடகக்காரரதும் முதுகுகள் பல்வேறு உயர அகலங்களில் சபைக்கு விரிந்திருந்தது. மேடை காணாமல் போயிருந்தது.

ix) மாலை மணி 04:25

வரவேற்புரைக்கான நேரம். பிரபல மொருவர் தனது வாசிப்புத் திறனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பிதழ் மூலமாக நிரூபித்து வணங்கினார். பின்னர் மீளவும் வாசித்தார். ஒவ்வொரு பெயருக்கும் தன்னால் முடிந்தளவு மூச்சுப் பிடித்து வியாக்கியானம் செய்து “தங்கள் வரவு நல்வரவாகட்டும்” என்ற பல்லவியுடனான தனது கடமையை முடித்தார்.

வரவேற்பு நடனம், முன்பள்ளிச் சிறுசுகள் இறுவட்டிற்கு ஆடி அது இடைச்சொருக நின்று தடுமாறி ஒருவாறு முடிந்தது. கைதட்டல் அவ்வளவாக இல்லை.

x) மாலை மணி 04:52

அழைப்பிதழ் குறித்த மூன்றுடன் இரண்டு சேர்ந்து ஐந்தாகிய பெரிய மனிதர்கள் ஆளுக்குப் பத்து நிமிடங்களில் ஆசியையும் வாழ்த்தையும் வழங்கினர். அவையாவன சுருக்கமாக,

1) ஆலய குருக்கள் : தம்பியின் பரம்பரையே எமது ஆலய பக்தர்கள், உபயகாரர், ஒழுக்கசீலர்கள்.... தம்பிக்கு இறையாசி என்றும் இருக்க பிரார்த்திக்கிறேன் (சமஸ்கிருத சுலோகம்)

2) முன்பள்ளி ஆசிரியை : எனது நாற்பது வருட ஆசிரிய சேவையில் கிடைத்த நல்முத்து இவன். தன் கொப்பிகளில் எழுதியதைவிட புத்தகங்களில் எழுதியதே அதிகம். அப்போதே தெரியும் இவன் புத்தகம் எழுதுவானென்று. வாழ்க தம்பியின் புத்தகப் பணி.

3) பிள்ளையின் ஆசிரியர் : இவருடைய பிள்ளை தேவாரமாகட்டும், ஏனைய பாடல்களாகட்டும் தானாக இயற்றிப் பாடி என்னை திகைக்க வைக்கும் திறமைசாலி. இவனது திறமையெல்லாம் தந்தையிடமிருந்து இவன் பெற்ற கொடை என்பேன். வாழ்க உம் பாடலாக்கப் பணி.

4) மிருக வைத்தியர் : இவருடைய நாயிற்கு மருத்துவம் பார்த்ததின் விளைவாக அறிமுகமானவர். இவருக்கு நாயின்பால் இருக்கும் பற்று இவரது சமூக சிந்தனைக்கு நல்ல உதாரணம். சீவகாருண்ணியனே வாழி பல்லாண்டு.

5) இவரது மேலதிகாரி : எழுதுனராக இருந்து இன்று எழுத்தாளராக பதவி உயர்வு பெறுகின்ற இவர் மேலும் பல பதவிகள் பெற்று நிறைய எழுதவேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்றவாறாக இருந்தது. நூலாசிரியனது ஆயுளையும் பணியையும் நீளமாக்குமாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெய்வத்திடம் மனுவும் கொடுத்திருந்தனர்.

xi) மாலை மணி 05:42

தலைமையுரைப்பு : அறிவிப்பாளரின் அழைப்பை தலைவர் பெருமனங் கொண்டு ஏற்றிருந்தார். வெறும் முப்பதே நிமிடம் உணர்ச்சி மிகக் கொண்டு பறந்துபோனது. தான் கொண்டிருக்கும் பதவிகள் பட்டங்களை வரிசைப்படுத்தி அதுபோல் இவரும் (நூலாசிரியர்) பெறவேண்டும். அவற்றை உரியவர்கள் வழங்கவேண்டும் என்றவாறு தான் படித்த சில நூல்களைப் பட்டியலிட்டும் முகநூல் தத்துவங்களை உதிர்த்தும் போயமர்ந்தார். சபையில் கதிரைகள் உராயும் ஒலியுடன் சிலர் வெளிச்சென்றனர்.

xii) மாலை மணி 06:12

அரைவாசிக்குச் சற்றுக் குறைவாக மண்டபம் நெரிந்திருந்தது. மின்விசிறிகளுக்குச் சவாலாக சபை முழுவதும் புழுக்கம் ஓடித் திரிந்து கொண்டிருக்க சிறப்புரைஞர் பேசினார். பெரிய மனிதராகையால் நிலைமையுணர்ந்து சுருக்கமாக முப்பது நிமிடத்தில் பேசினார். சங்க இலக்கியம் என்று தொடங்கி சங்கக்கடை ஊழல் வரை வந்தார். செந்தில், கவுண்டமணி, வடிவேலு, ஒபாமா, மோடி, ரணில் என்று தனக்குத் தெரிந்தளவில் ஓடிப்பிடித்து விளையாடினார். பதினாறு முழும் தொடங்கி பன்னிரண்டங்குலமாக பண்பாட்டில் தனக்குள்ள அக்கறையைக் காட்டினார். நூலாசிரியனைப் பற்றியும் ஈற்றில் ஒரு வரி "எனக்கு அறிமுகமானவர்" என்று முடித்தார். நூலின் பெயரை ஒரு முறை மட்டும் உச்சரித்தாரெனினும் அது பிழையாயிருந்தது.

xiii) மாலை மணி 06 : 42

மிகமிக பிரபல குரல் கம்பீரமாக கம்பனிலிருந்து தொடங்கி நூலாசிரியரை அடைந்து சோர்ந்து போனது. இது வெளியீட்டுரை என்பதை அறிவிப்பாளர் ஞாபகமூட்டினார். சுருங்கச் சொல்லி முடிக்க ஆயத்தமாகும்போது ஐந்தாறு கதிரைகள் வெறுமையாகின.

மின்குமிழ்கள் உயிர்த்தன. சில தூங்கின. ஒன்றிரண்டு விட்டுவிட்டு துயில் கலைந்தன. மங்கல் ஒளியும் பொங்கும் வியர்வையும் மண்டபத்துள் ஆடத் தொடங்கியிருந்தன.

xiv) இரவு மணி 07:00

பெயருக்கு முன் ஐந்தாறு பின் ஆறேழு குறிகளுள்ள பென்னம்பெரியாள் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க அவரொத்த இன்னோராள் பெற்றார் என சத்தப்பெட்டிகள் உரத்து ஒலித்தன. நாங்கள் இப்போது மறுபடியும் முதுகுகளை மேய்ந்தோம். மேடையில் முழுமையாய் முதுகுகள் குவிந்திருந்தன.

முழு அளவுத்தாளில் மூன்று நான்கி லிருந்த பெயர்களை ஒவ்வொன்றாய் அடைமொழி அலங்காரத்துடன் அன்பாய் அழைத்து சிறப்பான பிரதிகளைத் தந்தனர். முக்கால் வாசிப் பெயருடையோர் அங்கே இல்லாமையால் முக்கால் மணி நேரத்தில் இது முடிவுக்கு வந்தது.

xv) இரவு மணி 07:45

ஒரு தட்டை ஆய்வென்றும் சில தடவைகள் நயப்பென்றும் உச்சாடனம் செய்யப்பட்ட விடயம் அழைப்பிதழில் பிழையாக விமரிசனம் என்றிருப்பதாக அயலிலிருந்தவர் தெளிந்தார்.

இருவர் பணி

முதலாமவர் : நீளமான எழுத்தாளர் பட்டியலை மனனம் செய்து சிறப்பாக ஒப்புவித்தார். இவருடைய நூலை படித்திருந்தார் என்பதை அதன் பெயரைச் சரியாகக் கூறி நிரூபித்து அடுத்தவருக்கு இடம்தர விரும்புவதாக கூறி அமர்ந்தார்.

இரண்டாமவர் : நீளமான நூற்பட்டியலைக் கூறி அதனுடன் இதனையும் இணைக்க வேண்டுமென்று இதனது பெயரை பிரித்தும் சேர்த்தும் விதவிதமாய் உச்சரித்தும் பெருமைப்பட்டதோடு முன்னவர் எல்லாம் சொல்லிவிட்டதால் அமர்கிறேன் என்று அமர்ந்தார்.

இருவருடையதும் ஒற்றுமைகளாக நூலைப் பற்றி எதுவும் பேசாததையும் வேற்றுமைகளாக நூலாசிரியர்கள் பெயர்களை ஒருவரும் நூல்களின் பெயர்களை மற்றவரும் பேசியதையும் குறிப்பிடலாம். மேலும் இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் சம அளவில் ஒரே சீராக கதிரைகள் வெறுமை யாகின. பெருந்தன்மையோடு கடிகாரப் பெரியமுள்ளின் முழுச்சுற்றை இருவருமாக பகிர்ந்துகொண்டனர்.

xvi) இரவு மணி 08:45

வெறியில் தள்ளாடும் இரவு வீதியின் குரல் கேட்டது. எழத் தயக்கமாயிருந்தது. திரும்பினேன். திடுக்கென்றிருந்தது. பேசப் பேச மேடைப் பெரிசுகள் கரைந்தது கண்டிருந்தும் திடுக்கென்றிருந்தது. கதிரைகள் காலாட்டிக் கொண்டிருந்தன. ஆறேழு பேர் இன்னமும் இருந்தனர். ஒருவர் உறக்கத்தில் இருந்தார். சத்தப் பெட்டிக்காரன், நூலாசிரியன் குடும்பம், நன்றியுரைக்காரர் ஆகியோராக, சபை குறுகியிருந்தது.

"முடிஞ்சுதா?" கொட்டாவியின் துணையுடன் மண்டப காவலாளி சலித்தார். ஏதும் சொல்லவில்லை.

முடிவுரை :

அடுத்த நாட் காலை தொ(ல்)லைப் பேசியூடாக வந்திருந்த நூலாசிரியன் "விழா எப்படியிருந்தது?" என்றான். அவன் உண்மை யிலேயே நல்லவன். அவனுடைய நட்பை இழக்க விரும்பவில்லை. அதற்கான துணிவும் இல்லை. "பேப்பருகளிலை படத்தோட வந்திருக்கு நல்லாயிருக்கு" என்றான். "எது?" என்று கேட்கவேண்டும் போலிருந்தாலும் விழுங்கிக் கொண்டேன். "நல்லாயிருந்தது. வித்தியாசமாயிருந்தது" என்று சுருக்கி இழுத்து நிறுத்தினேன். "உன்னட்டைக் கேட்டாத்தான் உண்மை சொல்லுவாய் அதுதான்" என்றான்.



பின்குறிப்பு :

அவனுடைய அழைப்புகளை எடுப்ப தையும் சந்திப்பதையும் தவிர்த்து வருகிறேன். தற்சமயம் அவன் நூல் பற்றி ஏதும் கேட்டால் அவனை முழுதாகவும் நிரந்தரமாகவும் இழக்க நேரிடலாம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. விக்கினேஸ்வரன்



# உயிர் அச்சுறுத்தலாகிவிடும் கம இரசாயனப் பாவனை

எமது நாட்டில் உள்ள ஐந்து பேரில் நால்வருக்கு சிறுநீரகப் பிரச்சனை உள்ளது. இதனை விட நீரிழிவு புற்றுநோய் பெருகி வருகின்றது. பல புதிய நோய்கள் தினமும், செய்திகளாகின்றன. மனித குலம் நோய்களால் சீரழிவதற்கு பிரதான காரணம் கம இரசாயன பாவனை தான் என கண்டறியப்பட்டுள்ளது.

கம இரசாயன பாவனையை, வளமாக்கி பாவனையை குறைக்க, இன்றைய ஜனாதிபதி தொடக்கம் மருத்துவர்களும் புத்திஜீவிகளும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆயினும், இவை விவசாயிகளை விழிப்படைய செய்துள்ளதா? என்றால் இல்லை என்பதே விடையாகும்.

கம இரசாயனப் பாவனையால் மனித குலம் சீரழிகின்றது. சூழல் மாசடைகின்றது. மண் தனது உயிர்ப்புத்தன்மையை இழந்து செத்துக் கொண்டு போகின்றது. இது கசப்பான உண்மை.

விஞ்ஞானம் பெருகிவரும் மனித குலத்துக்கு உணவுக்காக பல புதிய உபாயங்களை கண்டுபிடிப்பதும், அடுத்த கணமே அதை மறுதலிப்பதும் சாதாரண விடயமாகும்.

இயற்கை விவசாயம் என்பது அதில் உள்ள முக்கியத்துவமான சேதனப்பசளை பாவனை என்பது என்றும் மறுதலிக்க முடியாத அடிப்படை விவசாய அம்சம் ஆகும்.

விஞ்ஞானிகள் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் என்ற மூன்று முக்கிய பயிர் போசணைகளில் கூடிய கவனம் செலுத்தி அவற்றை பெருமளவில் இடச்செய்தனர். மேலதிகமாக குறைந்த அளவில் தேவைப்படும் மூலகங்களையும் பயன்படுத்த தூண்டினர்.

இவற்றை விட மிக முக்கியமான பெருமளவு தேவைப்படும் காபன் ஐதரசன் ஒட்சிசன் ஆகியவற்றில் கவனம் செலுத்தவில்லை. இவற்றுக்கு மேலாக காபன் நைதரசன் விகிதம் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இது பெரியதொரு குறைபாடாகும்.

நீரிலே ஐதரசன் ஒட்சிசன் இருப்பதனால் பிரச்சனை இல்லை. ஆனால் காபன், முறையான காபன் சுற்று வட்டம் இல்லாவிட்டால் மண் தனது உயிர்ப்பு தன்மையை இழந்துவிடும்.

இரசாயனவியல் படிப்பவர்கள் அசேதன இரசாயனம், தேசன இரசாயனம் என இரு வகையாக படிப்பதுண்டு. சேதன இரசாயனம் என்பது காபன் இரசாயனமாகும்.

சேதன பசளை பாவனை காபனை சரியான சுற்றுவட்டத்துள் வைத்திருக்க உதவுகின்றது. மண் இழையமைப்பு சீராகின்றது. மூலகங்களை பிடித்து வைத்திருக்கும் தன்மை கூடுகின்றது. மண்ணின் உப்புமூல பரிமாற்ற திறன் கூடுகின்றது. மண் வளம் பெருகுகின்றது. காபன் நைதரசன் விகிதம் சீராகின்றது. இவற்றால் விளைச்சல் பெருகுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று,

அதாவது எமது முன்னோர் எப்படி மண்ணை உயிர்ப்புடன் பேணினர் என்பது இன்று பலருக்கு தெரியாமல் இருக்கலாம்.

1. விவசாய நிலங்களில் ஆடு மாடுகளை அடைத்து அல்லது கட்டி வைப்பார்கள். இதற்காக தொட்டில் குடில் வைத்து ஒரு படை எரு வரும்படி கட்டுவார்கள்.
2. பச்சை குழைகள், பனை ஓலை என்பவற்றை தாட்டார்கள்.
3. குப்பை, எரு, பிண்ணாக்குகள் என்பவற்றை இட்டார்கள்.

இவற்றை இடுவதால் ஒரு போகம் மட்டுமல்ல அடுத்த போகத்துக்கும் பயிர் செய்யக் கூடியதாக இருந்தது. உண்மையாகவே, குத்தகையாக பயிர் செய்யும் விவசாயி ஒரு படை எரு கட்டினால், அல்லது குழை தாட்டால் அடுத்த போகமும் தான் செய்ய வேண்டும் என கேட்பதுண்டு.

இது நேற்றைய நிலை. மேலே குறிப்பிட்டவற்றை தவிர ஏராளமான பல்வேறு செயற்பாடுகள் ஊடாக, நம் முன்னோர் உயிர்ப்புடன் மண்ணை பேணி வந்தனர்.

இன்று என்ன செய்கிறோம். அனேகமான விவசாயிகள் ஒரு லொறி வன்னி எருவை பறித்து பரவி பயிர் செய்கின்றனர். குழை தாழ்ப்பதோ, மாடுகளை கட்டுவதோ, ஆடுகளை பட்டி அடைப்பதோ மிகவும் குறைவு.

இவற்றுக்கு மேலாக முக்கிய மூன்று என்று சொல்லப்படும் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய மூன்றுவகை பசளைகளையும் கலந்து இடுவதில்லை. நைதரசன் பசளையை மட்டும் பெருமளவில் இடுகின்றனர்.

மண் பிடித்து வைத்திருக்கும் தன்மை குறைவாக இருப்பதனால், பயிர் எடுப்பது போக மீதி பசளை, குறுகிய காலத்தில், வடிந்தோடும் நீருடனும், ஊடுருவும் நீருடனும், நிலத்தடி நீருடனும், மண்ணுடனும், சுற்றாடலுடனும் பரவுகின்றது. இதனால் குடிநீரில் நைதரசன் விகிதம் கூடுகின்றது. இதைவிட பாவிக்கப்படும் பல்வேறு நாசினிகளும் சூழலை மாசடைய செய்கின்றன.

வன்னி எருவில் பெருமளவில் போசனை பெறுமானம் இல்லாவிட்டாலும் கூட, தற்காலிகமாக, மண் இழையமைப்பை மாற்றி ஒரு தரம் இலகுவாக பயிர் செய்ய உதவுகின்றது. நைதரசன் பசளையை பிடித்து வைத்திருக்க முடியாதபடியால், பசளை வீணாகின்றது. பசளை இட்ட உடன் பதிய வளர்ச்சி திடீரென கூடி பல்வேறு பீடைகளையும் வரவழைப்பதனால் பீடை கொல்லிகள் பாவிக்காமல் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதற்காக சேதன பசளை பாவனை கூட்டெரு பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது.

நாளை என்ன செய்யப் போகிறோம். நாளை கம இரசாயனம் அற்ற விவசாயம் தேவையாக உள்ளது. இதற்காக சேதன பசளை பாவனை என்ற மந்திரம் உச்சரிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, கூட்டெரு பாவனை தூண்டப்படுகின்றது.

இவற்றுக்கு மேலாக மண்புழு உரம் அசோலா என்பவை பற்றியும் கதைக்கப்படுகின்றது.

இவற்றை பெருமளவில் செய்யும் நிலை உருவாக்கப்படவில்லை. இவை விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய நிலை உருவாகவில்லை. இவற்றை பயன்படுத்தி விளைச்சலை பெருக்கலாம் என்ற நம்பகத் தன்மை உருவாக்கப்படவில்லை.

கடந்த நெருக்கடி காலத்தில் இயற்கையான பசளை ஒன்று போராளிகளால் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இது பெருமளவில் விவசாயிகளுக்கு கிடைக்க வழிசெய்யப்பட்டது. வயலில் செய்து காட்டல் மூலம் அதை மட்டும் பயன்படுத்தி விளைச்சல் பெறமுடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. பீடைகளை கட்டுப்படுத்த ரைக்கோ கிமோ என்ற முட்டை ஒட்டுண்ணி வழங்கப்பட்டது.

கம இரசாயனங்களுக்கான மாற்றீடுகளை விவசாயிகளுக்கு போதியளவு கிடைக்க செய்ய வேண்டும். அவற்றின் நம்பகத்தன்மை செயல்முறை மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளால் என்ன செய்யமுடியும்.

இன்று திண்ம கழிவகற்றல் ஒரு பிரச்சனையாக உள்ளது. திண்ம கழிவை தரம் பிரித்து சேதன பொருட்களை வேறாக்கி (பொலித்தீன், உலோகம், கல், பீங்கான் தவிர்ந்த) பயன்படுத்தி முன்னோடியாக, ஒரு சேதன பசளையை செய்து விநியோகிக்க முடியுமானால் தொடக்க புள்ளியாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூனைப் பதிகம்

ஆழ இறங்கிச் செல்கின்றேன்
காலங்கடந்து வந்து சேர்ந்த புத்தகங்களுக்குள்.
மொழியே ஒரு சிலந்தியாகி
மூளையில் வலை பின்னுகிறது.
எழுத்தும் சொல்லும் பொருளுமென
விரியும் அதிகாரங்களில்
மனனம் செய்யவியலா வார்த்தைகள் தொங்குகின்றன.
அதி புனைவுகளின் கதைகளில்
பெரும் படைசூழ உலாப்போகும்
அரசர்களின் பின்னே என்னால் தொடரமுடியவில்லை.
காதலும் காமமும் நிரம்பிய
கவிதைகள் யாவிலும் அருவமாய் ஊர்கின்றன
ஆயிரமாயிரம் பொய்த்தேள்கள்.
விடுபடலாம்
ஒரு வார்த்தையை விடவும் சிறியது
பெருங்கடல்.
பெருங்கடலை விடவும் சிறியது
பெருவெளி.
இதற்கு மேல் எதுவுமில்லை.
ஊர்கின்றேன்
ஊர்ந்து ஊர்ந்து
உள்ளொளி பெருக்குகின்றேன்.
உள்ளொளி பெருக்கி
யாவுமற்று வீழ்கின்றேன் பாற்கடலில்
ஒரு பூனையாய்.

**சித்தாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ல. குமணன்

# பொருண்மியத்தின் சிதைவு

## "பனையை" முன்வைத்து

*Borrassus flabellifer* என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட பனை மரமானது 'கற்பகதரு' என அழைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. 'தாலம்' என்பது பனைக்கு வழங்கப் படும் தமிழ்ப் பெயராகும். பனை ஓலையால் கழுத்தில் பெண்களுக்கு அணிவிக்கப்படும் மங்கலநாண் ஆக விளங்கும் 'தாலி' என்ற சொல் 'தாலம்' என்பதில் இருந்து உருவாகியதாகக் கருதப்படுகிறது. இதில் இருந்து பனை மரமானது தமிழ் மக்களின் வாழ்வியலுடன் நெருங்கிய சம்பந்தம் உடையது என்பது உணரப்படுகிறது. வடக்கு மாகாண சபையின் இலச்சனையில் பனைமரம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

பிரபல வரலாற்று நூலாகிய 'கல்கி' எழுதிய 'பொன்னியின் செல்வன்' இல் குறிப்பிடப்படும் மன்னர்களான 'பழுவேட் டையர்' என்போரின் கொடியிலும் பனைமரமே காணப்பட்டதாக விபரிக்கப்பட்டுள்ளது. ஆகவே பண்டைய காலத்திலும் பனை மரம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மரமாக விளங்கியுள்ளது. பனை மரத்தின் தாயகமாக இந்தியா கருதப்படினும் ஆபிரிக்காவினைச் சேர்ந்த *Borrassus acthiopum* என்ற மரத்துடன் நெருங்கிய சம்பந்தம் உடையதாகக் கருதப்படுகிறது. இம் மரத்தின் பழங்கள் பனம்பழத்தைப் போல இருப்பினும் செம்மஞ்சள் நிறமுடையவை யாகக் காணப்படும் பனைமரமானது ஆங்கிலத்தில் *'Palm fruit tree'* என்றும் *'Palmyrah'* என்றும் *'Toddy Palm'* என்றும் *'Ice Apple Tree'* என்றும் குறிப்பிடப்படுகிறது.

பனை மரமானது அரக்கேசியா குடும்பத்தைச் சேர்ந்த மரமாகும். இது இந்தியாவில் 80 மில்லியன் மரங்களும் இலங்கையில் 11 மில்லியன் மரங்களும் இந்தோனேசியாவில் 10 மில்லியன் மரங்களும் தாய்லாந்தில் 2 மில்லியன் மரங்களும் காணப்படுகின்றன. எண்ணிக்கையின் அடிப்படையில் உலகிலே இரண்டாவது இடத்தை இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு இருப்பினும் இலங்கையில் இதனுடைய முக்கியத்துவம் உணரப்பட் டுள்ளதா? என்பது கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். ஏனெனில இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக இது வரையில் 4.5 மில்லியன் மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. பனைமர அழிப்பு என்பது தேசிய குற்றம் *(National Crime)* என்று 'ரந்திம ஏட்டிகல' என்ற ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஒரு பனை மரத்தின் ஆயுள் காலம் 120 வருடங்கள் ஆகும். ஒரு பனை மரமானது 20 வருடங்களின் பின்பே பலனைத் தர ஆரம்பிக்கும். சராசரியாக ஒரு மரமானது 100 வருடங்களுக்கு மேலாக பலன்களை வழங்கக்கூடியது. பனை மரத்தின் எல்லாப் பாகங்களும் உபயோகிக்கப்படக் கூடியவை. வருடத்தின் முழு நேரமும் பயன்களை வழங்கக் கூடியது. அதேபோல் விட்டுப் போன பின்பும் பயன் தரக்கூடியது. எனவேதான் பனை மரமானது 'கற்பகதரு' என்று சிறப்பிக்கப்படுகிறது. பனை மரத்தில் இருந்து 880 இற்கும் மேற்பட்ட பயன்களைப் பெற முடியும் என்று அறியப்பட்டுள்ளது. இப் பயன்கள் பனஞ்சாறு, பனங்களி, கிழங்கு, ஓலை, தும்பு, மரம் என்பவற்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியும்.

தெற்கு மக்களுக்கு தென்னை எவ்வாறு பயன் தரும் வளமாக உள்ளதோ அவ்வாறே வடக்கு மக்களுக்கு பனையும் விளங்குகிறது. தென்னையும் பனையும் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் பல பயன்களை வழங்கக்கூடியவை. தென்னை மரம் வளர்ப்போருக்கு பல்வேறு வரப்பிரசாதங்களை அரசு வழங்கி வருகின்றது. ஆனால் பனை மரம் வளர்ப்போர் என்று எவரும் குறிப்பிடக் கூடியவர்கள் இல்லை. தெங்குப்பயிரானது ஏற்றுமதிப் பயிராக கணிக்கப்படுகிறது. இதற்கு தெங்கு அபிவிருத்திச் சட்டம் எனும் சிறப்புச் சட்டத்தின் மூலம் ஊக்குவிப்புக்கள் வழங்கப் படுகின்றன. பனையானது தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே உள்ளது. யாழ்ப்பாணம் 3.5 மில்லியன், கிளிநொச்சி 3.5 மில்லியன், மன்னார் 3 மில்லியன், முல்லைத்தீவு 500000, திருகோணமலை 210000, மட்டக்களப்பு 200000, அம்பாறை 40000, வவுனியா 8000 என்ற எண்ணிக்கையில் தமிழர் பிரதேசங்களுக்கே யுரிய ஒரு மரமாக பனை காணப்படுகிறது. இதனால் தானே பனை மரத்தை வடக்கு மாகாண சபையின் இலச்சனையாக தெரிவு செய்தார்களா தெரியவில்லை. தமிழர் பிரதேசத்தை விட இலங்கையில் புத்தளம் 120000 மரங்களும், அனுராதபுரம் 40000 மரங்களும், அம்பாந்தோட்டையில் 2000 மரங்களும் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாயின் வவுனியா மாவட்டத்தில் பனை மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட முடியாதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் மனதில் ஏனோ எழுகின்றது. அம்பாந் தோட்டையில் விரவிய எனும் இடத்தில் மாதிரிப் பண்ணை ஒன்று பாரிய நிதித்திட்டத்தில் அரசினால் பராமரிக் கப்படுகின்றது. இதனைவிட செறிவாகக் காணப்படும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி அல்லது மன்னார் மாவட்டத்தில் குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறலாம். குடத்தனை, நெடுந்தீவு, மாமுனை, புளியங்குளம் ஆகிய பகுதிகளில் மாதிரிப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டாலும் அவை வெற்றியளிப்பது கடினமாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது. மாதிரிப் பனந்தோட்டம் என்பது பனை மரத்துடன் ஊடு பயிராக மரமுந்திரி, தென்னை, சவுக்கு, தேசி, தோடை, வாழை, கொய்யா, தேக்கு போன்ற மரங்களை வளர்ப்பதன் மூலம் பனந்தோட்டக் காணிகளில் இருந்து பெருமளவு பயன்களைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறையாகும். இவற்றை நவீன முறையில் செயற்படுத்துவதற்கு தனியார் துறையின் பங்களிப்பும் மிகுந்த அவசியம். தனியே அரச துறையான பனை அபிவிருத்திச் சபையினால் *(Palmyrah Development Board)* மாத்திரம் முடியாது.

பனையானது தெங்கு அபிவிருத்திச் சட்டம் (இல. 24, 1975) இன் மூலமே அரசின் கவனிப்பைப் பெறுகிறது. இது 1978ஆம் ஆண்டின் ஆவணி 18ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தினால் ஆளுகைக்கு உட்படுத்தப்பட் டுள்ளது. பனை அபிவிருத்திச் சபையானது 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பனை வளத்தினை மேம்படுத்தவும் வினைதிறனாக பயன்படுத்தவும் வேண்டி செயற்பட்டு வரும் ஒரு அரச நிறுவனமாகும். ஆரம்ப காலங்களில் பனை அபிவிருத்திச் சபையானது பெருந் தோட்ட அமைச்சின் கீழ் இருந்து பின்னர் விவசாய அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சு, வர்த்தக வாணிப அமைச்சு என்று பல அமைச்சுக்களினால் பொறுப்பேற்கப்பட்டு தற்போது பலத்த இழுபறியின் பின்னர் மீள் குடியேற்ற, புனர்வாழ்வு, இந்து கலாசார மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது. இவ்வாறு பல அரசியல் இழுபறிகளின் விளைவாக பனை அபிவிருத்திச் சபைக்கு உரிய தலைமைத்துவம் ஒரு சீரானதாக இருப்பதில்லையாதலால் பனைவளம் தொடர்பில் சிறந்த செயற்பாட்டை முன்னெடுப்பது இலகுவானதொன்றல்ல. இதற்கு சிறந்த தீர்வாக பனை அபிவிருத்திச் சபையை வடக்கு மாகாண சபை கையேற்க வேண்டும். அதனை வடக்கு மாகாண சபைக்கு உட்பட்டு ஒரு அதிகாரசபையாக அல்லது திணைக்களமாக மாற்றி வடக்கு மாகாண ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளின் பிரதான வளமாக பனையை அபிவிருத்தி செய்யவேண்டும். வெறுமனே பனையை இலச்சினையாகக் கொண்டு அதனைப் பற்றிய அக்கறையின்றி இருப்பதனை விட எமக்குரிய வளம் ஒன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் எமது மாகாணசபை செயற்பட வேண்டும்.

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் பனை ஆராய்ச்சி நிறுவனம் *(Palmyrah Research Institute)* கைதடியில் அமைந்துள்ளது. இது 1980 இல் உருவாக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை அலகுகளாக கற்பகம் விற்பனை நிலையங்கள் அமைந் துள்ளன. இவற்றை விட வடிசாலைகள், கள்ளுத் தவறணைகள், பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் உள்ளன.


புதிய முயற்சியாக பனை அபிவிருத்திச் சபையானது பனை வளர்ப்போர் சங்கங்களை ஆரம்பிக்க முயற்சி செய்து வருகிறது. 10 பனை மரங்களையுடைய 4 பரப்பு காணிக்கு மேல் வைத்திருப்போர் இவற்றின் உறுப்பினராக முடியும். இவற்றின் மூலம் பனைசார் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். இவ் அமைப்புக்கள் யாவற்றையும் வடக்கு மாகாண சபையின் கீழ் ஒருங்கிணைத்து வீழ்ச்சியடைந் துள்ள எமது பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் முயற்சிகளை வடக்கு மாகாண சபை மேற்கொள்ள வேண்டும். மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பொருளாதாரப் புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுவது குறிப்பிடத் தக்கது. மொத்தத் தேசிய உற்பத்தியில் வட மாகாணம் 9 ஆவது இடத்திலேயே உள்ளது.

பனை மரத்தில் பிரதான தொழிலாகிய கள் இறக்கும் தொழிலானது இன்று அருகிச் செல்லும் நிலையே காணப்படுகின்றது. புதிய தலைமுறையினரின் பங்களிப்பு மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மன்னார் மாவட்டம் பனைமரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் உள்ள ஒரு மாவட்டம். அங்கு கள் இறக்குவதற்கு ஆட்கள் இல்லாத நிலை காணப்படுகிறது என்று வேதனையுடன் தெரிவித்துள்ளார். மேலும் யுத்தத்தின் விளைவாக பாரம்பரிய பனைசார் தொழிலானது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பனை அபிவிருத்திச் சபையானது கள் இறக்குதல் உட்பட தொழில் ஊக்குவிக்க இளைய தலைமுறையினரிடையே மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகிறது என்று குறிப்பிட்டு இருந்தார். இது ஒரு 'இறந்து கொண்டிருக்கும் தொழிலாக' கருதப்பட்டு வருகின்ற நிலை வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படுகிறது. இதற்கு ஒரு தீர்வாக வடக்கு மாகாணசபை விளங்கமுடியும். பனை அபிவிருத்தி அதிகார சபையானது வடக்கு மாகாணசபையினால் பொறுப்பேற்கப்பட்டு உருவாக்கப்படுமாயின் பெருமளவு ஆளணி வெற்றிடங்களை உருவாக்கி இளைய தலைமுறைக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும்.





தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் *(Coconut Development Officer)* போன்று பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் *(Palmyrah Development Officer)* பதவியணியை உருவாக்குவதன் மூலம் பனை வளத்தை மேம்படுத்தலாம். தென்னை மரம் வளர்ப்பதற்கு 'கப்றுக' சங்கம், 'கப்றுக' மானிய திட்டம் இருப்பது போல பனை வளப்போருக்கும் வழங்கப்பட வேண்டும். 5 வருடங்களின் பயன்தரும் தென்னைக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் அதனைவிட கூடிய பயனைத் தரக்கூடிய பனையானது 20 வருடங்களின் பின்பே பயனை வழங்குவதால் கூடியளவு கவனம் வழங்கப் பட்டாலேயே உருவாக்கப்பட முடியும்.

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கையில் 12.5 மில்லியன் மரங்கள் இருந்துள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. பனைதறிப்பதை ஒரு தேசியக் குற்றமாக பிரகடனப்படுத்தப்பட்டு விசேட கவனம் வழங்கி மீண்டும் புதிய மரங்களை உருவாக்குதல் அத்தியாவசிய அவசர தேவையாகும்.

பனைசார் தொழில்கள் வடக்கு மக்களுக்கு மிகவும் தேவையான வாழ்வாதாரத்தை வழங்கக்கூடிய சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையாக (SME) அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இதற்கு வேண்டிய வங்கிக்கடன்கள் ஏனைய அனுசரணைகள் மற்றைய துறைகளுக்கு வழங்கப்படுவதுபோல வழங்கப்படவேண்டும். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கள் மற்றும் ஏனைய கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வதில் வரும் வருமானத்தினையே தமது பிரதான வருவாயாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*Feb - June* வரையான காலப்பகுதியில் பனை மரத்தில் இருந்து கள் இறக்கப்படும் காலமாக விளங்குகிறது. இக் காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மேலதிக உற்பத்தியானது வட பகுதியில் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது என்பது தொடர்பில் உரிய முகாமைத்துவம் பின்பற்றப்படுகிறதா? என்பது கேள்விக் குரியது. ஏனெனில் பனங்கள் இறக்கும் சீவல் தொழிலாளிகளிடம் இருந்து கள்ளினை கொள்வனவு செய்வதில் பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுகின்றன. இவற்றுக்குச் சொந்தமான கள்ளுத் தவறணைகளின் ஊடாக விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டவை தவிர ஏனையவை போத்தலில் அடைத்து பின்னர் விற்பனை செய்வதற்காகவென வடிசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்காக சேகரிக்கப்படும். வடிசாலைகளில் பிரதானமாக திக்கம் வடிசாலையைக் குறிப்பிடலாம். இவ் வடிசாலையானது பனை அபிவிருத்திச் சபைக்கும் கூட்டுறவுத் திணைக்களத்துக்கும் இடையில் உள்ள நிர்வாக இழுபறியின் விளைவாக சீராக இயக்கப்படுவதில்லை. ஏற்கனவே சேகரிக்கப்பட்ட மேலதிக கள்ளானது வடிப்பதற்கு உரிய வடிசாலைகள் போதுமான அளவு இன்மையினால் வீணாக நிலத்தில் கொட்டப்படுவதாக பத்திரிகைகளின் வாயிலாகவும் சீவல் தொழிலாளர்களின் தகவல்கள் மூலமாகவும் அறியமுடிகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளை பதப்படுத்திப் போத்தலில் அடைப்பதற்கான வரியானது அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டமையும் இத்துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலேயே வறுமை மிகுந்த மாவட்டங்களாக மன்னாரும் முல்லைத்தீவும் இனம் காணப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டுக்குக் கீழ் 40% மான மக்கள் இங்கு வசிப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் பனை வளமோ கேட்பார் அற்றுக் கிடக்கிறது. இங்குள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு பனை அபிவிருத்தி சபையின் மூலம் வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும். பனை அபிவிருத்திச் சபையை பனை அபிவிருத்தி அதிகார சபையாக அல்லது வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றுவதன் மூலமே இது சாத்தியப்படும். ஏனெனில் பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர் ஆளணியானது வடக்கு மாகாணத்தவர்களை மையப்படுத்திய பனை மரத்துடன் ஊடாடியவர்களை ஊழியர்களாக உள்வாங்கும் இடத்திலேயே சிறப்பாக செயற்பட முடியும். அதை விடுத்து பனை மரத்தையோ அல்லது அதனுடைய பாரம்பரிய பிரதேசங்களையோ தொடர்புடாது பெரும்பான்மை உத்தியோகத்தர்கள் பனை அபிவிருத்திச் சபையில் பதவி வகிக்கும்போது அவர்களுடைய ஆற்றல் மற்றும் அக்கறைகள் சற்று மாறுபட்டதாக இருக்கும்.

சீவல் தொழிலாளிகள் பாடுபட்டு சேகரிக்கும் கள்ளானது யாரோ ஒரு சிலருடைய வினைத்திறன் இன்மை காரணமாக வீணாக நிலத்தில் ஊற்றப்படுவது வேதனைக்குரியது. இதற்கு பனை அபிவிருத்திச் சபையானது உரிய சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்தைப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இலங்கையில் குடிவகைகள் என்ற ரீதியில் சாராயம், பியர், விஸ்கி, பிரண்டி போன்ற அனுமதிக்கப்பட்ட குடிவகைகளுடன் சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்படும் கசிப்பும் அமோகமாக விற்பனையாகிறது. அப்படியான 'குடிமக்களின்' ஏகோபித்த ஆதரவு இருக்கும் ஒரு நிலையில் ஒரு போத்தல் கள் ஆனது 70/= என்ற விலையில் விற்கப்பட முடியாமல் நிலத்தில் ஊற்றப்படுவது கண்டனத்துக்கு உரியது.

இத்தகைய இறக்குமதியாகும் குடி வகைகள் மற்றும் ஆரோக்கியம் அற்ற கசிப்பு போன்றவற்றுடன் ஒப்பிடும்போது பனம் கள்ளானது மருத்துவ குணங்களைக் கொண்ட இயற்கையான பானமாகும். இச் சிறப்புக்களை எடுத்துக்கூறி உரிய முறையில் பதப்படுத்தப் பட்டு பனை அதிகார சபையினால் சந்தைப் படுத்தப்படுமானால் ஏற்றுமதிகூட செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது. இங்குள்ள மதுபான நிறுவனங்களில் உள்ள ஏனைய மது வகைகளுள் ஒரு போட்டியாளராக பதப்படுத்தப்பட்ட கள் விற்பனைப் போட்டியாளராக அறிமுகப் படுத்தப்பட வேண்டும். ஏனைய இறக்குமதி மது வகைகளின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணி வெளியேறும் நிலையில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்போம் என்று உதட்டளவில் வீரம் பேசாமல் உண்மையாகவே செயற்பட்டால் பெருமளவு இலாபமீட்டும் தொழிற்றுறையாக பனங் கைத்தொழிற் றுறையை மாற்றமுடியும். இதனைத் தனியே அரச நிறுவனம் ஒன்றின் ஊடாக மாத்திரம் செயற்படுத்தலாம் என்று எண்ணுவது உடனடியாகச் சாத்தியப்படாத ஒரு சூழலை உருவாக்கும். ஆகவே தனியார் துறையின் பங்களிப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். அந்நிய முதலீடுகள் வரவேற்கப்பட வேண்டும். இவற்றில் துறைபோன நம்மவரின் உதவிகள் கோரப்படவேண்டும்.

வீணாகும் கள்ளில் இருந்து புதிய உற்பத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 'Bio Diesel' என்று உயிர் எரிபொருள் தயாரிப்பை மேற்கொள்ள முடியும். இவற்றை விட மதுசாரம் போன்ற பல்வேறு பொருட்களைத் தயாரிக்கலாம். இது தொடர்பில் 'பனை ஆராய்ச்சி நிறுவனம்' PRI புதிய முயற்சிகளை முன்னெடுத்தல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கு உரிய அனுமதிப் பத்திரக் கட்டணமான 10 இலட்சம் ரூபாவினை வருடம் ஒன்றுக்கு வரியாக மதுவரித் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது. இது பாரிய நெருக்கடியை உருவாக்கி அவர்கள் கள் அடைப்பதை நிறுத்தக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. அண்மையில் அச்சுவேலி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்துக்கான போத்தலில் கள் அடைக்கும் கட்டணத்தினை மதுவரித் திணைக்களமே செலுத்தி அனுமதியை வழங்கியுள்ளது. இதனை வட மாகாணசபை ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படுத்தி கொடுக்க முன்வரவேண்டும். ஏனெனில் குடி வகைக்கு வரி விலக்கு அல்லது வரி விடுதலை வழங்கப்பட மாட்டாது. ஆகவே உற்பத்தி அதிகளவில் இடம்பெறும்போது அதனை ஏனைய காலங்களில் பயன்படுத்த வசதியாகவும் ஏற்றுமதி செய்ய முடியுமாதலினாலும் இதன் மூலம் பெருமளவு வருவாயைப் பெறமுடியுமாத லினாலும் மதுப் பிரியர்களின் ஏகோபித்த ஆதரவு காணப்படுவதனாலும் மதுவுக்கான கேள்வி ஒருபோதும் குறையமாட்டாது என்பதினாலும், பனங்கள்ளினை பதப்படுத்தி சந்தைப்படுத்தாவிடின் ஏனைய மதுப்பாவனை தாராளமாக இடம்பெறமுடியும் என்பதினாலும் அத்தகைய மதுக்களினை விட பனங்கள் மருத்துவ குணங்கள் நிறைந்தது என்பதினாலும் இதற்குரிய முன்னெடுப்புக்கள் மேள்கொள்ளப் படுவது அவசியம். இதற்கு ஒன்றிணைந்த நடவடிக்கையே தேவைப்படுகிறது.

பனங் கைப்பணித்துறை *(Palmyrah Industry)* எதிர்நோக்கும் ஒரு பிரச்சனையாக சாதி அமைப்பு முறை காணப்படுகிறது. கள் அருந்துவதில் எவ்வித பாகுபாடும் இல்லாத விடத்தும் கள் மற்றும் ஏனைய தொழில்கள் சார்ந்த விடயங்களில் சாதியச் சிந்தனை ஒரு தடைக்கல்லாக விளங்குகிறது. இதனை பனை அபிவிருத்தித் திணைக்களம் ஒன்றினை உருவாக்கி அதன்மூலம் பெருமளவு அரச வேலை வாய்ப்புக்களை வழங்கி ஒரு முறைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போது இல்லாமல் செய்யமுடியும். இதற்கு ஒரு நீண்ட கால முறையான வேலைத்திட்டம் அவசியமான தாகும்.

பெரிய பிரச்சனையாக இருக்கின்ற, இருக்கப்போகின்ற ஒரு விடயமாக பனை அழிப்பு காணப்படுகின்றது. பனை மரங்களை தறிப்பதற்கு உரிய சிபாரிசு பனை அபிவிருத்திச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உத்தியோகத்தரின் ஊடாக பிரதேச செயலகங்களினால் வழங்கப்படுகிறது. பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர் ஒருவரே பல பிரதேசங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட வேண்டியுள்ளதால் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் பல சமயங்களில் அனுமதி எதுவும் பெறப்படாமலேயே பனைகள் தறிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இவ்வாறான சவாலான விடயங்களினை முகம் கொடுப்பதற்கு பிரதேச ரீதியாக பனை வளர்ப்போர் சங்கங்கள் மூலம் உரிய சிபாரிசினைப் பெற வழிவகை மேற்கொள்ள முடியும். முன்னைய காலங்களில் 30 அடிக்கும் கூடிய பனைகளை மாத்திரம் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக ஒரு ஞாபகம். அது போன்று ஆண் பனைகளையும் தறிக்க முடியும். இதனை விடவும் எமது பயன்பாட்டுக்குள் வராத நிலையில் பெருமளவு பனை மரங்கள் பட்டுப் போன நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது. இத்தகைய பட்ட மரங்களினை பனை வளர்ப்போர் சங்கங்களின் ஊடாகக் கொள்வனவு செய்து உரிய மரங்கள், சிலாகைகள், தீராந்திகள், வளைகள் போன்ற வற்றை சீவி விற்பனை செய்ய முடியும். இத்தகைய பட்ட மரங்கள் பெருமளவுக்கு பயன்படுத்தப்படாமலேயே சிதைவடைந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. நிலையாதார அபிவிருத்தி (*Sustainable development*) என்பது எமது எதிர்கால சந்ததிக்கும் வளங்களைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தினை வழங்கும் வகையில் உள்ள வளங்களை அழிவடைந்து விடாமல் பேணுகின்ற சமயம் தற்காலத்தில் தேவைகளுக்கும் வினைத்திறனான வகையில் வளங்களை பயன்படுத்துதல் ஆகும். அந்த வகையில் இயற்கையாகவே பட்டுப்போகின்ற பனைமரங்கள் இன்னமும் முறையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது எமது எதிர்காலச் சந்ததிக்குச் செய்கின்ற பாரிய ஒரு அநீதியாகும். இதனைத் தவிர்க்கும் வகையில் பனை மரங்கள் பட்டுப் போகுமானால் அதனை குறிப்பிட்ட மரத்தின் உரிமையாளர் பயன் படுத்தாவிடின் பனை வளர்ப்போர் சங்கங்களின் ஊடாக கொள்வனவு செய்து பயன் படுத்த முடியும். தற்போது காணப்படுகின்ற பனை மரக்காலைகளில் விற்பனைக்கு உள்ள மரங்கள் தறிக்கப்பட்டுள்ளமைக்கு எவ்வாறு அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதை ஆராய முற்பட்டால் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வரும்.

ஆகவே இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த வழியாக பனை வளர்ப்போர் சங்கங்கள் ஊடாக பனை மரக்காலைகளை ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய முறைப்படுத்தலானது சட்ட ரீதியாக, திணைக்கள ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, தந்திரோபாய ரீதியாக உரிய அனுசரணைகளுடன் முறைப் படுத்தப்படும் இடத்து எமது வளத்தினை எதிர்கால சந்ததியும் பயன்படுத்தும் வகையில் பேணிப் பாதுகாக்க முடியும்.

வனவளத் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிடும்போது 'ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்கள் தேக்கு, சமண்டலை, மகோகனி போன்ற விரைவாக வளர்ச்சியடையக்கூடிய மரங்களைப் பயன்படுத்து நிலையில் யாழ்ப்பாணத்தவர்கள் மட்டும் இன்னமும் பனை, வேம்பு, முதிரை, பாலை போன்ற நீண்ட காலங்களை முதிர்ச்சியடைய எடுக்கும் மரங்களினைப் பயன்படுத்துகிறார்கள்' என்று சுட்டிக் காட்டினார். ஆகவே பனை மரத்துக்கு உரிய மாற்றுத் தெரிவுகளையும் நாம் இனங்கண்டு பயன்படுத்த வேண்டும். பெரும்பாலும் வீட்டுக் கூரைகள் எமது பகுதிகளில் பனை மரத்தினாலேயே அமைக்கப்படுவது வழமை. ஏனெனில் அவை நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியவை என்பதினால் பயன்படுத்தப்படுகின்றன. எப்படியெனினும் இவற்றினைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பாதிப்புக்கள் கவனத்தில் கொள்ளப் படுவதில்லை. காலம் கடந்த வீடுகள் இடிக்கப் படும் போது பெறப்படும் பனை மரங்கள், தீராந்திகள், வளைகள் போன்றவற்றினை மீண்டும் பயன்படுத்தி வீடு கட்டமுடியும். இது மிகவும் விளைதிறன் வாய்ந்த ஒரு செயற் பாடாகும்.

பனை மரங்கள் இலகுவில் மீள் பயன் பாட்டுக்கு (*recycle*) ஏற்றதாக மாற்றியமைக்கக் கூடியவை. எமது பிரதேசங்களில் உள்ள உலோகப் பொருட்கள் மீள் சுழற்சி, மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படும் அளவிற்கு கூட பனை மரங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. இம் மரங்களை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தும்போது புதிய மரங்கள் தறிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். 'புதிய வீட்டுக்கு பழைய மரங்கள் கூடாது' என்ற மூட நம்பிக்கையும் இதற்கு தடையாக உள்ளது. சாத்திரங்களில் எவ்விதத்திலும் அவ்வாறு செய்யக்கூடாது என்று குறிப்பிடப்படுவதாகத் தெரியவில்லை: எமது சிந்தனைப் போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய சிந்தனையில் இருந்து விடுபடுமாயின் பனை மரங்களை அழிவில் இருந்து பாதுகாக்கலாம்.

பனை மரங்களினை ஒரு தொழிற்துறை யாக வளர்த்தெடுப்பதற்கு தனியார் மூலதனம் இதுவரையில் ஏற்படுத்தப்படாமல் உள்ள நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். இதற்கு உரிய பிரச்சாரங்கள் (*Propaya nda*) வெளிநாடு வாழ் எம்மவர்களிடம் மேற்கொள்ளப்பட்டு உரிய தனியார் துறைப் பங்களிப்பு (*Private Partnership*) பெற்றுக் கொள்ள வேண்டும். பெருமளவு மூலதனத்தை கொண்டுள்ள நம் நாட்டவர் எதில் முதலீடு செய்யலாம் என்ற வகையில் ஆராய்ச்சி செய்து கொண்டு எதிர்பார்ப்புடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர்களை உரிய வகையில் பயன்படுத்தினால் எமக்கு வேண்டிய மூலதனமானது இலகுவில் பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

பனைசார் தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சனையான உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைப்படுத்தல் (*Marketing*) காணப்படு கின்றது. பிரதானமான நிறுவனமாக விளங்கும் பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்துதல் நடவடிக்கைகள் பெரும்பான்மை சகோதரரினாலேயே முன்னெடுக்கப்பட்டது. பனைக்கும் அவர்களுக்குமான ஈர்ப்பு குறைவான அளவில் காணப்படுவதாலோ என்னவோ சந்தைப்படுத்தல் வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கவில்லை போலும்.

மேலை நாடுகளில் எம்மவர்களினால் பல கடைத் தொகுதிகள், விற்பனை அங்காடிகள் வெற்றிகரமாக நடாத்தப்படுவது குறிப்பிடத் தக்கது. இவற்றுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்தே ஏற்றுமதியாகிறது. இங்குள்ள ஏற்றுமதியாளர் மூலம் பனம் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் மேலைத் தேய நாடுகளில் உள்ள எம் நாட்டவரின் விநியோக வலையமைப்புக்கள் மூலம் புலம்பெயர்ந்த எம் நாட்டவர் மட்டும் அல்லாது வெளிநாட்டவர் மத்தியிலும் பனம் பொருட்களை விற்பனை செய்யமுடியும்.

சட்டநிலையானது பனை, தென்னை இரண்டுக்கும் பொதுவான தெங்கு அபிவிருத்திச் சபை சட்ட மூலத்தினால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுவதால் பனை வளத்துக்கு உரிய தனியான சட்ட மூலத்தை உருவாக்கி பாராளுமன்றில் எதிர்க்கட்சியாக வீற்றிருக்கும் இச் சமயத்திலாவது உருவாக்க வேண்டும். இதனை பெரும்பான்மை சகோதரர்களின் சட்ட விற்பன்னர்கள் செய்து தர வேண்டும் என்று வாளாவிருப்பது அறிவீனம்.

இக் கட்டுரையானது பனை சார்ந்த சில பத்திரிகை செய்திகளின் பிரதிபலிப்பாக எழுதப்பட்டுள்ளமையால் முழுமையான ஒரு தொகுப்பாக அமையாமல் இருந்தாலும் எமது வளமான பனை தொடர்பில் சிறந்த ஒரு எதிர்காலம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய முற்பட்டுள்ளது. பனை பற்றிய 'தால விலாசம்' என்ற நூலான பனையின் சிறப்புக்களை குறிப்பிடும் ஒரு நூலாகும். சகோதர மொழியில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி ஆய்வு அபிவிருத்திக்கு இணையாக எம்மவர்களாலும் மேற்கொள்ளப்படவேண்டும். இது தொடர்பான நிதியீட்டங்களை மாகாணஅரசு, தனியார், மத்திய அரச நிறுவனமான பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இடம்பெற வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பவர் கைகளில் கைவாள் எதற்கு?



மப்பும் மந்தாரமுமாய்க்
காட்சி தருகின்றான்
ஒப்பீட்டளவில்
அவனும் "பள்ளி மாணவன்"

கல்லூரியில் நிற்க வேண்டியவன்
நிற்கும் இடம் மாறி
நிற்கின்றான் நிறைவெறியில்.

காதல் பிரியர்கள்
அருகி விட்ட மாத்திரத்தில்
மதுப் பிரியர்கள்
பெருகி விட்டனரோ....?

என்னவோ
மதுபானங்களுக்கே
இப்போ மவுசு.
குளிர்பானங்கள் எல்லாம்
கிடப்பில்.

'பயங்கரவாதிகள்' என்று கூறி
ஒரு காலத்தையே சபித்தீர்கள்
ஓ....
அவர்கள் காலத்தில் கூட
இப்படியோர் "பயங்கரம்"
நிகழ்ந்ததே இல்லையே

இன்று
"பள்ளிச் சீருடை" மாணவன்
வாளுடன் நிற்கிறான்.


வெள்ளை வேட்டிக் காரர்களே
நீங்கள்
எங்கே நிற்கிறீர்கள்? ●

வேலணையூர் சுரேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L கலை
# வர்த்தகம்
# தொழில்நுட்பம்



**தனித்துவமான நிறுவனம்**

# DCM

வேம்படி மகளீர் கல்லூரி அருகில்,
யாழ்ப்பாணம்

சிவன் கோவில் அருகில்,
சுன்னாகம்.




*Awards*
*T-shirt*
*Key -Tag*
*Medal*
*Flag*
*Batch*
*Penholder*
*Mug*
*Name holder*
*Memento*
*&*
*All kind of Printing Works*

Special for Promotional Items

d'signarts
Specific Creaters

0772 241 772
dsignartssl@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்

20 ம் ஆண்டில்
கால் பதிக்கின்றது
1996-2016

## எலக்ரோனிக்ஸ் அன்ட் வோச் வேக்ஸ்



மணிக்கூட்டுத் தேவையின் தனிப்பட்ட இடம்
உங்களுக்குத் தேவையான
கைக்கடிகாரங்கள்
சுவர்மணிக்கூடுகள்
மேசைமணிக்கூடுகள்
கல்குலேட்டர்கள்
தரமானதாகவும் நியாய விலையில் வாங்கிடவும்,
நீண்டகால அனுபவமிக்க திருத்துனர்களைக் கொண்டு
உத்தரவாதத்துடன் இயக்கித்தருகிறோம்
தரமான பற்றறிகள், பட்டிகள், வோச்கிளாஸ் உத்தரவாதத்துடன்
பொருத்திடவும்
எலக்ரோனிக் பொருட்கள் வாங்கிடவும்
**நாடுங்கள்**
**20 வருட காலமாக இயங்கி வரும்**
**யாழ் எலக்ரோனிக்ஸ் அன்ட் வோச் வேக்ஸ்**
**தனக்கென தனி இடத்தையும் வாடிக்கையாளரையும் பெற்றுத் திகழ்கின்றது.**









**யாழ் எலக்ரோனிக்ஸ் அன்ட் வோச் வேக்ஸ்**

**இல 55,57 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். தொ.இல: 0776 136 007**

d'signarts 0772 241 772


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org